Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஆக.23—29,1998

வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 271

## குன்றுகளில் புலிகள்!

## அரசு கலக்கம்!!



## தொண்டாவின் கரணம்



## குடாநாட்டில் வெடித்த சமர்

## விஜய் சொன்னது உண்மையா?

# முரசம்

## தொடரும் மீறல்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழ்பேசும் மக்களின்
மனித உரிமைகள்
மீறப்படுவது என்பது
சர்வ சகஜமாகிவிட்டது!

மனித உரிமை தொடர்பாக
வாய்கிழியக் கத்துவோர்
மௌனம் அனுஷ்டிக்கின்றனர்!

சமீபத்தில் மன்னாரில்கூட
எட்டுத் தமிழர்கள்
சுட்டுக் கொல்லப்பட்டனர்!
அதில் ஒருவர்
கத்தியால் குத்தப்பட்டு
கோரமாகக் கொல்லப்பட்டிருந்தார்!

இராணுவக் கட்டுப்பாட்டுப்
பகுதியில்தான்
இக் கொலைகள்
நடந்தேறியிருந்தன!

திருமலையில்
தமிழ்க் குடும்பங்கள்
குடியிருந்த லிங்கநகரில்
பட்டப்பகலில் புகுந்து
குடியிருப்புக்களைத்
தீயிட்டு எரித்துள்ளனர்!

இராணுவ சோதனை அரணும்
கடும் சோதனையும்
உள்ள பகுதியில்தான்
இந்த அத்துமீறலும்
அரங்கேறியிருக்கிறது

மலையகத்திலும்
அப்பாவிகள் கைதாகும்
படலம் ஆரம்பமாகிவிட்டது!

ஒலிபெருக்கி
வயர் வைத்திருந்தவரும்
உள்ளே தள்ளப்பட்டார்!

கதிர்காமம்
சென்ற தமிழர்களும்
கைது செய்யப்பட்டுள்ளனர்!

தமிழர்கள் என்ற
ஒரே காரணத்தினால்
தீர ஆராயமலேயே
பத்திரிகையாளர்கள்
சந்தேக நபர்களாகின்றனர்!

எந்த ஆதாரமும்
தேவையில்லை;
தமிழர்களாக இருந்தால்
அதுபோதும்.
என்ற அணுகுமுறை
மேலோங்கி வருகிறது!

செம்மணி புதைகுழியை
தோண்டும் முடிவு
எடுக்க மட்டும்
எத்தனை தாமதம்?!

இந்தத் தாமதத்தை
சூரியகந்தையில் மட்டும்
காண்பிக்கவில்லையே?

அன்று ஜனாதிபதியாக
விஜயதுங்கா இருந்தும்கூட,
பிரதமர் சந்திரிக்காவே
அதிகாரத்தைப் பாவித்து
தோண்ட வைத்தாரே!

புதை குழிகளில்கூட
இனப்பாகுபாடு என்றால்,
இனப்பிரச்சனையை
யார் தீர்க்கப்போகிறார்கள்?

மனித உரிமைகளில்கூட
இன அபிமானம்
காண்பிக்கப்படுமானால்,
ஐக்கிய இலங்கை
கற்பனைக் கதையன்றோ?!

பேரினவாதம்
அழியவே இல்லை!
தோற்றத்தை
மாற்றிக் கொண்டிருக்கிறது,
அவ்வளவுதான்!

தமிழ்க் கட்சிகளுக்கு
மட்டும்
இன்றைய பேரினவாதம்
இனிப்பாக இருக்கிறது!

பத்திரிகைகளில் பெரிய
செய்தியாக இடம்பெறும்
சம்பவங்களை மட்டும்
கண்டிப்பதையும்,
மாண்புமிகு அம்மையாருக்கு
தெரிவித்ததாகக் கூறுவதையும்
ஒரு சம்பிரதாயம்போல
தமிழ்க் கட்சிகள்
அனுஷ்டித்து வருகின்றன!

பத்திரிகைகளில்
கொட்டை எழுத்துக்களில்
வராத எத்தனையோ
மனித உரிமை மீறல்கள்
நடந்துகொண்டு இருக்கின்றன!

அதில் ஒன்றுதான்
மன்னார் படுகொலைகள்!
இவை செய்தியாக வந்தபோதும்
பெரியளவில் வரவில்லை!
வந்திருந்தால்
ஃபக்ஸ்சுகளும், அறிக்கைகளும்
பறந்திருக்கும்!

மனித உரிமைகளின்
பெயரால் இங்கு
செயற்படுபவர்களும்
பேரினவாதத்தின்
நலன் சார்ந்து நிற்கின்றனர்!

தமிழர்கள் பெயரால்
கட்சி நடத்துகிறவர்களும்
பேரினவாதத்தின்
அடி பணிந்தே உள்ளனர்!
மனித உரிமைகள்
உயிரிழந்து போய்விட்டன!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சரணாகதி

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக்கூடாது. கடவுளிடம் முழுமையாகச் சரண் அடைய வேண்டும். இல்லாவிட்டால் பகவானின் கிருபையைப் பெறமுடியாது.

ஒருமுறை ஒருவன் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான். பக்தன். "நாராயணா! நாராயணா!" என்று அலறினான். அவ்வலறல் வைகுண்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீமந் நாராயணர் காதில் விழுந்தது. அவர் எழுந்து புறப்பட ஆயத்தமாகி, மூன்றடி தூரம் சென்று திரும்பிவந்து ஆசனத்தில் அமர்ந்தார்.


இதனைப் பார்த்த திருமகள், "சுவாமி இதற்கு அர்த்தம் என்ன?" என்று கேட்டார்.

"தேவி! என் பக்தனை ஒருவன் அடித்தான். பக்தன் என்னை கூப்பிட நான் அவனுக்கு உதவச் செல்வதற்கிடையில் பக்தனும் தன்னைக் காப்பாற்ற அடித்தவனுக்குக் கல்லால் அடித்துவிட்டான். என்னை முழுமையாக நம்பாதவனை நான் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை!" என்றார் பகவான்.

முற்றிலுமாக நம்மைக் கடவுளிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அப்படிச் செய்தாலன்றி கடவுள் நம்மைக் காப்பாற்ற வரமாட்டார். உண்மையாகவே நம்மைப் பகவானின் திருவடியில் சமர்ப்பித்துச் சரணாகதியடைய வேண்டும்.

எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலுமாகத் தன்னை அர்ப்பணித்துச் சரணமாகப் பற்றுகிறானோ அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன் வருகின்றார்.

தொகுப்பு: திருமதி சி. பாலாம்பிகை, சிலாபம்.



## அல்லாஹ்மீது சத்தியம் செய்த அறபி

ஒரு சமயம் ஓர் அறபி உத்தம நபி முன் சென்று, "யாரசூலுல்லா! நாளை மறுமையில் என்னை சொர்க்கத்தில் சேர்த்து வைக்கக்கூடிய நல்லமல் எவை" எனக் கேட்டார்.

அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள், "நீர் அல்லாஹ்வையே அனுதினமும் தொழும். அவனுக்கு யாதொரு வஸ்துவையும் இணை வைக்காதே. அவனால் விதியாக்கப்பட்ட தொழுகையில் பேணுதலாய் இரு!

இன்னும் உன்மீது ரமழான் மாதத்தில் கடமையாக்கப்பட்ட நோன்பையும் நீ பிடித்து வருவதோடு ஸக்காத்தையும் கொடுத்து வா!" என்றார்கள்.

இதைக்கேட்ட அறபி, "அல்லாஹ்வின் மீது சத்தியமாக இன்று முதல் இவ்விடயங்கள் ஒவ்வொன்றையும் என்வாழ் நாள் வரை கடைப்பிடிப்பேன்!" என இறை தூதரிடம் உறுதி மொழி செய்து கொண்டார்.

அப்போது அங்கிருந்தோரை நோக்கி வள்ளல் நபி (ஸல்)அவர்கள் வாய் மொழிந்தார்கள். "மறுவுலக சொர்க்கவாதியை இவ்வுலகில் நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? இதோ அல்லாஹ் மீது சத்தியம் செய்த அறபி!"

எம்.சி.கலீல்-கல்முனை 05.

## கவிதைப் போட்டி இல.268

### பரிசுக்குரிய கவிதை

### அணுகுண்டு!

சிந்தித்துப் பார்!
புளூட்டோனியம்
கிடைத்தால்-நம்
நாட்டினிலும்
அணு குண்டு!

எஸ்.பி.பாலமுருகன்-
பதுளை.

### விளங்கவில்லை!

யுத்தம்....!
சமாதானம்....!
தீர்வுப் பொதி....!
மத்தியஸ்தம்....!
எதுவும் எனக்கு
விளங்கவில்லை!
தொலைந்துவிட்ட
என் அண்ணனெங்கே?!

ம பிரதீபன்-நெடுந்தீவு-11.



### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### நான் மட்டும்

அக்கா செம்மணியில்,
அண்ணா களுத்துறை சிறையில்;
அப்பா ராமேஸ்வரம் கடலுக்குள்;
அம்மாவோ அங்கொடையில்...!
நான் மட்டும் தனியே!
இங்கெல்லாம் போவதற்கு,
எனக்கு இன்னமும் வயதாகலயோ?

ப்ரியதர்ஷி-மட்டக்களப்பு.

### தொடர்கதை!

நாளையும் விடியல் வரும்;
எங்களுக்கு விடிவு வராது!
தீர்வுப் பொதியும் வரும்;
தீர்வுவராது!
விசாரணைக் கமிஷனும் வரும்;
நியாயம் வராது!

த. நகுலேஸ்வரன்- மட்டக்களப்பு.

### இனி எங்கே...?

இனிக்கும் கரும்பு
என் பின்னால்;
கசக்கும் வாழ்வு
கண் முன்னால்!

க. நாகராசா, சாவகச்சேரி.

### தீர்வு?

மத்தியஸ்த யோசனையா?
மண்டை விறைக்குதிங்கே!
தீர்வு வருமுன்னே
தீர்ந்துதான் போவேனா?

அ. அச்சுதன்-சேனையூர்.

### மலையக தலைமை

இவர்களின்
வாக்குறுதியும்
பொய்!
வீட்டுறுதியும்
பொய்!
யோசித்துப் பார்!

மு.அலெக்சாண்டர், கந்தபொல.

### மீண்டும்

வழிகாட்டிகள் வளம் காண
பின் சென்றோர் தடுமாற
புறப்பட்ட பயணம்
திசை மாறிப் போக
புறப்பட்ட இடத்திற்கே
மீண்டும் வந்த நிலையாச்சே!

ம. திருவரசுராசா-
வவுனியா.

### சாதனை!

குழுக்கள், சபைகள்,
இயக்கங்கள், சங்கங்கள்,
முப்படைகள், முகாம்கள்,
நிவாரணங்கள் 'அம்புலன்ஸ்'கள்
வெலிக்கடைகள், களுத்துறைகள்,
சூரியகந்தை, செம்மணிகள்-
எப்போதும் சாதனையே!

இ. துஷ்யந்தன்-
மட்/துறைநீலாவணை(கி.மா)

### கிடைக்காது!

கேட்டால் கிடைக்காது
மயிலின் இறகு!-நாம்
கேட்பதைத் தராது
இந்த அரசு!

அ.கௌரிதாசன்-
கிண்ணியா.

### சிந்தனை!

வடக்கில் செம்மணி செங்கோல்!
வவுனியாவில் ஊதியம் பறிப்பு!
தலைநகரில் கைதுகள்!
தென்னிலங்கையில் பல பிரிவு!
மலை நாட்டில் ஒரு தினுசு!-எமக்கு
வாழ வழி இல்லை! ஹும்...
ஊசாடத் தெருவும் இல்லை!

திருமதி நேசமணி சிவபாதம்-
ஃப்ரக்ரிக்கா வீதி, கொழும்பு-6.

### வெடி.. வெடி

நடந்தால் மிதிவெடி
ஓடினால் துவக்கு வெடி
இருந்தால் வான்வெடி,
படுத்தால் ஷெல்வெடி,
என்ன வாழ்க்கையடா நமக்கு?


ஜெ. ஜெயசுரேஸ்- பாண்டிருப்பு-1.

### எங்கே அவர்கள்...?

எந்தையும் தாயும்,
தங்கையும் தம்பியும்
செம்மணியிலோ?

அ. சந்தியாகோ
அசோகா வித்தியாலயம்
-கண்டி.

## கவிதைப் போட்டி இல.271



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி: 29.08.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.271
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

## சதாம் கதை

'சதாம் உசேன்' கதை முதல் வாரமே பலே ஆரம்பம். இன்றைய காலத்தின் இரும்பு மனிதரின் கதையை தொடராகத் தர முன்வந்த முரசுக்கு பாராட்டு!

சி. தாமோதரன், கொழும்பு-08.

சிறந்த மனிதராக சதாம் உசேனை தெரிவு செய்த முரசில் அவரது கதை வருவது பொருத்தமே. திகட்டாத தமிழ் நடையில் தொடர் அமைந்திருக்கிறது.

எம். சலீம்,
மாத்தளை.



அமெரிக்காவை எதிர்த்து நின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி சதாமை முரசு கௌரவித்தது அன்று. அப்போராளியின் கதையை மெருகுடன் தருகிறது இன்று.

ஜெ. யூஜின்,
நீர்கொழும்பு.

முரசே! முரசே!
சதாம் உசேன் ஈராக் மக்களின் தலைவராக இருக்கலாம். அமெரிக்காவின் ஆதிபத்தியத்தால் நசுக்கப்படும் மக்களின் நண்பராகவும் இருக்கிறார். அமெரிக்காவின் கை இங்கும் நீளும் இத்தருணத்தில் 'சதாம் உசேன்' கதை வருவது நல்ல பொருத்தம்!

எல். இஸ்மாயில், புத்தளம்.

உண்மை முரசே,
இடி அமீனின் அட்டகாசம் ரொம்ப அநியாயமய்யா. இப்படியும் ஒரு பிறவியா? என எண்ணத் தோன்றுகிறது. ரசிகன் தரும் பாணியும் சுவைதான். 'மேற்கே ஒரு குற்றம்' விறுவிறுப்போடு மெருகேறுகிறது. சபாஷ் போட புதிய தொடர் 'சதாம் உசேன்' நல்ல கலக்கல். தரும் முரசுக்கு பாராட்டுக்கள்!

அ. அரசரெத்தினம்,
சேனையூர்-06.

# வாசக(ர்)சாலை



முரசுக்கு;
அரசால் நியமிக்கப்பட்ட தொல்லை தவிர்ப்புக் குழுவும், மனித உரிமை ஆணைக்குழுவும் கண் துடைப்பே என்று இராஜதந்திரி கூறியிருந்தார். அது துளியும் பொய்யல்ல. பத்திரிகையாளர் மாணிக்கவாசகரைக் கூட அக் குழுவால் விடுதலை செய்விக்க முடியவில்லை. ஆதாரம் இல்லாமல் கைதானபோதும், பல வாரங்கள் சென்றபின்னரே விடுதலையானார். ஒரு தமிழ் பத்திரிகையாளருக்கே இந்த நிலை என்றால், அப்பாவிகள் கதி...?

சி. சிறீகணேசன், மட்டக்களப்பு.

## காரணமற்ற கைது!

முரசே!
பிரபாகரனது நாட்குறிப்பில் ஜனாதிபதி சந்திரிக்காவின் பெயர், முகவரி இருந்தால், அவருக்கும் புலிகளுக்கும் தொடர்பு என்று முடிவுக்கு வரமுடியுமா? என்று கேட்ட நாரதருக்கு சபாஷ்! காரணம் இன்றி கைது செய்வதும்; பின்னர் காரணம் தேடி அலைவதும் வழமையாகி விட்டது. இதனைக் கண்டிக்கும் திராணி தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கே இல்லாமல் போய்விட்டது. கண்டித்ததும், எதிர்ப்பு தெரிவித்ததும் போதாது என்கிறேன்.

சி. புஸ்பநாதன், கொழும்பு-11.

'மேற்கே ஒரு குற்றம்'- அதில் தெரிகிறது சுஜாதாவின் கொற்றம். கணேஷ், வசந்த் இணைந்தால் சொல்லவும் வேண்டுமோ? அருமையான தொடரை தேடித் தந்த முரசுக்கு நன்றி!

அ. ஜேக்கப், கண்டி.

முரசு தரும் தொடர்கள் அனைத்துமே அருமை. கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'முள் நிலவு' அருமையிலும் அருமை. முரசு கிடைத்ததும் நான் முதலில் புரட்டுவது முள் நிலவை!

எம்.பி. தமிழ்ச் செல்வன்,
தோணிக்கல்.

## மலையக இளம் சந்ததி

இனிய முரசே!
மலையகத்தில் ஏற்படப் போகும் மாற்றம் குறித்து நீ தந்த செய்திகளின் துல்லியம் இப்போதுதான் தெரிகிறது. பதுளை குண்டுவெடிப்பின்போது, அதனை புலிகள் செய்தனர் என்று கூற பொலிசாரே தயங்கிய போது, நாரதர் தெளிவாக வரைபடங்களுடன் விளக்கியிருந்தார். மலையக தமிழ் இளம் சந்ததியை தீவிரம் கொள்ள வைப்பது யார்? என்று கேட்டால், அரசாங்கம் என்பதே உண்மையான பதிலாக இருக்கும். எங்கு சென்றாலும் தட்டிக் கேட்க ஆளில்லாதவர்கள்போல மலையக தமிழ் மக்கள் நடத்தப்படுவதை நிறுத்த அரசு முன் வருமா?

கே. ராகுலன், நுவரெலியா.

முரசே!
சண்முகநாதன் எம்.பி. கொலையால் வவுனியாவில் யாழ் மக்களை வெளியேற்றுபவர்கள் இனி கொழும்பில் புளொட் எம்.பி. ஒருவர் கொலை செய்யப்பட்டால்? கொழும்பில் உள்ள தமிழர்களை எல்லாம் '83' யூலைக்கு அனுப்பின மாதிரி அனுப்புவினமோ?

தமிழ் அன்பன், மல்லாவி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

# சர்வதேச பிரசாரத்திற்கு கப்பல் விவகாரம்!

## புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் தீவிரம்

"வெளிநாட்டு குடிமக்களின் உயிரில் அக்கறை இல்லாத இலங்கை அரசு, தன்னுடைய நாட்டு குடிமக்கள்மீது அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கை அரசை நம்பி ஊதியத்திற்காக கப்பலில் பணியாற்றச் சென்ற இந்திய மாலுமிகள் புலிகளுக்கு உதவியதாக பொய்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள தமிழ்க் குடிமக்களை புலிகள் என்று கூறி கைது செய்துவரும் அரசு, இப்போது இந்திய மாலுமிகள்மீதும் குற்றம் சாட்டியுள்ளது.

மனித உயிர்கள், மனித உரிமை, மனச்சாட்சி போன்றவற்றுக்கு இலங்கை அரசு எந்தளவு மதிப்பளிக்கிறது என்பதையே 'பிரின்செஸ் கேஷ்' கப்பல் விவகாரத்தில் இலங்கை அரசு கூறிவரும் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன"

இவ்வாறு புலிகளின் சர்வதேச பிரசார பிரிவினரால் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள், அரசியல் வட்டாரங்கள் போன்றவற்றிடம் இலங்கை அரசின் நம்பகமற்ற தன்மையை ஆதாரத்துடன் எடுத்துக்காட்டக் கூடிய வாய்ப்பாக கப்பல் விவகாரத்தை கையில் எடுத்துள்ளது புலிகளின் சர்வதேசப் பிரிவு.

இலண்டன், ஃபிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளில் உள்ள புலிகளின் அலுவலகங்களில் பிரின்செஸ் கேஷ் கப்பல் விடயத்தில் இலங்கை அரசு வெளியிட்ட - உண்மைக்கு மாறான தகவல்கள் தொகுக்கப்பட்டு, 'உலகை ஏமாற்ற தயங்காத அரசாங்கம்' என்ற தலைப்போடு ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

"விடுதலைப்புலிகள் மட்டும் அலட்சியமாக நடந்துகொண்டிருந்தால், 22 மாலுமிகளும் கப்பலிலேயே பலியாகி இருப்பர். புலிகளுக்கு உதவச் சென்றனர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருப்பர். இப்போது அவர்கள் உயிருடன் உள்ளனர். இந்த விவகாரத்தில் புலிகளின் மனிதாபிமானமும், அரசின் மனித உயிர்கள் பற்றிய அலட்சியமும் தெரிந்துவிட்டது" என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

கடற்புலிகளால் வழி மறிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோதே கப்பல் சிறீலங்கா விமானப்படையினரால் குண்டு வீசி அழிக்கப்பட்டது. கப்பல் கப்டன், மாலுமிகள் மற்றும் சிப்பந்திகள் உட்பட 22 பேர் கடற்புலிகளால் காப்பாற்றப்பட்டனர் என்றும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### படமாக்கப்படுகின்றன

பிரின்செஷ் கேஷ் கப்பல் கப்டன் மற்றும் மாலுமிகள், சிப்பந்திகள் புலிகளால் நன்கு பராமரிக்கப்படும் காட்சிகளும், அவர்களது பேட்டிகளும் வன்னியில் புலிகளின் பிரசார செய்திப் பிரிவினரால் தொகுக்கப்பட்டு

(நமது நிருபர்)

வருவதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

சர்வதேச பிரசாரத்திற்காக வீடியோ படங்களாக இவற்றை அனுப்பிவைக்க உள்ளனராம் புலிகள்.

இதே வேளை இந்திய நாடாளுமன்றத்திலும் இலங்கை அரசு இந்திய மாலுமிகள்மீது சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பாக பிரச்சனை கிளப்பப்படலாம் என்று தெரிகிறது.

ம.தி.மு.க.தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வை.கோ இவ்விவகாரம் தொடர்பான தகவல்களைத் திரட்டி வருகிறாராம்.

### அமைச்சர் விளக்கம்

இதேவேளை, குறிப்பிட்ட கப்பல் தொடர்பான பூரண விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது.

"இக் கப்பலின் பெயர் மாற்றப்பட்டுள்ளது. முன்னர் புலிகளுக்கு ஆயுதம் ஏந்தி வந்த கப்பல் பதிவு செய்யப்பட்ட பெல்லீஸ் நாட்டிலேயே இக்கப்பலும் பதியப்பட்டதால்தான் சந்தேகம் ஏற்பட்டது. 'விடுதலைப் புலிகளிடம் கப்பலில் உள்ள பொருட்கள் சென்றிருந்தால் பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கும். அதனை எண்ணியே நாம் செயற்பட்டோம்!" என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

புலிகளுக்கு அபாயகரமான பொருட்களை எடுத்துச் சென்று வழங்க கப்பலின் கப்டன் சூழ்ச்சி செய்கிறார் என்ற சந்தேகம் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. அதனால்தான் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. ■

# பேதம் ஏற்படுத்த முயற்சியா?

## வடக்கு இளைஞர்கள் காரணமாம்!

மலையகத்தில் நடைபெறும் குண்டுத் தாக்குதல்களுக்கு வடபகுதி இளைஞர்களே காரணம் என்று இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் இராசரத்தினம் கூறியுள்ளார். அவர் மேற்படி கருத்தை அரச வானொலிக்கு கூறிய அன்றுதான் கண்டியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் வெடிகுண்டுகளுடன் கைதான செய்தியும் வெளியானது.

மலையகக் குண்டுத் தாக்குதல்களில் வடக்கு-கிழக்கு இளைஞர்கள் மட்டுமன்றி மலையக இளைஞர்களும் பங்குகொண்டே வருகின்றனர். மலையக அரசியல்வாதியான இராசரத்தினம் தமது நலனுக்காக வடக்கு-கிழக்கு, மலையகம் என்று பிரித்துக் காட்டி பேதம் ஏற்படுத்த முனைகிறார்.

வடக்கு இளைஞர்களால் பிரச்சனை என்ற கருத்தை மலையக மக்களிடம் பரப்ப இ.தொ.கா. திட்டமிட்டுள்ளதா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என்று தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் விசனம் தெரிவித்தார்.

இதே இராசரத்தினம்தான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை ஒன்றில், "மலையகத்தையும் வடக்கு-கிழக்கு நிலமைக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கிறோம்!" என உரையாற்றினார்.

மலையகத்தில் அரசின் நடவடிக்கைகளால் அங்கும் தீவிரவாத உணர்வுகள் தலைதூக்கும் என இவர்களே அறிந்துதான் இருந்துள்ளனர். பின்னர் இப்போது தமக்கு ஆபத்தாகும் என்பதால், அங்கு பிரச்சனையே இல்லை, என்பதுபோல பேசுகின்றனர் என்றும் அந்தப் பிரமுகர் கூறினார்.

வடக்கு-கிழக்கில் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தில் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய இயக்கங்களில் 1983ம் ஆண்டு காலப்பகுதியிலேயே மலையக இளைஞர்கள் முக்கிய பாத்திரம் வகித்திருந்தனர். மலையகத்தில் ஈரோஸ் நடத்திய தொலைக்காட்சி நிலையக் குண்டுவெடிப்பு ஒன்றில் மலையக இளைஞர்களும் பங்குகொண்டிருந்தனர்.

தமிழ் மக்கள் என்ற ரீதியில் இன ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து நிற்க வேண்டிய நேரத்தில் மலையகம்-வடக்கு-கிழக்கு என்று பேதம் ஏற்படுத்த முனைவது கண்டிக்கத்தக்கதாகும். "மலையகத்தில் வன்முறை வேண்டாம்! என்று பொதுப்படையாக அவர் கண்டித்தால் அது வேறு விடயம். அதைவிடுத்து தமிழ் மக்கள் தமக்குள் ஒருவரோடு ஒருவர் விரோதம் கொள்ளத்தக்க கருத்துக்களை வெளியிடுவது முறையல்ல!" எனவும் அப்பிரமுகர் சுட்டிக்காட்டினார். ●

# மலசலகூட குழியில் எலும்புக்கூடு

## மற்றொரு எலும்புக்கூடு பற்றைக்குள்!

யாழ் குடாநாட்டில் புன்னாலைக் [illegible]வனில் இயங்கிவரும் வசாவிளான் [illegible]வித்தியாலய மலசலகூட குழியில் எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

எலும்புக்கூட்டின் இடுப்புப் பகுதியில் காணப்பட்ட பச்சை நிற அரைஞாண் கயிறும், வெள்ளி மோதிரமும், அட்சரக்கூடும் அந்த எலும்புக்கூடு யாருக்குரியது என்று இனம் காண உதவியுள்ளன.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த வேலன் இரத்தினசிங்கம் என்பவரது எலும்புக்கூடே அது என்று அவர் மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

1995 செப்டம்பர் 13ம் திகதி சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் தனது வீடு வளவை பார்க்கச் சென்ற இரத்தினசிங்கம் காணாமல் போய்விட்டார். இப்போது எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளது. மலசலகூடக் குழியில் இருந்தே இதனைக் கண்டெடுத்தனர்.

இதனையடுத்து புளொட் அமைப்பின் உபதலைவர் மாணிக்கதாசன் விடுத்த அறிக்கை ஒன்றில், "புன்னாலைக்கட்டுவனில் மட்டுமன்றி படை முகாம்கள் எங்கெங்கு இருக்கிறதோ அவற்றுக்கு அருகில் எல்லாம் எலும்புக்கூடுகள் இருக்கக்கூடும்!" என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி கச்சாய் பகுதியில் ஆறு பிள்ளைகளின் தாயான கோபாலன் எமிலி நோனா (வயது [illegible]5) 02.08.98 இல் காணாமல் போயிருந்தார். தனது உறவினர் வீட்டுக்குச் செல்லும் வழியிலேயே இவர் காணாமல் போயிருந்தார்.

14.08.98 அன்று இவரது வீட்டுக்கு அருகிலுள்ள பற்றைக்குள் இருந்து அழுகிய எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்த எலும்புக்கூடு எமிலி நோனாவினுடையது என்று அவர் கணவர் அடையாளம் காட்டியுள்ளார். ○

# ஏன் இந்த மௌனம்?

பிரின்ஸஸ் கேஷ் கப்பல் தகர்ப்பு விவகாரம் தொடர்பாக கொழும்பில் அநேகமான சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

16.08.98 ஞாயிறு சிங்கள, ஆங்கில வாரப் பத்திரிகைகளும் குறிப்பிட்ட சம்பவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இக் கப்பல் விவகாரம் தொடர்பாக அரசு விடுத்த செய்திகள் பற்றியும் அவை மௌனம் சாதித்துள்ளன. ●

# மொத்தப் பாதுகாப்புச் செலவு ஆறாயிரம் கோடி

## 'ஜயசிக்குறுய்' நகர்வால் செலவு

யாழ்ப்பாணத்துக்கான பிரதான விநியோகப்பாதையைத் திறப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் தொடங்கிய ஜயசிக்குறுய் நடவடிக்கை, இந்நாட்டின் பொருளாதாரத்தில் [illegible]த்த பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. [illegible]பு வருடத்துக்கான பாதுகாப்புச் செல[illegible]னங்களுக்கென வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட மேலதிகமாக ரூபா. 800 கோடி செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நிதித்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இதுகாலவரை இடம்பெற்ற நடவடிக்கைகளைவிட ஜயசிக்குறுய் நடவடிக்கையின் போது பெருவாரியான உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. 15 மாதங்களுக்கு முன்னர்-1997 மே 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கையில் 20,000 துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டன. இராணுவப் புள்ளி விவரங்களின்படி இதுவரை, 1,500 துருப்புக்கள் கொல்லப்பட்டுள்ளனர். புலிகள் தரப்பில் 1,300 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிகிறது.

கடந்த வருடம் பாதுகாப்புக்காக ரூபா 44000 கோடி ஒதுக்கப்பட்டது. எனினும் ரூபா 4800 கோடி செலவானது. நடப்பு வருடத்துக்காக ரூபா 5200 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் இத்தொகைக்கு மேலாக மேலும் 800 கோடி செலவிடப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜயசிக்குறுய் நடவடிக்கையின் பயனாக-76 கிலோமீட்டர் பாதையை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருமானால் வன்னியில் புலிகள் தொடர்ந்து நிலைப்பது கடினமாகிவிடும். இதனால்தான் இப்பாதையை அரசப்படைகள் கைப்பற்றாமல் பாதுகாக்க புலிகள் மிகக்கடுமையாகப் போரிட்டு வருகின்றனர். அதனால் அரசாங்கம் பெரும் பண இழப்பையும் உயிரிழப்பையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

# மட்டக்களப்பில் வெடித்த குண்டு?

## பொதுமக்களிடையே சந்தேகம்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பில் செலான் வங்கி வாகனத்தரிப்பிடத்தில் மோட்டார் சைக்கிள் குண்டொன்று வெடித்திருக்கிறது.

17.08.98ல் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் 15 பொதுமக்களும், இரண்டு பெண் பொலிசாரும் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு சோதனைச் சாவடிகளில் சைக்கிள்கள்-குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள் துருவித் துருவி ஆராயப்படுவதுண்டு. மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு வந்த மோட்டார் சைக்கிள் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக சமீபத்தில் கூறப்பட்டதை அடுத்து மட்டக்களப்பில் மட்டுமன்றி நாடெங்கும் மோட்டார் சைக்கிள்கள் பாதுகாப்பு பிரிவினரால் தீவிர சோதனைக்கு உள்ளாகின்றன.

இந்நிலையில் மட்டக்களப்பு நகருக்குள் குண்டு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் வந்தது எப்படி? புலிகள் அவ்வாறு கொண்டு வருவதானால் கடும் சிரமத்தின் மத்தியில்தான் கொண்டுவந்திருக்க வேண்டும்.

அவ்வாறு கொண்டுவந்த மோட்டார் சைக்கிள் குண்டை இலக்கு தீர்மானம் இல்லாத ஒரு பகுதியில் நிறுத்தி வைத்து வெடிக்கச் செய்து விரயமாக்குவார்களா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. "மட்டு நகரில் படைத்தரப்பின் முக்கியமானவர்களை அல்லது இலக்குகளை மோதித் தகர்க்கப் பயன்படுத்தி இருப்பார்களே!" என்றும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

குறிப்பிட்ட இடத்தில் வங்கிப் பாதுகாப்புக் கடமையில் உள்ள பொலிசாரும் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபடும் பொலிசாரும் கூடி நிற்பதுண்டு. அவர்களைக் குறிவைத்து குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று இன்னொரு கருத்தும் நிலவுகிறது.

ஆனால் கூடி நிற்பவர்கள் எப்போது வருவர் போவர் எனத் தெரியாமல் நேரக் குண்டு வைத்து விரயமாக்கியிருப்பார்களோ, என்பதும் ஆராய வேண்டியதே.

மட்டக்களப்பு மர்மக் கொலைகள் பற்றிய புகார்கள் கிளம்பிய நிலையிலேயே மேற்படி குண்டு வெடித்துள்ளது. முன்னரும் இவ்வாறான புகார்கள் எழுந்த தருணங்களில் மர்மக் குண்டுகள் மட்டக்களப்பில் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# கண்டியில் பலத்த பாதுகாப்பு

## கிராமங்களில் கண்காணிப்பு!

(கண்டி நிருபர்)

கண்டி-கெலி ஓயா, அலுதெனிய என்னும் இடத்தில் கடந்த சனி அதிகாலை (15ம் திகதி) விசேட பொலிஸ் பிரிவினால் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர். இதன் பின்னர் கண்டி உட்பட அதனைச் சூழ உள்ள பகுதிகள் பலத்த கண்காணிப்புக்கும் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

பறங்கியர் ஒருவரின் வீட்டில் தங்கி இருந்த இவர்களில் ஒருவர் சயனைட் உட்கொண்டபின் ஸ்தலத்தில் மரணமானார். அடுத்தவர் சயனைட்டை உட்கொண்ட நிலையில் பேராதனை அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மகேந்திரன் தயானந்தன் என இனம் காணப்பட்டுள்ள இவர் சிகிச்சை பெற்று வரும் அறை பலத்த கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவர் வாய் திறந்து பேசியதால் அவரிடம் இருந்து வாக்குமூலத்தைப் பெற்று துப்புத்துலங்கலுக்கு பொலிஸார் மிகுந்த பிரயத்தனத்தை எடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இவர்கள் இருவரும் வாழ்ந்து வந்த வீட்டுக்கு அருகில் வசிக்கும் கிராம அதிகாரியையும் பொலிஸார் விசாரிக்கின்றனர். உண்மையைத் தெரிந்திருந்தும் அதனை பொலிஸாருக்கு தெரிவிக்காத குற்றச்சாட்டை இவர் எதிர்நோக்கியுள்ளார். ஒரு தொகை வெடிமருந்து அம்மியின் கீழ் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் மலையகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் பரவலாகலாம் என்ற சந்தேகம் இப்பொழுது படிப்படியாக ஊர்ஜிதமாகி வருகிறது. கண்டிப் பிரதேசத்தில் உள்ள முக்கிய தலங்கள்-குறிப்பாக வங்கிக் கட்டடங்களின் அகல விரிந்த நுழைவாயில்கள் சுருங்க மூடிவிடப்பட்டுள்ளன.

கிராமங்கள் தோறும் சிவில் உடை தரித்த பொலிஸாரின் கவனயீர்ப்புப் பணியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபர் சிரிசேன ஹேரத் இது தொடர்பாக மிகுந்த அக்கறையும் எடுத்துவருகிறார். ■

# இராணுவம் நடவடிக்கை எடுக்கத் தயங்காதாம்!

## துணைப்படையின் அட்டூழியங்கள்

கிழக்கு மாகாணத்தில் படையினருடன் இணைந்து இராணுவத் துணைப்படை என்று செயற்படும் தமிழ்க் குழுவான ராசிக் குழுவினர் அங்குள்ள பொது மக்கள்மீது பலவகையான அட்டூழியங்களைச் செய்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ராசிக் அல்லது கணேசமூர்த்தி என்பவர் தலைமையிலான குழுவினர் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துடன் சேர்ந்து செயற்பட்டவர்கள். இப்பொழுது படையினருடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புடனும் தொடர்பு வைத்துள்ளனர்.

இவர்கள் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கிழக்கு மாகாண மக்களிடத்தில் பணம் பறித்தல், ஆட்கடத்தல், கொலை, கொள்ளைச் சம்பவங்களிலும், பழி வாங்கல் போன்ற பல அட்டூழியங்களையும் செய்து வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. எனினும் இவை பற்றி முறையிட்டால் தம்மீது பழிவாங்கப்படும் எனப் பொதுமக்கள் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க தமிழ்க் குழுக்களின் உதவி தேவைப்படுகிறது. அக்குழுக்கள்மீது பழி சுமத்தும் இத்தகைய பிரச்சாரங்களில் புலிகள் ஈடுபடுவது சகஜம். எது எவ்வாறிருப்பினும் தங்களுக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அட்டூழியங்களிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதைத் தண்டிக்க இராணுவம் ஒருபோதும் தயங்காது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்ததாக அரச வானொலி செய்தியறிக்கையில் 14.08.98 அன்று ஒலிபரப்பியது.

இது இவ்விதமிருக்க, மட்டக்களப்பு-சத்துருக்கொண்டானில் ஆர். இராஜரெட்ணம் (47), கே. நாகேஸ்வரி (30) எனும் தணவன்-மனைவி ஆகிய இருவரும் மர்மமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இக் கொடூர சம்பவம் 07.08.98 அன்றிரவு நடந்தது.

கடந்த 10.08.98 அன்று மட்டக்களப்பு-கருவேப்பங்கேணி எனுமிடத்தில் ஐ.பிரான்ஸிஸ் (40) எனும் மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்விரு கொலைகளுக்கும் படையினருடன் இணைந்து செயற்படும் துணைப்படையினர் எனும் குழு ஒன்றே சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவ்வாறான அட்டூழியங்களை தடுத்து நிறுத்தும்படி சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு மட்டக்களப்பு பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# கடத்தலும்—கைவிடலும்!

கடந்தவாரம் அக்கரைப்பற்றில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஓர் உழவு இயந்திரத்தையும், இரு மோட்டார் சைக்கிள்களையும் புலிகள் தமது பாவினைக்காக எடுத்துச் சென்றனர்.

பொருட்கள் ஏற்றி இறக்குவதற்காகவே உழவு இயந்திரம் கொண்டு செல்லப்பட்டது. தமது அலுவல்கள் முடிந்தவுடன் கடத்தப்பட்ட உழவு இயந்திரத்தையும், மோட்டார் சைக்கிள்களையும் புலிகள் ஓரிடத்தில் கைவிட்டுச் சென்றனர். பாதுகாப்புப் படையினர் அவற்றை மீட்டெடுத்தனர். ■

# சைக்கிள் குண்டு வைத்துத் தகர்ப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பிலும், ஏறாவூரிலும் அநாதரவான நிலையில் காணப்பட்ட இரு துவிச்சக்கர வண்டிகள் குண்டு பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டன.

சைக்கிளில்தான் குண்டு இருந்தது என்று ஆரம்பத்தில் செய்திகள் சொல்லப்பட்டாலும், அப்படியல்ல-பின்னர் குண்டு பொருத்தப்பட்டு சைக்கிள் தகர்க்கப்பட்டது என்பது தெரியத் தொடங்கியது.

நீண்ட நேரமாகச் சைக்கிள் காணப்பட்டதால் அதுபற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோது அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சைக்கிளில் குண்டைப்பொருத்தி சைக்கிளை வெடிக்கச் செய்தனர்.

மட்டக்களப்பில் வெடிக்க வைக்கப்பட்ட சைக்கிளை சீருடையினரின் நண்பர் ஒருவரே எடுத்துச் சென்று மறதி காரணமாக வைத்து விட்டுவந்தாராம். பின்னர் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டு அவருக்கு ஞாபகம் வந்ததும் தேடி ஓடியபொழுது அவரின் சைக்கிளே வெடிக்க வைக்கப்பட்டுக் கிடந்ததாம். ○

# நிதியைக் கையாடிய அதிகாரி
## வ-கி.மாகாணசபையில் முறைகேடு

(திருமலை நிருபர்)

நிதித்துறைக்குப் பொறுப்பாக இருந்த வடக்கு-கிழக்கு மாகாண உயர் அலுவலரொருவர் தவறான வழியில் நிதியைப் பயன்படுத்தியுள்ளார் என்ற விபரமும் அப் பயன்படுத்தலில் சுயலாபம் இருந்துள்ளது என்ற தகவலும் கசியத் தொடங்கியுள்ளன.

மாகாணத் திட்டக் குழுவிடம் அனுமதி பெறப்படாமல் 1996ல் அலுவலகத் தேவைக்கென ஆடம்பரக் காரொன்றை கொள்வனவு செய்தமை, ஒய்வில் செல்லும்போது குறிப்பிட்ட விலைக்கழிவுடன் அக்காரைப் பெற்றுக்கொள்ளவிருக்கும் வசதியைக் கருத்திற்கொண்டு, காரைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு, தூரப் பயணங்களுக்கு திணைக்களத்தின் வேறு வாகனங்களைப் பயன்படுத்தியமை,

திட்டக் குழுவின் அனுமதியின்றி தான் குடியிருக்கும் கச்சேரிக்குச் சொந்தமான விடுதியை ஆடம்பர மாளிகையாக மாற்றியதுடன் அதற்குத் தேவையான தளபாடங்களை பெரும் பொருட்செலவில் கொள்வனவு செய்து மாகாணசபை நிதியை வீணடித்தமை,

யாழ்ப்பாணத்தில் சொந்தவீடு பாதிக்கப்பட்டதெனக் கூறி, அதி உயர் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்டதோடு, இலங்கையின் எப்பாகத்திலும் சொந்த வீடு இல்லையென்ற உறுதிமொழி கொடுத்து, அரசில் வீடு கொள்வனவுக்கான கடனைப் பெற்று, மொரட்டுவையில் வீடொன்றைக் கொள்வனவு செய்தமை,

கிளிநொச்சியில் திணைக்களமொன்றின் உடைமைகள் அழிந்து போகாதிருப்பதற்காக திட்டக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை இலட்சம் ரூபாவை- பணம் இல்லையென்று கூறி வழங்கமறுத்த அதே வேளையில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்துக்கு தொண்ணூறு இலட்சம் ரூபாவை உடனடிக் காரணங்கள் எதுவுமின்றி- தன் கீழுள்ள திணைக்களம் என்பதற்காக- வழங்கியமை,

ஆகிய குற்றச்சாட்டுகள் உட்பட பல குற்றச்சாட்டுகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

இவை சம்பந்தமான 'பல தகவல்கள் கணக்காய்வாளர் நாயகத்துக்கும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக மாகாணசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# ஊழியர்கள் வேலை நீக்கம்

(மட்டக்களப்பு நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் எழுதுவினைஞர் சேவைக்காக அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அனைவரும் ஆகஸ்ட் மாதம் 01ம் திகதி தொடக்கம் சேவையிலிருந்து நீக்கம் செய்யப் பட்டுள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் இவ்வருடம் மார்ச் மாதம் தொடக்கம் அமைய அடிப்படையில் எழுதுவினைஞர் சேவைக்காக அமர்த்தப்பட்டிருந்தனர். தமது நியமனத் திகதி தொடக்கம் இவர்கள் மாவட்டத்தின் கல்வித் திணைக் களங்களில் கடமை புரிந்து வந்தார்கள்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 37 பேர் வேலை இழக்கிறார்கள். இவர்களது வேலை 01.08.98 தொடக்கம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.எஸ். மனோகரன் சகல எழுதுவினைஞர்களுக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

# ஷெல் வீச்சுக்களால் தொல்லை

மட்டக்களப்பு-வாழைச்சேனையை அண்டியுள்ள நாசிவன்தீவு மற்றும் சற்றுத் தூரத்திலுள்ள கிராமப் புறங்களை நோக்கிச் சீருடையினர் ஷெல் தாக்குதல்களை நடத்துவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன என்று அதிகாரியொருவர் சொன்னார்.

வாழைச்சேனைப் பிரதேசம் நீண்ட காலமாக பதற்றமான பகுதியாக மாறி வருகிறது. அனைத்துத் தரப்பினராலும் நாளுக்கு நாள் தாக்குதல் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதால் பாதிப்பின் தன்மை உக்கிரமடைந்து மக்களை வாட்டுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.

## முறைப்பாட்டாளரின் மொழியில் பதிய நடவடிக்கை!
# பொறுப்பற்ற மறுப்பும், மறைக்க முடியாத சான்றுகளும்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தமிழில் கருமங்களை மேற் கொள்வதற்கு திடீரென விதிக்கப்பட்ட தடை உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட்டிருக் கிறது.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பொறுப் பதிகாரி, நிர்வாக மாற்றம் சம்பந்தமாக தனக்கு விளங்கும் மொழியிலேயே பொலிஸ் நிலையத்தில் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்று கூறியதைத் தொடர்ந்து தமிழ் பேசும் பொலிஸார் மத்தியிலும், தமிழ்- முஸ்லிம் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிருப்தி நிலை தோன்றியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி தமிழ் மறுப்பு விடயம் உரிய மேலதிகாரிகளின் கவனத்திற்கு எட்டியது. இதைத் தொடர்ந்து தமிழ் மொழியில் கருமங்களை ஆற்றமுடியும் என்றும், அதேவேளை மக்களின் நலனில் அக்கறையுள்ளதுபோல் காட்டிக் கொள்ளும் உடனடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக அதிருப்தியடைந்த பொலிஸ்தரப்புக் கூறுகிறது.

அறிவித்தல் ஒன்று பொலிஸ் நிலையத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. அதில் "பொலிஸ் நிலையத்திற்கு வரும் சகல முறைப்பாடுகளும் முறைப்பாடு செய்யப்படும் பாஷையில் பதிவு செய்யப்படும். சகல பிரிவிலுமுள்ள நிலைய உத்தியோகத்தர்களும், கடமை உத்தியோகத்தர்களும் இதனைக் கட்டாயம் செய்ய வேண்டும்" என்று பொறுப்பதிகாரியின் புதிய உத்தரவு காணப்படுகிறது.

பொலிஸ் பொறுப்பதிகாரி தமிழ் புறக்கணிப்பைச் செய்யாதிருந்திருந்தால் காலங்காலமாக இருந்து வரும் ஒன்றிற்கு இப்படி ஏன் அவசர அவசரமாக விளம்பரங்கள் தொங்க விடவேண்டும் என்ற கேள்வி எழாமலில்லை.

பொலிஸ் பிரிவின் மேலிடம், சம்பந்தப் பட்ட அதிகாரியைக் கடிந்து கொண்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக தமிழ் பேசும் பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.

# திருவிழாக்களில் போராட்ட வரலாறு!

இது திருவிழாக் காலமாகையால் கோயில்கள் பக்தர்களால் களைகட்டி நிற்கின்றன. இதுவரை கிழக்கிலும் வரலாற்றுப் புகழ்மிக்க பல கோயில்களில் திருவிழாக்கள் நடந்தேறியுள்ளன.

கடந்த வாரம் சரித்திரச் சிறப்பு வாய்ந்த மட்டக்களப்பு-தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தார்கள். தாந்தாமலை புலிகள் இயக்கத்தினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். ஆலயத்தில் பல்வேறு கடைகளை காத்தான்குடி, கல்முனைப் பகுதி முஸ்லிம்களும் திறந்திருந்தார்கள்.

ஒருபுறம் திருவிழாக்களில் சமய அனுட்டானங்கள் நடந்தேறின. மறுபுறம் புலிகள் இயக்கத்தினர் தமது இயக்கப் பிரசாரங்களைத் தீவிரப்படுத்தியிருந்தனர். வழமையான உத்திகளில் பிரசார நடவடிக்கைகள் காணப்பட்டன. தாந்தாமலைக் கோயில் திருவிழாவிலும் பல இளைஞர்- யுவதிகள் போராட்ட வரலாற்று வளர்ச்சிப் பிரசாரங்களால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# நஷ்ட ஈட்டில் பாரபட்சம்?

(திருமலை நிருபர்)

வன் செயல்களினால் பாதிக்கப்பட்டு உடைமைகள் இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறதா? இவ்வாறு கேட்கிறார்கள் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள்.

"விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு எல்லாத் தகவல்களும் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட எங்கள் விண்ணப்பங்கள் ஆண்டுக் கணக்காகத் தூங்கும் அதே வேளையில் எமக்குப் பல மாதங்களுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு எந்த நியாயத்தின் கீழ் நஷ்டஈடு 'வழங்கினார்கள்?" என்று இவர்கள் கேட்கிறார்கள்.

முந்தைய அரசு காலத்தில் இலஞ்சத்தின் மூலம் சில விண்ணப்பங்கள் உடனடியாகக் கவனிக்கப்பட்டமை போல் இப்போதும் நடைமுறைகள் எதுவும் உள்ளனவா, என்பது தெரியவில்லை என்கிறார் அரச ஊழியர் ஒருவர்.

இரண்டாயிரம், மூவாயிரம் சார்ந்த தொடரிலக்க விண்ணப்பங்கள் கவனிக்கப்படாமல், நான்காயிரத்து நாநூற்றி... என்று வரும் தொடரிலக்க விண்ணப்பங்களுக்கு 15.07.98ல் நஷ்டஈடு வழங்கப்பட்டதைக் குறித்தே இந்தப் புகார்கள் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.


**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218



**SPOKEN ENGLISH**

BY **K. M. N. NALRAVI**

இப்பொழுது வெள்ளவத்தையில்

**யாருக்காக?**

- ★ தொழில் புரிபவர்களுக்காக.
- ★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- ★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
- ★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 18 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத்தெரியாதவர்கள் கூட சரளமாக [illegible] பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்குப் பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: பழைய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பம்.

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Col - 6. (Hotel Ceylon Innsக்கு அருகில்)



**ஹோமியோபதி**

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சைநிபுணர்
**Dr.R . தியாகராஜன்**
D.H.M.S. AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்
தொலைபேசி : 585592 - 581986
**21.8.98 - 25.8.98**
இந்திய தொலைபேசி : 0091-431 - 432946
0091-431 - 432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



**தெய்வீக மருத்துவம்**
**சர்வதேச சமூக தெய்வீக சேவை**
GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

| | |
|---|---|
| பாலுசோதிடர்–S.A.M.P. | BALUSOTHIDAR-S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம் | THEYVIGASAKTHY CENTRE, |
| கல்லடி–அரசவிடுதி வீதி, | BATTICALOA (P.O.) |
| மட்டக்களப்பு. (P.O). | SRI LANKA. T.P. 065-24825 |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." – "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



**மனோதத்துவ வைத்தியம்**
**வவுனியாவிலும் சந்திக்கலாம்**

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு நாடாமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும்வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கவனத்துக்கு: கொழும்பில் 5 நாட்கள் மட்டும்.**

**கொழும்பில் ஆகஸ்ட் 23 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**கல்முனையில் செப்டம்பர் 5முதல்6 வரை**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 065- 28329


**வவுனியாவில் செப்டம்பர் 12,13 திகதிகளில்**

வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில்
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.33. Tissa Weerasingam sq.,**
**Boundary Road, Batticaloa** விலும் சந்திக்கலாம்.


**ஓராண்டு நினைவு**

மலர்வு: 10 11 1974



உதிர்வு: 21 08 1997

**செல்வன் ரூபானந்த் அரியநாயகம்**
**[ WUSC மாணவன் 1997]**

நெஞ்சத்தில் கொஞ்சமேனும்
கருணை இல்லா வஞ்சகர்
எத்தனை கொடுமையானவர்கள்!
துள்ளித்திரிய வேண்டிய உன்னை
துடிக்க வைத்தனர்!
வாழவேண்டிய உன்னை
வதைத்தழித்தனர்!

என்றும் உன் நினைவில்
திருமதி. ச.அரியநாயகம் (அம்மா)
அண்ணாமார் மற்றும் அக்கா

தகவல்:
உப தபாலகம், பாண்டிருப்பு-கல்முனை.


**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணை யானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.

**500 gram 300/= 250 gram 150/=**

வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

**Ayur Dr. K. ASivasubramaniam**
**முருகானந்த வைத்தியசாலை**

G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட்,
மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11

# காலைவாரிய கப்பல்கதை

எக்ஸ்ரே ரிப்போர்ட்

டைட்டானிக் கப்பல் பற்றிய படத்தில் பாதிதான் கற்பனை. மீதி உண்மை. எம்.வி. பிரின்ஸஸ் கேஷ் கப்பல் பற்றிய இலங்கை அரசின் கதையில் முழுவதும் கற்பனை.

'டைட்டானிக்' கப்பல் கதை படமாகி வசூலை வாரியிறைத்துக் கொண்டிருக்கிறது. நம் அரசு சொன்ன கப்பல் கதை அரசின் காலையே வாரிக்கொண்டிருக் கிறது.

ஜனாதிபதி செயலகம் ஊடாக சொல்லப்பட்ட தகவல் மிகப் பெரிய பொய் ஆகி விட்டதால் உலக அரங்கில் ஜனாதிபதியின் இமேஜ்கூட பலத்த அடி வாங்கியிருக்கிறது.

எம்.வி.பிரின்ஸஸ் கேஷின் உண்மைக் கதை என்ன? என்று அறிய எமக்கு கிடைத்த தகவல்களை பார்க்கலாம்.

கடந்த ஏப்ரல் மாதம் துபாய் நாட்டிலிருந்து எம்.பி.பிரின்ஸஸ் கேஷ் கப்பல் இலங்கைக்கு வந்தது. இக்கப்பலை தருவித்த நிறுவனத்தின் பெயர்: 'குட்வில் பிரைவேட்லிமிட்டெட்'. இந்நிறுவனம் ராஜா என்றழைக்கப்படும் தமிழருக்கு சொந்தமானது.

குட்வில் நிறுவனம் கப்பல் சேவையில் ஈடுபடுவது இது முதற் தடவையல்ல. ஏற்கனவே மூன்று கப்பல்களை இந்நிறுவனம் இங்கு சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

அந்த மூன்று கப்பல்களின் பெயர்கள் ஒஷன் கரியர், மேக்ஸ், அஸ்ரியா. இந்த மூன்றில் அஸ்ரியா என்னும் கப்பலில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடலில் பொருட்களுடன் மூழ்கியது. இதனாலும் குட்வில் நிறுவனத்திற்கும், பொருட்கள் ஏற்றிய தமிழ் வர்த்தகர்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டது முன்னைய சோகம்.

அஸ்ரியா கப்பல் மூழ்கிவிட்டதால் அதற்கு பதிலாக சேவையில் ஈடுபட தருவிக்கப்பட்டதே எம்.பி.விரின்ஸஸ் கேஷ் கப்பல். இதுவரை கொழும்பு, யாழ் சேவையில் ஈடுபட்டவற்றில் மிகப் பாரிய கப்பல் இதுவாகும். கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயை கொட்டி கொழும்பில் வைத்து இதனை திருத்தி அமைத்தது குட்வில் நிறுவனம்.

திருத்தி முடிந்ததும் இலங்கையில் தனது முதற்பயணத்திற்கு தயாரானது. முதற் பயணமே கடைசிப் பயணமாகவும் இருக்கும் என்று கப்பல்தான் அறியுமா? கப்பல் நிறுவனம்தான் அறியுமா?

பாரிய கப்பல் என்பதால் ஆறாயிரம் மெற்றிக் தொன் பொருட்களை ஏற்றிச் [illegible]லும் வலுவுள்ளது பிரின்ஸஸ் கேஷ்.

[illegible] தனியார் வர்த்தகர்களும், கட்டடப் [பொரு]ட்கள் கூட்டுத்தாபனமும் தம் பொருட்களை ஏற்றியுள்ளனர். அவற்றின் மொத்த எடை ஆறாயிரம் மெற்றித் தொன். எவ்வளவு கொள்ளளவோ அவ்வளவையும் ஏற்றிவிட்டனர்.

59 வர்த்தகர்களின் பெயர்களில் பொருட்கள் ஏற்றப்பட்டபோதும் ஒரு வர்த்தகரின் பெயரில் ஏற்றப்படும் பொருட்களில் பல வர்த்தகர்களின் பொருட்கள் அடங்கியிருப்பது வழக்கம்.

வர்த்தகர்களால் ஏற்றப்பட்ட பொருட்களின் மொத்த எடை மூவாயிரத்தி 854.77 மெற்றித்தொன். இவற்றில் சீமெந்து, அரிசி, மா,சீனி,பருப்பு உட்பட 94 மோட்டார் சைக்கிள்கள், 3 ட்ரக்டர்கள், 8 ஓட்டோக்கள் இரண்டு கார்கள், மதுபானங்கள் போன்றவையும் இருந்தன.

கப்பலில் கட்டடப் பொருட் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மூவாயிரத்தி ஐநூறு மெற்றிக் தொன் சீமெந்தும், வர்த்தகர்களுக்குரிய ஆயிரத்தி ஐநூறு மெற்றிக்தொன் சீமெந்தும் இருந்தன. சீமெந்துதான் கப்பலில் பெரும்பகுதியை பிடித்திருந்தது.

கட்டடப் பொருட் கூட்டுத்தாபனத் தினர் தமது சீமெந்துக்கு காப்புறுதி செய்திருந்தனர். தனியார் வர்த்தகர்கள் தமது பொருட்[களு]க்கு காப்புறுதி செய்யவில்லை. தரமான [கப்பல்] என்பதால், கடலில் மூழ்காது என்ற நம்பிக்கையில் காப்புறுதி செய்யாமல் விட்டிருந்தனர்.

ஆகஸ்ட் முதலாம் திகதி எம்.வி. பிரின்ஸஸ் கேஷ் கப்பல் துறைமுகத்தைவிட்டு புறப்படவிருந்தது. ஆனால் ஹாபர் மாஸ்டரால் தடுத்து நிறுத்தப்பட்டது. ஏதோ ஒரு ஆவணத்தை கேட்டுக் குடைந்து கப்பல் செல்ல தடைவிதிக்கப்பட்டது.

இந்த தடையின் பின்னணியில் இருப்பது வர்த்தகப் போட்டி என்று கூறப்படுகிறது. இக்கப் பலை தடுத்து வைத்துக் கொண்டு மோர்ச்சன்ட்டைல் நிறுவனத்திற்கு சொந்தமான மாகோ கப்பல் யாழ் செல்வதற்கு அனுமதிதரப்பட்டதாம்.

மோர்ச்சன்ட்டைல் நிறுவனம் அரசியல் பின் பலம் கொண்ட சிங்களப் பிரமுகர்களுக்கு சொந்த மானதாம். மறைந்த காமினி திசநாயக்கா குடும்பத்தினருக்கும் பங்கு உண்டு. ஜெர்மன் காரர் ஒருவரும் இதில் பிரதான பங்காளியாக உள்ளாராம்.

யாழ் பருத்தித்துறை துறைமுகத்தில் இரண்டு கப்பல்கள்தான் தரித்திருக்க முடியும். மாகோ கப்பல் செல்ல முன்னரே அங்கு வேறொரு கப்பல் தரித்து நின்றது. எனவே அதை சாக்காக வைத்து மேலும் பலநாட்கள் பிரின்ஸஸ் கப்பலின் பயணம் தாமதம் செய்யப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து இரு கப்பல்களில் ஒன்று திரும்பிய பின்னரே பிரின்ஸஸ் கேஷ் கப்பலுக்கு அனுமதி தரப்பட்டது. அதுவரை துறைமுகத்தில் தரித்து நின்ற கூலியாக அநியாயத்துக்கு பணம் கட்டவேண்டி இருந்தது.

கப்பலின் பெயர், கப்பல் எப்போது, எங்கு, எப்பாதையால் செல்கிறது போன்ற விபரங்கள் கடற்படையினருக்கும் துறைமுகத்தில் இருந்தே கொடுக்கப்பட்டுவிடும்.

கடற்புலிகளின் நடமாட்டம் உள்ள, இன்னமும் சொல்லப்போனால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பிராந்தியம் ஊடாகவே கப்பல் செல்லப்போகிறது என்று தெரிந்தும் கடற்படையினர் பாதுகாப்பு வழங்கவில்லை.

திருமலையில் மூலப்பொருட்களை சுரண்டி அள்ளிச் செல்லும் சர்வதேச வர்த்தகக் கப்பல்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அதுபோல வடக்கில் உள்ள படைமுகாம்களுக் கான விநியோகமும் பலத்த பாதுகாப்புடன் நடை பெறுகிறது. யாழ் மக்களுக்கான கப்பல் சேவைக்கு மட்டும் குறிப்பிட்ட கப்பல் கம்பனியும், வர்த்தகர்களும் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்கு மாறு கைவிடப்படுகின்றனர்.

இத்தனைக்கும் வடபகுதிக்கான சிவில் கப்பல் போக்குவரத்து என்ற பெயரில் படையினர் தமக்குரிய பொருட்களையும் கொண்டு செல்லக் கூடும் எ[ன்]பதால், அதனை அனுமதியோம் என்று [illegible] உத்தியோகபூர்வமாக ஏற்கனவே [illegible]வித்தும் உள்ளனர். அச் செய்தி [illegible]களிலும் பிரசுரமாகி இருந்தது.

29.08.95 அன்று யாழ் தீவுக்கான [illegible]க்கு வரத்தில் ஈடுபட்ட ஐரிஸ் [illegible]னா கப்பலை கடத்திச் சென்ற



எம்.வி. பிரின்ஸஸ் கேஷ்

## முல்லைக் கடலில் நடந்தது என்ன?

பின்னரே புலிகள் மேற்கண்ட கருத்தை கூறியிருந்தனர்.

அது வெ[று]ம் மிரட்டலல்ல. 1997ல் மிஷன் கப்பலை கடத்[தி] தீயிட்டனர். 08.07.97ல் மொரங் பொங் கப்ப[லை]யும், கொரிய மாலுமிகளையும் கடத்திச் செ[ன்]று வைத்திருந்து பின்னர் விடுதலை செ[ய்த]னர்.

29.05.9[illegible] திருமலை கடற் பிராந்தியத்தில் இ[illegible] ஏற்றிக்கொண்டிருந்த அதேனா கப்[பலு]ம் புலிகளால் தகர்க்கப்பட்டது.

புலிகளி[ன் க]ட்டுப்பாட்டிலுள்ள வன்னிக்கு நிவாரணப் [பொரு]ட்களை வெட்டிக் குறைத்து பட்டினிச் ச[முதா]யத்தை உருவாக்கியுள்ளது அரசு. [illegible] அரச கட்டுப்பாட்டுப் பகுதியில்[illegible] பாவனையை படையினர் கட்[illegible]கள். காரணம் கேட்டால், புலி[களு]க்கு [illegible] என்கிறார்கள்.

போரி[ல்] உண[illegible]ட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் அரசு ஆயுதமாக பயன்படுத்தும்போது, அவற்றைக் கைப்பற்ற புலிகள் முற்படுவதும் இயல்பானதே.

பொதுமக்களுக்கு செல்லும் உணவுப் பொருட்கள் புலிகளுக்கு போகின்றன என்று அரசு கூறுகிறது. பொதுமக்களுக்கான கப்பல் சேவை என்ற பெயரில் படையினரும் தமக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்லக் கூடும் என்று புலிகள் கருதுகின்றனர்.

11ம் திகதி அதிகாலை எம்.வி. பிரின்ஸஸ் கப்பல் புறப்பட்டது. வட கிழக்கு கடற்பகுதியில் கடற் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் கண்ணில் மாட்டிவிட்டது.

பனைமர உயரத்தில் பாரியளவான பிரின்ஸஸ் கப்பலைக் கண்டதும் பெருந்தொகையான உணவுப் பொருட்களும், அத்தியாவசியப் பொருட்களும்தான் வருகின்றன. உள்ளே படையினர்கூட இருக்கக்கூடும் என்று கடற் புலிகள் நினைத்து விட்டனர்.

உடனே கரைக்கு தகவல் பறந்தது. கடத்துவதற்கான உத்தரவு கிடைத்தது. ஏற்பாடுகளும் நடந்தன. 13ம் திகதி வியாழக்கிழமை அன்று வன்னியில் தனியாருக்கு சொந்தமான லொறிகளை ஒன்று திரட்டுவதில் புலிகள் மும்முரமாக இருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றில் இருந்து ஏறக்குறைய 150 லொறிகள் ஒன்று திரட்டப்பட்டன.

கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பை அடைந்ததும் அங்கிருந்து கடத்திச் செல்வதுதான் புலிகளின் திட்டம்.

புலிகளுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல கடற் கொந்தளிப்பால் கப்பல் நங்கூரமிட்டு நிற்கவேண்டியிருந்தது.

நங்கூரமிட முன்னர் கப்பல் கப்டன் கடற்படையினருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். கடற் கொந்தளிப்பாக இருக்கிறது, நங்கூரமிட்டு நிற்பதாயின் பாதுகாப்பு தேவை என்றும் கேட்டிருக்கிறார். பாதுகாப்பு வழங்கக் கூடிய நிலையில் கடற்படையினர் இருக்கவில்லை.

14.08.98 அன்று அதிகாலை 2.30 மணியளவில் கப்பலை கடற் புலிகளின் படகுகள் சுற்றி வளைத்தன. கப்பலுக்குள்ளும் கடற் புலிகள் புகுந்தனர். கப்பலை தாம் கூறும் இடத்திற்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டனர்.

கப்பலில் இருந்து தாக்குதல் வந்தால் எதிர்த்து தாக்குதல் நடத்தக்கூடியதாக ஆயுதங்களுடனும், கரும்புலிப் படகுகள் சகிதமுமே கடற் புலிகள் முற்றுகையிட்டனர்.

கப்பலில் இந்தியக் கப்டன் உட்பட 17 இந்திய மாலுமிகளும், நாலு இலங்கை மாலுமிகளும் இருந்தனர்.

கப்பல் முல்லைத்தீவு கரையை அண்மித்ததும் நங்கூரமிடப்பட்டது. பாரிய கப்பல் என்பதால் கரையை நெருங்கிச் செல்ல முடியவில்லை. ஆழமான கடற்பகுதியிலேயே நின்று கொண்டது.

கடற்புலித் தளபதி சூசை நேரடியாகவே முல்லைக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார். கப்பல் கப்டனுக்கோ, மாலுமிகளுக்கோ எவ்வித தீங்கும் நேரக்கூடாது என்று பிரபாகரன் கண்டிப்பாக கூறி அனுப்பியிருந்தாராம்.

கப்பல் கப்டனை தமது படகில் ஏற்றி கரைக்கு கொண்டுசென்றனர். கப்பலுக்குள் ஏறிய கடற் புலிகள் துரிதவேகத்தில் கப்பலுக்குள் உள்ள பொருட்களை ஆராய்ந்தனர்.

ஏமாற்றம்தான் காத்திருந்தது. உணவுப் பொருட்கள் குறைந்தளவே இருக்க, பெருமளவில் இருந்தவை சீமெந்து பக்கற்றுக்கள். சீமெந்து பிரயோசனம்தான், ஆனால் என்ன பிரச்சனை என்றால், அவற்றை கிரேன் வசதி கொண்ட துறைமுகத்தில் இருந்துதான் சுலபமாக இறக்க முடியும்.

வேறு கப்பல்கள் என்றால் ஓரளவு இறக்கி முடிக்கலாம். ஆனால் பிரின்ஸஸ் கேஷ் பிரமாண்டமான பனை உயரக் கப்பல். கட்டாயம் கிரேன் தேவை.

ஆகவே சுலபமாக இறக்கக்கூடிய மோட்டார் சைக்கிள்கள், மற்றும் உணவுப் பொருட்கள் கொண்ட பொதிகள், தேங்காய் எண்ணெய் பரல்கள், ஓட்டோக்கள் போன்றவற்றை படகுகளில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

எனினும் மாலுமிகள் அளித்த பேட்டியில் கப்பலிலிருந்து பொருட்கள் எதுவும் இறக்கப்படவில்லை என்று கூறியுள்ளனர்.

மாலுமிகள் கப்பலின் தனியான தளம் ஒன்றுக்குள் இருக்க வைக்கப்பட்டிருக்கலாம், அல்லது தம் உயிரைக் காப்பாற்றிய புலிகள் கூறியபடியே அவர்கள் பேட்டி அளித்திருக்கலாம்.

எப்பொருட்களையும் இறக்காமல் கப்பலை விடுவிப்பதுதான் புலிகளின் நோக்கம் என்றால் கப்பலை ஆராய்ந்துவிட்டு தொடர்ந்து செல்ல அனுமதிக்க ஆகக்கூடியது ஒருமணிநேரம் போதுமானதாக இருந்திருக்கும். சரக்குக் கப்பல் என்று தெரிந்தபின்னர் கப்டனிடம் விசாரிக்க பெரிதாக எதுவுமில்லை.

ஏறக்குறைய 13 மணிநேரங்கள் கப்பல் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது. கப்பலில் இருந்து பொருட்களை விரைவாக இறக்குவதில் புலிகள் கைதேர்ந்தவர்கள். கிரேன் உதவி தேவையில்லாத பொருட்களை வெகு துரிதமாக அவர்களால் இறக்க முடியும்.

எமக்கு கிடைத்த தகவலின்படி 150ற்கு மேற்பட்ட லொறிகள் கரைக்கு வந்து காத்திருந்தன. அவற்றில் குறைந்தது நூறு லொறிகளாவது முற்றாக நிரம்பிய நிலையில் திரும்பிச் சென்றுள்ளன.

பிறின்ஸஸ் கப்பல் போன்ற பிரமாண்டம் இல்லாத வேறு கப்பலாக இருந்தால் முழுப் பொருட்களையும் இறக்கியே முடித்திருக்க லாம்.

கடத்தப்பட்ட சில மணிநேரத்தில் கடற் படையினர் உஷாராகினர். கப்பலை புலிகளின் கட்டுப்பாட்டு கரை நோக்கி செல்லவேண்டாம் என எச்சரித்துப் பார்த்தனர்.

கடற்படையினரின் ராடர்களில் கப்பல் மட்டுமன்றி கப்பலை சுற்றிச்சென்ற கடற்புலிப் படகுகளும் தெரிந்தே இருக்கும்.

அதனால்தான் சரக்குக் கப்பல் புலிகளால் கடத்தப்பட்டதாக 14.08.98 அன்று மதியச் செய்தியில் இலங்கை அரச வானொலி அறிவித்தது. அரசோ படைகளோ உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தாத செய்தியை அரச வானொலி வெளியிடமாட்டாது. அவ்வாறு வெளியிட்டிருந்தால் தற்போதைக்கு பலர் பணியில் இருந்து தூக்கிவீசப்பட்டிருப்பர்.

போர் வெற்றிக்காக என்றுகூறி தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், புலிகளிடம் முட்டாள்தனமாக சரக்குக் கப்பலை பறிகொடுத்து விட்டது அரசு என்று கருதப் படப் போகிறதே, புலிகளுக்கு உணவும் கொடுத்துக் கொண்டு சண்டை பிடிக்கும் அரசு என்று எதிர்க்கட்சி எக்காளமிடப்போகிறதே என்று அரச தரப்புக்கு திண்டாட்டமாகிவிட்டது.

புலிகளுக்கு போகின்றன எனக் கூறி நிவாரணப் பொருள் வெட்டு, எரிபொருள் மட்டுப்படுத்தல் என்று தாமே முடிவுகளை மேற்கொள்ளும் பாதுகாப்பு அமைச்சுக்கும் புலிகளிடம் சரக்குக் கப்பலை கொடுப்பது வெட்கத்துக்குரிய காரியம்.

கடற்படையிருந்தும், வான்படை இருந்தும் கப்பல் கடத்தப்பட்டவுடன் செயலில் இறங்கி புலிகளிடம் இருந்து மீட்க முடியாமல்போனதும் விமர்சனத்திற்கு உள்ளாகலாம் என்றும் படை உயர்மட்டம் கருதியிருக்கலாம்.

கிட்டத்தட்ட பத்துமணிநேர ஆலோசனையின் பின்னர் கிபீர் விமானங்கள் வெள்ளிமாலை 4 மணியளவில் பறந்து சென்றன. கப்பலை வட்டமிட்டன. அவை வரும் என்று எதிர்பார்த்து நின்ற புலிகள் மாலுமிகளை தம் படகுகளில் ஏற்றிக்கொண்டு கரைக்கு விரைந்தனர்.

கப்பலில் குண்டு வீழ்ந்தது. பற்றி எரிந்தது. இம்முறை உளவு விமானமோ அதன் படம் எடுப்போ கிடையாது என்பதையும் கவனித்த மக்கள் உளவு விமானம் எங்கே? என்று கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கப்பல் பற்றி எரிந்ததும்தான் உச்சக்கட்ட குத்துக்கரணம் அடித்தன அரச பிரசார சாதனங்கள். தம்மாலேயே புலிகளால் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட சரக்குக் கப்பலை, புலிகளுக்கு சரக்கும், ஆயுதங்களும் ஏற்றிச் சென்ற கப்பல் என்று கூறியது மூலம் ஹிட்லரின் பொய்யுரை மந்திரி கோயபல்ஸையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டன.

போதாக்குறைக்கு ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கைதான் மகா மகா சுவாரசியம். அவசர அவசரமாக தயாரிக்கப்பட்டதுபோல தெரிந்த அந்த அறிக்கையில், புலிகள் இயக்கத்திற்கு ஆயுதம் கொண்டு சென்றதாக சந்தேகிக்கப்பட்ட கப்பல் குண்டுவீசி அழிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

கப்பலில் விழுந்த குண்டைவிட பெரிய குண்டொன்றை தூக்கிப்போட்டுவிட்டது ஜனாதிபதி செயலகம்.

இலங்கை அரசின் துறைமுகத்தில் பரிசோதனை, அனுமதி போன்றவற்றுடன் கடற்படையுடன் தொடர்புகொண்டபடி சென்ற கப்பலில் ஆயுதம் செல்வதாக இருந்தால், இலங்கை அரசு புலிகளுக்கு அனுப்பிவைத்தால்தான் சாத்தியம். அப்படியொரு சந்தேகம் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்திருக் காது என்று நம்பலாம்.

அப்படியானால் ஏன் இந்த அவசர அறிக்கை? வழக்கமாக பாதுகாப்பு தரப்புத்தான் இதுபோன்ற சம்பவங்களுக்கு அறிக்கை விடுவதுண்டு.

2.11.97இல் முல்லைக் கடலில் புலிகளால் நிறுத்தப்பட்டிருந்த கப்பலை தகர்த்தபோதும் பாதுகாப்பு தரப்பினரே அதுபற்றிய விளக்கங்களை வெளியிட்டனர். எவ்வித பரபரப்பும் காட்டவில்லை. ஏனெனில் தாக்கப்பட்டது புலிகளுடன் தொடர்புடைய கப்பல் என்பதில் துளியும்அப்போது சந்தேகம் இருக்கவில்லை.

ஆனால், இப்போது தாக்கப்பட்டது தனியார் கப்பல் என்பதும் தெரியும். அதில் சென்ற மாலுமிகளில் இந்தியர்கள் இருந்ததுதான் பெரிய பிரச்சனை. இந்தியாவுக்கு விளக்கம் சொல்லியாக வேண்டுமே. அதுமட்டுமல்ல, நாளை உண்மை வெளியானால் சர்வதேச கப்பல்கள் இலங்கை கடற்பிராந்திய பக்கம் வரமறுக்குமே. அதுதான் அந்த அவசர அறிக்கை.

இன்னொன்றையும் கவனிக்க முடிந்தது. இராணுவ வெற்றிச் செய்திகளை சிங்களத்தில்தான் பெரிதும் அறிவிப்பார்கள். ஆனால் குறிப்பிட்ட அறிக்கை ரூபவாஹினியில் ஆங்கிலத்தில் மட்டுமே விசேஷமாக ஒளி பரப்பப்பட்டது. அதாவது இங்குள்ள வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டினர் அறிந்து கொள்ளும்வகையில் கூறப்பட்டது.

அது உள்ளூருக்காக சொல்லப்பட்டதல்ல, உலகுக்காக சொல்லப்பட்டது. படையினர் சொன் னால் வலுவிருக்காது என்பதால் ஜனாதிபதி செயலகம் ஊடாக கூறப்பட்டது.

மாலுமிகள் எவரு[ம் உ]யிருடன் இருக்க மாட்டார்கள் என்ற ந[ம்பி]க்கையில் மேற்படி அறிக்கையை வெளி[யிட்ட]னர்.

ஆனால், எதிர்பார்த்ததுக்கு மாறாக புலிகளிடம் மாலுமிகள் சேதமே இன்றி இருந்தனர். அதனை புலிகளின் குரல் வானொலியும் தெரிவித்தது.

அந்த வானொலிச் செய்தியைக் கேட்ட அரசு சனிக்கிழமை காலை இன்னொரு கரணம் அடித்தது. புலிகளிடம் பொருட்கள் கிடைக்காது இருக்கவே குண்டுவீசி அழித்ததாக கூறியது. இதையே முதலில் கூறித் தொலைத்திருக்கலாம். இந்திய மாலுமிகள் பற்றி அக்கறைப்படவில்லையே என்ற கேள்வி வருமே என்று நினைத்ததால் அப்படிக் கூற வில்லை.

இப்போதும் இந்திய அரசு ஒரு கேள்வியை எழுப்பினால், பின்னர் கூறிய காரணத்திற்காகவும் இலங்கை அரசு கைகளை பிசைய வேண்டி இருக்கும்.

'மாலுமிகள் புலிகளால் கப்பலில் இருந்து இறக்கப்பட்டனர் என்ற தகவல் அரசுக்கு முதலில் தெரியாது. அப்படியிருக்கையில் அந்த அப்பாவி மாலுமிகளின் உயிரைவிட புலிகளுக்கு பொருட்கள் போய்ச் சேருவதுதான் அரசுக்கு பெரிதாகத் தெரிந்ததா? இந்த மனித உயிர்களுக்கு கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா?'

இக் கேள்வியை இந்தியா எழுப்புகிறதோ இல்லையோ, புலிகளின் சர்வதேச கிளைகள் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டன.

இதற்கிடையே கப்பல் கப்டன் மீது புலிச்சாயம் பூசுவதிலும், கப்பல் நிறுவனம் தமிழருக்கு சொந்தமானது என்பதால் அவர்மீது சந்தேகப்படுவதும் தங்கள் தவறுக்கு பிறர்மீது பழிபோடும் முயற்சிபோல் உள்ளது.

கப்பல் கப்டன் புலிகளுக்கு ஒத்துழைப்பதாக இருந்தால், புலிகளின் கரைக்கு கப்பலை கொண்டு செல்லத் தேவையில்லை. நடுக்கடலில் வைத்தே கடற்படைக்கு சந்தேகம் வராதபடி குறிப்பிட்ட பொருட்களை புலிகளின் படகுகளில் போட்டுவிட்டு போக முடியும். இப்படியெல்லாம் இழுபறிப்படத் தேவையில்லை. தவிர ஒருமணிநேரம் நடுக்கடலில் கப்பல் நங்கூரமிட்டு நின்றும் இருக்கிறது.

சீமெந்தும் புலிகளுக்கு தேவைதான். ஆனால் அதைவிட முக்கியம் உணவுப் பொருட்கள்தான். கப்பலில் பொருட்களை ஏற்றிய தமிழ் வர்த்தகர்கள் யாராவது புலிகளுக்கு தகவல் கொடுத்திருந்தால், புலிகள் இக்கப் பலை கடத்தியே இருக்கமாட்டார்கள். நல்ல கொளுத்த பயன் உள்ளதும், வசதியாக இறக்கக் கூடியதுமான கப்பலுக்காக காத்திருந்திருப்பர். அதனை யோசிக்காமல் தமிழ் வர்த்தகர்கள் சிலரையும் கைது செய்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியுள்ளது அரசு.

ஆனால் கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் யாரையும் கைது செய்யவில்லை. அவர்கள் தமிழர்களல்ல. எனவே சந்தேகம் இல்லை.

இந்தியர்கள் எந்த மொழி பேசுவோராக இருந்தாலும் தமிழர்களுக்கு உதவக்கூடியவர்கள் என்ற அப்பாவித்தனமான கருத்தும் இவ் விவகாரங்களில் தொனிப்பதையும் உற்று நோக்க வேண்டும்.

கப்பல் பெயர் மாற்றம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. எந்தக் கப்பல் நிறுவனம் கப்பலை எடுக்கிறதோ அந்நிறுவனம் தனக்குப் பிடித்த பெயரை சூட்டுவது வழக்கமானது.

கடைசியாக ஒரு சந்தேகம்; மோர்ச்சண்டைல் நிறுவனம் இங்கு கப்பல் தொழிலில் ஏகபோகமாக கொடிகட்டி பறக்க விரும்பும் நிறுவனம். அவர்கள் 'குட்வில்' நிறுவனத்தை நஷ்டமாக்க நினைத்து, கப்பல் புறப்படும் செய்தியை புலிகளுக்கு அனுப்பியிருக்க முடியாதா? அவர்களது கப்பல்களை புலிகள் ஏன் கடத்துவதில்லை? ஏதாவது நிதி உதவி செய்கிறார்களா? இப்படியான கோணங்களில் ஏன் அரசு ஆராயவில்லை. அந்த நிறுவனம் தமிழருக்கு சொந்தமானதல்ல என்பதாலா?

நாரதர்

---

# அதிரடி அய்யாத்துரை



***கப்பல் விவகாரத்தில்*** அயலக மாலுமிகளை இங்கு பொறுப்பேற்க தாமதம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? என்று ரெண்டு எழுத்தாரிடம் கேட்கப் பட்டது. அதற்கு ரெண்டு எழுத்தார் கூறிய பதில், "எங்கு எப்படி விடுவிப்பது என்று எங்களுக்குத் தெரியும். அங்கு, அப்படி விடுவிப்போம்!"

***இந்து சமயத் திணைக்கள*** உதவிப்பணிப்பாளரை ஒரே ஒரு நாள் மட்டும்தான் தீரவிசாரித்தவையாம். பின்னர் நோ விசாரணை. 'தொடர்பில்லை' என்று கண்டுபிடித்துவிட்டனராக்கும்! ஒரு நாள் விசாரணைக்குப் பின்னர் நொண்டி நடக்கிறார் என்றும் கேள்வி. குறிப்பிட்ட திணைக்களத்துக்கு பொறுப்பான அதிகாரமுள்ளவரும் உரிய கவனம் செலுத்தவில்லையாம். 'எங்கே தமிழாராய்ச்சி மாநாடு நடத்திப் பார்க்கட்டுமேன்!' என்று எதிர்ப்புக்கொடி தூக்கியவர் என அந்தக் காலத்தில் கூட்டணியினரால் கூறப்பட்டவர்தான் அந்த அதிகார முள்ளவர்.

***யாழில் பட்டதாரிகள்*** வேலை நிறுத்தம் செய்தவையல்லோ? தற்போதைக்கு வேலை காலி இல்லை என்று குறிப்பிட்ட துறைக்கு பொறுப்பானவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டாராம். அப்படியானால் உண்ணாவிரதம் இருந்து என்ன பயன்? ஜூஸ் குடித்ததுதான் கண்ட பயன் என்று கொதித்தாராம் ஒரு பட்டதாரி. "நாம் எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் உத்தரவாதம் கொடுத்ததாக என் பெயரை கூறிவிட்டனர்" என்கிறார் வெகுஜனப் பிரதிநிதி ஒருவர்.

***அதிகார தரப்பின் கட்டுப்பாட்டில்*** உள்ள ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தில் பதவி மாற்றங்களால் தலைகள் உருள்வதற்கு மட்டும் குறைவில்லை. இன்றைய அதிகார தரப்பார் வந்ததில் இருந்து பத்திரிகை ஆசிரியர்கள் பலரது தலைகளும் உருண்டுகொண்டிருக்கின்றன. ஏரிக்கரையின் பிரபல ஆங்கில தினசரிக்கு நான்காவது தடவையாக ஆசிரியர் மாற்றமாம். புதியவர் 'லங்காபுவத்'துக்கு பொறுப்பாக இருந்தவராம்.

***எரிபொருள் பங்கீட்டு முறைக்கு*** எதிராக கழகம் நடத்திய கலகம் வரவேற்கப் படவேண்டிய கலகம்தான். இப்படியான கலகம் பல செய்தால் பாராட்டலாம்தானே! சனத்தை விரட்ட எடுத்த முடிவால் கெட்ட பேரையும் மேற்படி கலகம் மூலம் ரிப்பேர் செய்திருக்கினம்.

***கப்பல் மூழ்கியதில்*** கடும் நஷ்டமடைந்த வர்த்தகர்கள் நிலை கவலைக்கிடம்தான். ஆனாலும் நஷ்டஈடு கொடுக்கப்படும் என்பது நடவாத காரியம்! நாடே மூழ்குதாம் அதைப்பற்றியே கவலைப் படாதபோது பொருள் மூழ்கியதுக்கோ கொடுக்கப் போகினம்? 'பார்க்கலாம்' என்று சொல்லக்கூடும். 'எப்ப பார்க்கலாம்?' பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்! நம்பி ஏமாறாமல் நடக்க வேண்டியதைப் பார்க்கிறது நல்லது!

***ஜனநாயக கட்சித் தலைவரை*** சிறையில் தாக்கிய சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாதிடுவதில்லை என்று பிரபல தமிழ் சட்டத்தரணிகள் சிலர் முடிவு செய்துள்ளனராம்.

***யாழில் பலியான*** பெண் ரெண்டெழுத்தாரில் ஒருவருக்கு உடலில் மச்சம் இருந்ததாம். இதன் பின்னர் முகாம் ஒன்றுக்கு சென்ற பெண்களை "மச்சம் பார்க்க வேண்டும்!" என்று கூறி இம்சித்தனராம். அச்சமயத்தில் மறுதரப்பில் பெண்கள் எவருமே இருக்கவில்லையாம்.

***யாழ் பத்திரிகையில்*** (சஞ்சீவி) தரப்பட்ட அதிர்ச்சிதரும் தகவல் ஒன்று: யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் ஒரு காதல் ஜோடி கம்பி நீட்டிவிட்டது. இதில் உள்ள சமாச்சாரம் யாதெனில்: பெண்ணுக்கு வயது 24. பையனுக்கு வயது: 14. கட்டுக்காவலும் தட்டிக்கேட்க ஆளுமில்லாத யாழில் இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்.

***இவ்வாரப் பொன்மொழியாக*** கிடைத்ததைப் பகிர்ந்து கொள்வோம்.

**"வளமான காலத்தில்**
**நண்பர்கள்**
**நம்மைப்பற்றி அறிகிறார்கள்!**
**வறுமையான காலத்தில்**
**நாம் நண்பர்களை**
**தெரிந்து கொள்கிறோம்!"**

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# பிரேமதாசா – பிரபாகரன் கட்டிவிடப்பட்ட கதை

பிரேமதாசா அரசுடன் பேச்சை நிறுத்தி புலிகள் போரை ஆரம்பித்த பின்னர், புலிகளின் கதை முடிந்தது என்றும், தவறான நேரத்தில் போரை ஆரம்பித்துவிட்டதாகவும் விமர்சனங்கள் எழுந்தன.

பெரும்பாலான இந்தியப் பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் இலங்கை இனப்பிரச்சனை மற்றும் யுத்தம் தொடர்பான தகவல்களும், கணிப்புக்களும் தப்புத் தப்பாகவே கிடைப்பதுண்டு.

ஜூலை 6-20, 1990ல் வெளியான 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவித்த கருத்துக்களும், கணிப்புக்களும் நிலவரத்திற்கு நேர்மாறாக இருந்தன.

இந்தியா ருடே எழுதியதில் இருந்து சில சுவாரசியமான பகுதிகளை மட்டும் எடுத்துத் தருகிறேன்.

"கடந்த இருவாரங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் ஈவிரக்கமற்ற தாக்குதலின் பின்னர் 15 ஆயிரம் கெரில்லாக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குக் காடுகளுக்குள் பின்வாங்கியுள்ளனர்.

ஒரு உறுதியான அரசையும், ரத்ததாகம் கொண்டு அலையும் ஒரு அனுபவம்மிக்க இராணுவத்தையும் பற்றி விடுதலைப் புலிகள் தப்புக் கணக்குப் போட்டுவிட்டது நன்றாகவே தெரிகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கண்டனக்குரல் எழுப்பியும், இந்தியா ஒரு கனத்த மௌனத்தில் ஆழ்ந்திருப்பதிலிருந்து விடுதலைப்புலிகளின் இறுதி நாட்கள் நெருங்கிவிட்டதுபோல்தான் தோன்றுகிறது.

### தவறான நேரம்

நேரம் காலம் தெரியாமல் புலிகள் நடந்து கொண்டதன்மூலம் தங்களது துன்பங்களைத் தாங்களே அதிகரித்துக் கொண்டனர்.

வெற்றிக்களிப்பில் மிதக்கும் இலங்கை இராணுவ லெப்ரினன்ட் கே.சி.தர்மசேனா கூறுகிறார்: "புலிகள் புறமுதுகிட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். புலிகளின் சாவு உயர்ந்து கொண்டே போகிறது."

புலிகளிடம் அவமானப்பட்டுக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்திற்கு மறுபடியும் யுத்தம் தொடங்கியிருப்பது தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற கிடைத்த வாய்ப்பு.

பிரிகேடியர் ஏ.எம்.யு.செனிவிரத்னே கூறுகிறார்: "இந்திய இராணுவம் அளவுக்கு நாங்கள் பெரியவர்கள் இல்லை. ஆனால் புலிகளை நாங்கள் ஒரு கை பார்ப்போம்."

பிரேமதாசாவும், விஜயரத்னாவும் சண்டை நிறுத்தத்திற்கு முயற்சித்தார்கள். ஆனால் புலிகளின் வெறித்தனத்தை நிறுத்த முடியவில்லை. நீதி அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் விரைந்தார்.

பேச்சுவார்த்தை முடிந்து கொழும்பு திரும்ப பலாலி விமான நிலையத்திலிருந்து அவருடைய ஹெலிக்கொப்டரில் பறப்பதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்பு அவரின் இரண்டு மெய்க்காப்பாளர்கள் சுடப்பட்டார்கள்.

இலங்கை அரசை எதுவுமே ஆத்திரப்படுத்தாது என்று புலிகள் மகா பயங்கர தப்புக் கணக்கு போட்டார்கள்.

ஆனால் பிரேமதாசாவோ புலிகளின் சவாலை ஏற்று, வா மோதிப் பார்க்கலாம் என்று களத்தில் இறங்கினார்.

ஜே.வி.பி.யினரை நிர்மூலமாக்கியது போல புலிகளையும் ஒழித்துக் கட்டுங்கள் என்று இராணுவத்தினருக்கு கட்டளையிட்டார்.

இராணுவமும் தன் படை ஆயுத பரிவாரங்கள் சூழ களத்தில் இறங்கியது. அமெரிக்க தயாரிப்பு பெல் ஹெலிகொப்டர்களும், நடுத்தர டாங்கிகளும் களம் புகுந்தன.

இஸ்ரேலில் பயிற்சி பெற்ற அதி பயங்கர கமாண்டோக்கள் கிழக்குப் பக்கத்தில் விரைந்தனர்.

கடல் வழியே இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் காயமடைந்த புலிகளைப் பிடிக்க கடற்படையின் துப்பாக்கி ஏந்திய படகுகள் கடலில் ரோந்து வந்தன.

இது வரையிலும் 100 புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி நேருக்கு நேர் யுத்தம் நமக்குக் கட்டுபடியாகாது என்று உணர்ந்த புலிகள் இப்போது காடுகளுக்குள் புகுந்துவிட்டார்கள்."

இந்தியா ருடே மேற்கண்டவாறு எழுதிய பின்னர்தான் யாழ் கோட்டை புலிகளிடம் வீழ்ந்தது. யாழ் குடாநாடும், வன்னியும், கிழக்கில் சில பகுதிகளும் அப்போதும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

ஆனால் புலிகள் காட்டுக்குள் புகுந்து விட்டதாக இலங்கை அரசு கூறிய தகவலை நம்பி இந்தியா ருடே அப்படியே வெளியிட்டு விட்டது.



யாழில் குண்டுவீச்சு

### யாழில் மோதல்

யாழ் கோட்டை முகாம் புலிகளிடம் வீழ்ந்ததும், எதிர்க்கட்சிகளின் வாயை அடைக்கவும், தெற்கில் உள்ள மக்களுக்கு தம் பலத்தை காட்டவும், புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அனுமதித்தது அரசாங்கம்.

யாழ் குடாநாட்டின் பலாலி இராணுவ தளத்தில் இராணுவத்தினர் குவிக்கப் பட்டனர். பலாலி முகாமிலிருந்து பல முனைகளில் படைகள் முன்னேறி யாழ் குடாநாட்டை பிடிக்க திட்டமிடப்பட்டது.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் பங்குகொண்ட இந்த நடவடிக்கை 8.10.90 அன்று ஆரம்பமானது.

'யாழ் கோட்டையையும், யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளையும் கைப்பற்றுவதற்கே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது' என்று ரஞ்சன் விஜயரத்ன அறிவித்தார்.

வான்படையினர் குண்டுத் தாக்குதல் நடத்தி பாதையை சுத்தப்படுத்திக் கொடுக்க, சீனாவில் வாங்கிய டாங்கிகளின் உதவியுடன் தரை நகர்வை மேற்கொண்டனர் இராணுவத்தினர்.

மாவிட்டபுரம், வசாவிளான் ஆகிய பகுதிகள்வரை அதிக எதிர்ப்பு இன்றி முன்னேறிய படையினரால் அதன் பின்னர் முன்னேற முடியவில்லை.

அப்பகுதிகளில் கடும் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், "குடும்பசிட்டியை கைப்பற்றி விட்டோம், கட்டுவன்வரை முன்னேறி விட்டோம்" என்று அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் உண்மைக்கு மாறாக கூறிக்கொண்டிருந்தன.

தமது தரப்பு இழப்பு விபரத்தை குறைத்தும், புலிகள் தரப்பு இழப்பு விபரத்தை தம்மை விட பல மடங்கு அதிகமாகவும் கற்பனையில் கூறிக்கொண்டும் இருந்தன.

களநிலவரமோ வேறு விதமாக இருந்தது.

மாவிட்டபுரம், வசாவிளான் பகுதிகளில் இருந்த புலிகளின் பதுங்கு நிலைகளைத் தாண்டி படையினரால் முன்னேற முடியவில்லை.

புலிகளின் பதுங்கு நிலைகளை தாக்கியழிக்க முயன்றும் முடியாமல் போனதால், பதுங்கு நிலைகள் எனக்கூறிக்கொண்டு குடியிருப்புக்கள்மீது குண்டுகள் போடப்பட்டன. 32 கிராமங்கள்வரை குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டன. பொது மக்கள் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

புலிகளின் நிலைகள் அழிக்கப்பட்டன என்று அரச வானொலி அறிவித்தது.

கடலில் சென்ற மீன்பிடி வள்ளங்களும் விமானத்தாக்குதலுக்கு இலக்காகின. புலிகளின் படகுகள் தாக்கப்பட்டு தகர்க்கப்பட்டதாக கூறிவிட்டது அரசாங்கம்.

### அதிகாரி பலி

பலாலி இராணுவத் தளத்திலிருந்து புறப்பட்ட படையினருக்கு உதவ காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் தரை நகர்வை மேற்கொண்டனர்.

அதேநேரம் காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் யாழ் நகர் நோக்கி நகர்வு ஆரம்பமானது.

புலிகள் கடுமையாக எதிர்த்துப் போரிட்டனர். மகளிர் படையணியும் சமரில் ஈடுபட்டது. ஹெலி ஒன்று தாக்கப்பட்டது. மூன்று டாங்கிகள் சேதமாகின.

ஏழு பெண்புலிகள் உட்பட 42 புலிகள் பலியாகினர். படையினர் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகினர். பண்டார என்னும் படை அதிகாரியும் பலியானார்.

இம்மோதல் நடந்து கொண்டிருக்கையில் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையா வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

"சிங்கள இனவாத அரசு தமிழீழ மக்கள் மீதான தனது மூர்க்கத் தனமான இராணுவ வெறியாட்டத்தையும், திட்டமிட்ட சிங்கள மயமாக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்த அநியாய கொடுமையை முறியடிக்க விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்று திரண்டு வருகின்றனர்.

தமிழீழத்தின் அனைத்து வளங்களும், பலங்களும் விடுதலைப் போராட்டத்திற்கு சொந்தமானவை" என்று தெரிவித்திருந்தார்.

### மாகாணசபை தீர்வல்ல

11.07.90 அன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

மாகாணசபை முறையை நிராகரித்து அதில் கருத்துக் கூறப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்போவதாக பிதேமதாசா அரசு கூறியதை அடுத்தே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இருந்த முக்கிய விடயங்கள் வருமாறு:

"மாகாணசபை திட்டம் உருவான காலத்தில் இருந்தே இத் திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்த்து வருகிறது என்பதை எம் மக்கள் அறிவார்கள். இத்திட்டத்தால் எம்மக்களின் அபிலாசைகள் அங்கீகரிக்கப்படாததால் நாம் அதனை அன்றே நிராகரித்து விட்டோம்.

நாம் பிரேமதாசா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மாகாணசபை முறையை நிரந்தரமான தீர்வாக ஏற்கவில்லை. இதனை ஓர் இடைக்கால தீர்வாக ஏற்று தேர்தலை சந்திக்க முடிவெடுத்தோம்.

ஆயினும் மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத்துவதுடன், அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டமும் நீக்கப்பட வேண் டும் என்பதை முன் நிபந்தனையாக வலியுறுத்தி னோம்.

ஆனால் சிறீலங்கா அரசு எமது கோரிக்கைகளை தட்டிக்கழித்தது. காலம் கடத்தியது. பேச்சுக்கள் ஒருவருடமாக நீடித் தன.

தேர்தலுக்கு ஏற்ற நல்லெண்ணமும், சமாதான சூழலும் நிலவியபோது தேர்தலுக்கு சூழ்நிலை சாதகமாக இல்லை என்று கூறிவந்தார் பிரேமதாசா. இன்று முழு அளவிலான யுத்தம் ஒன்றை தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திக்கொண்டு தேர்தலுக்கு தயாரா? என்று சவால் விடுக்கிறார்.

### ஒற்றையாட்சி

இன்று எமது மக்களுக்கு எதிராக நடைபெறும் யுத்தமும், சிறீலங்கா அரச படைகளின் இன அழிப்பு நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்கு ஒரு அப்பட்டமான உண்மையை உணர்த்தியிருக்கிறது.

சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறையின்கீழ் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது என்பது நாற்பதாண்டு கால வரலாற்று அனுபவம். அந்த உண்மை மீண்டும் உறுதியாகியுள்ளது.

பிரேமதாசா அரசு தமிழ் மக்களுக்கு நீதி வழங்க முன்வருமானால், சிங்களப் பேரினவாதத்தின் சின்னமாக விளங்கும் ஒற்றை ஆட்சி முறையை மாற்றியமைக்க, பூரண அரசியல் அதிகாரங்கள் கொண்ட மாநில சுயாட்சி திட்டம் ஒன்றை ஏற்படுத்த முன்வரட்டும். அவ்வாறு செய்தால் நாம் அதனை பரிசீலிக்க தயாராக உள்ளோம்.

எமது மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமும், இன ஒழிப்புப் போரும் தொடருமானால், தமிழீழ சுதந்திர ஆட்சியை அமைக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக்குவரைத் தவிர எமக்கு வேறு வழியில்லை" என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### எதிர்க்கட்சி பிரசாரம்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் அப்போது தீவிரமான பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு வந்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருப்பதாகவும், தகவல் தொடர்பு சாதனம் மூலம் இருவரும் அடிக்கடி தொடர்புகொண்டு பேசிக் கொள்வதாகவும் சுதந்திரக் கட்சியினர் கூறிவந்தனர்.

அவர்களில் சிலர் உண்மையாகவே அவ்வாறு நம்பியும் இருந்தனர்.

பிரேமதாசாவை சந்திக்கவே மறுத்தவர் பிரபாகரன். தென்னிலங்கை அரசியல் தலைவர்களை நம்பவே முடியாது என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையும் கொண்டவர். அவரது நம்பிக்கை சரியானது என்பதை பிரேமதாசா அரசும் உறுதிப்படுத்தியது.

பிரபாகரனை தாம் சந்தித்த தமிழ் அரசியல் வாதிகள்போல நினைத்துவிட்டனர் தென்னிலங்கை அரசியல்வாதிகள். ஆயுதம் ஏந்திவிட்டு பாராளுமன்ற பாதைக்கு திரும்பிய தமிழ்க் கட்சியினரும் முன்னைய தமிழ் அரசியல் வாதிகள் போலவே நடந்து கொண்டனர். தென்னிலங்கை அரசியல் வாதிகளுடன் பேசும்போது ஒருவிதமாகவும் வெளியே அதற்கு மாறான வீரத்துடனும் பேசிவந்தனர்.

பிரபாகரனையும் அப்படியான ஒருவராக, சண்டையிட்டபடியே தனிப்பட்டரீதியில் பிரேமதாசாவுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடியவராக தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருதியதால்தான் தப்பான கதைகளை கூறியதுடன், தாமும் அதனை நம்பினார்கள்.

அத்தனையும் கற்பனை என்பதை காலம் பின்னர் நிரூபித்தது.

### முகாம்மீது குறி

வன்னியில் கொக்காவில் இராணுவ முகாம்மீது புலிகள் குறிவைத்தனர்.

தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டது.

முற்றுகையும், தாக்குதலுமாக இரண்டு நாட்கள் கடும் மோதல் நிகழ்ந்தது.

அதுபற்றி அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

## "புலிகளை ஒழிப்பேன்!"

வார்த்தைகளை மென்று முழுங்குகிற வழக்கமே அவரிடம் கிடையாது. போர் துவங்கிய பின், 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இல்லை. அவர் இடத்தில் இருப்பவர் ஒரு போலி' என்று இருவாரங்களுக்கு முன்பு உறுதியாக அறிவித்த இலங்கை பாதுகாப்புத் துணை அமைச்சர் விஜயரத்னே தன் கொழும்பு அலுவலகத்திலிருந்து முதன்மை நிருபர் ரமேஷ் மேனனிடம் பேசினார். பேட்டியிலிருந்து:

**கேள்வி: திரும்பவும் ஒரு யுத்தத்தை எதிர்பார்த்தீர்களா?**

பதில்: இல்லவே இல்லை. உண்மையில் அமைதிப்பேச்சு வார்த்தைகள் நடந்த சமயம் கிழக்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் ராணுவத்தை முகாம்களுக்கு அழைத்துக் கொண்டோம். விடுதலைப் புலிகளை நம்பினோம். அமைதி ஏற்பட எதையும் செய்யத் தயாராக இருந்தோம். ஆனால், புலிகள் முதுகில் குத்தி விட்டார்கள்.

**கே: போர் வெடித்ததற்குக் காரணம், அரசின் ஆத்திர மூட்டும் செயல் என்று புலிகள் கூறுகின்றனரே?**

ப: உண்மையில் நாங்கள் புலிகளிடம் மென்மையாக நடந்து கொள்கிறோம் என்று தொடர்ந்து குறைகூறப்பட்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு நிறைய இடம் கொடுத்த எங்கள் ஜனாதிபதி ஏமாளி என்று சொல்லப்பட்டார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் என்னைக் குற்றஞ்சாட்டியபோது நாடாளுமன்றத்திலிருந்தே வெளியேறக்கூடச் செய்திருக்கிறேன். ஆனால், அப்போதும் புலிகளுக்கு எதிராகப் பேச விரும்பவில்லை. பேச்சுவார்த்தைகளையும் முறிக்க விரும்பவில்லை. இதுதான் ஆத்திரமூட்டும் செயலா?

**கே: மட்டக்களப்பில் பொலிசுக்கும் ஒரு டெய்லருக்கும் இடையே ஏற்பட்ட வாய்ச்சண்டைதான் யுத்தத்தில் கொண்டு வந்துவிட்டது என்பதை நம்புகிறீர்களா?**

ப: யாராவது நம்புவார்களா? இதெல்லாம் பொலிஸ்மீதும், ராணுவத்தின் மீதும் தாக்குதல் தொடுக்க விடுதலைப் புலியினர் சொல்லும் சாக்குப் போக்கு.

**கே: எந்த நம்பிக்கையில் அவர்கள் போரில் இறங்கினார்கள்?**

ப: தங்களை இந்திய அமைதிப் படையாலேயே வெல்ல முடியவில்லை என்றால் வேறு ஒருவராலும் வெல்ல முடியாது என்று புலிகள் நினைத்தார்கள். ஆனால், அமைதிப் படையினர்



இந்திய ருடே சஞ்சிகைக்கு அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் பேட்டி. (ஜூலை 06-20.1990)

இங்கே சண்டைபோட வரவில்லை. அமைதி காக்கத்தான் வந்தனர். என்பதை புலிகள் மறந்து விட்டார்கள். அமைதிப்படை பொது மக்கள் பலியாவதை விரும்பவில்லை.

**கே: அப்புறம் ஏன் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும்?**

ப: அமைதிப்படையை வெளியேற்ற வேண்டும் என்றால் இது ஒன்றுதான் வழி. அதைத்தான் செய்தார்கள். அது அவர்களுக்கு வாழ்வா, சாவா பிரச்சனை.

**கே: இது தீர்த்துக்கட்டும் யுத்தமா?**

ப: நாங்கள் யாரையும் தீர்த்துக் கட்ட விரும்பவில்லை. இன்றைக்கு புலிகளுடன் சண்டையிடுகிறோம் என்றால் அந்த நிலைக்கு அவர்கள் எங்களைத் தள்ளினார்கள். அவர்கள் காவல் நிலையம், ராணுவ முகாம்களில் நுழைந்து எங்கள் ஆட்களைக் கொன்று குவித்தால் நாங்கள் கை கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்து இருக்க முடியாது.

**கே: இன்னொரு போர் நிறுத்தம் இருக்குமா?**

ப: ஆயுதங்களைக் கைவிட்டு நிபந்தனைகளின்றிப் பேச்சுவார்த்தைக்கு உடன்படும் வரை இருக்காது.

**கே: புலிகளைத் திரும்பவும் நம்புவீர்களா?**

ப: மாட்டேன். எப்படி முடியும்?

**கே: கிழக்கையும், வடக்கையும் எப்போது உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவீர்கள்?**

ப: எல்லாம் புலிகளைப் பொறுத்திருக்கிறது. முதலில் கிழக்கில் காலூன்றிக்கொள்ள கவனம் செலுத்துவதால் வடக்கை எங்கள் பிடிக்குள் கொண்டுவர சிறிது காலம் பிடிக்கும். அதில்தான் இப்போது இறங்கியிருக்கிறோம். ஜே.வி.பி.க்களை நான்தான் ஒழித்துக் கட்டினேன். நான் புலிகளையும் ஒழித்துக் கட்டுவேன்.

**கே: புலிகளைக் குறைத்து மதிப்பிட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?**

ப: முக்கியமான உறுப்பினர்களை அமைதிப்படை அழித்துவிட்டது. மிஞ்சியிருப்பது சின்னப் பசங்களைக் கொண்ட 'குழந்தைகள் படை'. என்னுடைய படையை அவர்கள் சந்திக்கும்போது அவர்கள் தங்கள் உடையிலேயே சிறுநீர் கழிக்கப் போகிறார்கள்.

**கே: இந்தியாவின் உதவியை மறுபடியும் கோருவீர்களா?**

ப: நாங்களே ஒரு கை பார்த்துவிட முயற்சிக்கிறோம். மற்ற நாடுகளை நம்பியிருக்க மாட்டோம். முடியாது. 1987-ல் இருந்ததைப் போலல்லாது இப்போது எல்லா தமிழர் குழுக்களும் எங்கள் பக்கம். புலிகளால் அழிக்கப்பட்டு விடுவோம் என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

**கே: இவ்வளவு பெரிய தாக்குதலுக்கு எங்கிருந்து ஆயுதங்களும், வெடிமருந்துகளும் உங்களுக்குக் கிடைக்கும்?**

ப: எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் வாங்குவோம். இப்போதைக்குப் போதுமானது இருக்கிறது. தேவைப்படும்போது எங்கள் ஸ்டாக்கைக் கூட்டிக்கொள்வோம்.

**கே: அதற்குத் தேவையான பணம்?**

ப: நாடாளுமன்றம் ஏற்கனவே இதற்கென்று 500 கோடி (5 பில்லியன்) ரூபாயை அனுமதித்துவிட்டது. மற்றவர்களிடம் கையேந்தாமல் தேவைப்படும் நிதியைத் திரட்டுவோம்.

**கே: போருக்குப் பிந்தைய விளைவுகள் என்னவாக இருக்கும்?**

ப: புலிகளுக்குப் புரிய வைப்போம். துப்பாக்கி முனையில் ஒரு அரசாங்கத்தைத் தூக்கிச் சாப்பிட்டுவிட முடியும் என்று அவர்கள் நினைத்தால் அது பெரிய முட்டாள்தனம்.

# மலையகம் புலியகமாகுமா?

## அலசுவது- இராஜதந்திரி

மலையகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரசன்னம் ஆட்சியாளர்களை மட்டுமன்றி மலையக அரசியல்வாதிகள் சிலரையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

குட்டக் குட்டக்குனிபவர்களாக கருதப்பட்ட மலையக தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களில் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழவே செய்தனர்.

எனினும் சரியான போர்க்குணமிக்க தலைமைத்துவம் இல்லாத காரணத்தால் மலையக மக்களின் எழுச்சிகள் போதிய வளர்ச்சியடைய முடியாமல் போய்விட்டன.

மலையக தமிழ் மக்களை நாடற்றவர்களாக்கிய பேரினவாத அரசியல் கட்சிகள் பின்னர் அம் மக்களின் வாக்குகள் தமக்கு தேவையான சூழலில் பிரஜா உரிமை வழங்கவும் செய்தன.

ஜே.ஆர்.ஜயவர்த்தனே, ரணசிங்க பிரேமதாச ஆகியோர் மலையகத் தமிழ் வாக்கு வங்கிகளை கவர்ந்து கொள்வதன் மூலமே அறுதிப் பெரும்பான்மை பெறமுடியும் என்ற சூட்சுமத்தை உணர்ந்து கொண்டனர்.

அதன் காரணமாகவே, தங்கள் நலன் பொருட்டு மலையகத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை வழங்கியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கூட்டாளியாகவும், ஆட்சியில் ஓர் பங்காளியாகவும் இருந்த தொண்டமானின் ஏற்பாட்டிலேயே பிரஜா உரிமை வழங்கும் முடிவுகள் எடுக்கப்படுவதாகவும் அன்றைய ஆட்சியாளர்கள் காண்பித்திருந்தனர்.

அவ்வாறு காண்பித்தால்தான் தமது பங்காளியான தொண்டமானுக்கு மலையகத் தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு தொடர்ந்திருப்பதோடு, மேலும் வலுப்பெறும். அவ்வாறு வலுப்பெற்றால் அவர் ஊடாக மலையக தமிழ் வாக்கு வங்கிகளை இழுப்பது சுலபம் என்பதே ஜே.ஆர் மற்றும் பிரேமதாசா போன்ற அரசியல் சாணக்கியர்களின் ...ரமாக அமைந்திருந்தது.

மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கிய சிங்களத் தலைமைகள் மலையகத் தமிழர்களை நேரடியாக அணுகி வாக்குக் கேட்பார்களேயானால், போதிய பயன் கிடைக்கமாட்டாது என்பது தெரிந்ததே.

அதனால், தமிழ்த் தலைமை ஒன்றின் ஊடாக தமக்கு தேவையான வாக்குவங்கிகளை கவரும் உத்தியையே மலையகத்தில் பயன்படுத்தி வந்தது ஐக்கிய தேசியக் கட்சி.

அதன் நிமித்தமே சௌமியமூர்த்தி தொண்டமான் மலையக தமிழர்கள் மத்தியில் பெரும் தலைவராக நிலைப்பதற்கு ஏற்ற உதவிகளைச் செய்து வந்தது.

மலையகத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை பெற்றுக் கொடுத்தோம், ஊதிய உயர்வு பெற்றுக் கொடுத்தோம் என்றெல்லாம் கூறிக்கொள்வதோடு, அரசோடு ஒத்துழைப்பதாலும், அமைச்சர் பதவி வகிப்பதாலுமே மேற்கண்டவற்றை தம்மால் பெற்றுத்தர முடிந்தது என்றும் தொண்டமான் அடிக்கடி கூறுவதும் ...தானிக்கத்தக்கதாகும்.

சௌமிய மூர்த்தி தொண்டமானும், அவரது இ.தொ.கா.வும் ஐ.தே.கட்சி ஆட்சியில் பங்காளிகளாக இருந்தமையால் மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததைவிட, தனிப்பட்ட ரீதியில் அவர்கள் பெற்றுக் கொண்ட பலாபலன்கள் ஏராளம்.

பல கோடி ரூபாய் ஊழல் தொடர்பாக தொண்டமான்மீது இன்றைய அரசு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்போவதாக முன்னர் செய்திகள் வெளியாகின. அதன் பின்னரே இன்றைய ஆட்சியாளர்களுடன் கைகோர்த்துக் கொண்டார் தொண்டமான்.

பிரஜா உரிமை பெற்றுக் கொடுத்தோம், வீட்டுறுதி பெற்றுக் கொடுத்தோம், சம்பள உயர்வு பெற்றுத் தந்தோம் என்றெல்லாம் தொண்டமான் போன்றோர் பட்டியலிட்டாலும் மலையகத் தமிழர்களின் வாழ்க்கை நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மலையகத்தில் உள்ள கல்விக் கூடங்கள் முதற் கொண்டு, அரச அலுவலகங்கள் வரை மலையகத் தமிழர்களின் முதுகில் சவாரி செய்து கொண்டிருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு மேலே மலையகத் தமிழ் மக்கள் கல்வியிலோ, பொருளாதார ரீதியிலோ முன்னேற்றம் காண்பது அவர்கள் முதுகில் சவாரி செய்ய விரும்பும் சகல தரப்பினருக்கும் அச்சுறுத்தலேயாகும்.

அதன் காரணமாகவே மலையக கல்விக் கூடங்கள் ஊழலின் ஊற்றுக்கண்களாக மாறுவது குறித்தோ, கல்வி கற்பித்தலின் தரம் வீழ்ச்சியடைந்து இருப்பது தொடர்பாகவோ மலையகத் தலைமைகள் பெரிய அக்கறை எதனையும் காண்பிப்பதில்லை.

நாட்டின் இனப்பிரச்சனை என்பது முழு நாட்டிலும் உள்ள தமிழ் மக்களும் முகம்



கொடுக்கும் பிரச்சனையாகும்.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் முதற்குறியாக இருந்தவர்கள் மலையகத் தமிழர்களேயாவர். எனவே, இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என்ற பாகுபாடுகள் எதுவுமின்றியே பேரினவாதம் தன் நச்சுப்பற்களால் ஒட்டுமொத்தமாக முழுத் தமிழ் பேசும் மக்கள்மீதும் கடித்து வருகிறது.

ஆனால், தொண்டமானும் அவரது சீடர்களும் இனப் பிரச்சனை என்பது தனியே வடக்கு-கிழக்கு மக்களுக்குள்ள பிரச்சனை போன்றும், மலையகத் தமிழர்களது பிரச்சனை வேறு என்பதுபோன்றும் சித்தரிக்க முனைகின்றனர்.

அவ்வாறு சித்தரிப்பதால், இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் இருந்து ஒதுங்கி இருக்கலாம் என்பதே அவர்களது எண்ணமாக இருந்து வருகிறது.

இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை முதன்மைப்படுத்தினால் அரசுடன் நேரடியாக முரண்பட நேரும் என்பதும், அவ்வாறான சூழலில் மந்திரிப் பதவிகள் போன்றவை எட்டாக்கனிகளாகிவிடும் என்பதுமே அவர்களுக்கு ஏற்படும் கலக்கமாகும்.

அதுமட்டுமன்றி வடக்கு-கிழக்கில் முன்னாள் மிதவாத தமிழ்த் தலைமைகளுக்கு நேர்ந்த அனுபவமும் தொண்டமான் போன்றோருக்கு வயிற்றில் புளியைக் கரைக்கக்கூடியதேயாகும்.

இனப்பிரச்சனையை முதன்மைப்படுத்தி, இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்த கூட்டணியினர், பின்னர் ஒரு வரையறைக்கு மேலே செல்ல முடியாதவர்களாயினர்.

இந்தியாவில் திராவிட நாடு கேட்ட தி.மு.க.வும் அதன் தலைவர்களும் பின்னர் ஒரு கட்டத்தில் அக் கோரிக்கையை கைகழுவினார்கள். அடைந்தால் திராவிட நாடு, இல்லையெனில் சுடுகாடு என்றவர்கள், பின்னர் இந்தியா ஒரே நாடு, அதுவே எங்கள் தாய்நாடு என்றனர்.

அதே போலவே தமிழ் ஈழக் கோரிக்கையை ஒரு கட்டத்தில் கைவிடலாம் என்று எண்ணியிருந்த கூட்டணியினருக்கு, இங்கு அனுபவம் நேர்மாறாக இருந்தது.

தமிழ்நாடு அல்லது சுடுகாடு என்றுவிட்டு பின்னர் தடுமாறிய தலைமையை அதனால் வளர்க்கப்பட்ட இளைஞர்களே சுடுகாட்டுக்கு அனுப்ப தீர்மானித்தனர். சிலர் அனுப்பவும் பட்டனர்.

இந்த அனுபவமானது, மலையகத்தில் இளைஞர்களை இன ஒடுக்கு முறைக்கு எதிராக திரட்டினால் பின்னர் தமக்கே ஆபத்தாக முடியும் என்பதையும், தம் பதவிகளுக்கு குழிபறிப்பதாகிவிடும் என்றும் தொண்டமான் போன்றோருக்கு உணர்த்திவிட்டது.

மலையகத் தமிழர்கள் இருவித ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கின்றனர். தமிழர்கள் என்ற ரீதியில் இனரீதியான ஒடுக்குமுறைக்கும், தோட்டத் தொழிலாளர்கள் என்ற ரீதியில் சுரண்டல் ஒடுக்கு முறைக்கும் உள்ளாகின்றனர்.

இந்த இரட்டை ஒடுக்குமுறையில்

## அரசு+தொண்டா=கூட்டுப்பிரசாரம்

தொழிலாளர் என்ற ரீதியில் எதிர்கொள்ளும் சுரண்டல் ஒடுக்குமுறைக்கு எதிராக மட்டுமே மலையக தொழிற்சங்கங்களும், அரசியல்வாதிகளும் குரல் கொடுத்துவருகின்றனர். இடைக்கிடையே வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

அப் போராட்டங்கள்கூட முடிவில் இ.தொ.கா.விற்கும் தோட்ட முதலாளிகளுக்கும் இடையேயான இரகசிய பேரங்கள் காரணமாக காட்டிக் கொடுக்கப்பட்டதை சமீபத்தில் கண்டிருந்தோம்.

தோட்ட முதலாளிகளுக்கும் மலையக தொழிற் சங்கங்களுக்கும் இடையே திரைமறைவில் நல்லுறவு நிலவுகிறது. ஒரு குறிப்பிட்ட தொகையான நிதியை பலமான தொழிற்சங்களுக்கு முதலாளிகள் கொடுத்து வருகின்றனர்.

தொழிலாளர்களிடம் சந்தாவாக பல இலட்ச ரூபாய்களை மாதாந்தம் பெற்றுவரும் பிரபல தொழிற் சங்கம் தொழிலாளர்களின் பலம் தமக்கிருப்பதை காண்பித்து தோட்ட முதலாளிகளிடமும் நிதி என்ற பெயரில் பல லட்சங்களை கறந்து கொள்கிறது.

அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் பிணக்குகள் ஏற்படும்போது தொழிலாளர்களை வைத்து வேலை நிறுத்தம் செய்வர், பின்னர் திரைமறைவில் பிணக்குகளை முடித்துக் கொண்டு முதலாளிகளுடன் சமரசமாகி போராட்டத்தை நிறுத்திக்கொள்கின்றனர்.

போலியான வீட்டுறுதியை வழங்கி ஆர்ப்பாட்டமாக விழா நடத்தி மலையகத் தமிழர்களை தொண்டமானும் அரசும் இணைந்து அப்பட்டமாக ஏமாற்றியுமுள்ளனர்.

வழங்கப்பட்ட வீட்டுறுதிகள் போலியானவை என்று தெரியாத மலையக தமிழர்கள் பலர் தமக்கும் தனிப்பெரும் தலைவர் வீட்டுறுதி பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையோடு இருந்து வருகின்றனர்.

மலையகத் தமிழர்கள் மீதான இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும், பொருளாதார ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடும் அமைப்பாக உருப்பெற்ற மலையக மக்கள் முன்னணியும் இன்று உருமாறிவிட்டது.

ஆனால், மலையகத் தமிழர்கள்மீதான இனரீதியான ஒடுக்குமுறைகள் வளர்ந்துவருகின்றன. தினமும் மலையகத்திலும் அதற்கு வெளியேயும் மலையக தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். சிறைகளில் விசாரணையின்றி பல்லாண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர்கள் மீதான பேரினவாத வெறுப்புணர்வும், அவர்களை இந்த நாட்டுக்கு அந்நியமானவர்களாகவே கருதும் பேரினவாத ஆதிக்கமனோபாவமும் முன்பைவிட மேலோங்கியுள்ளதே தவிர குறைந்தபாடில்லை.

தமது பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் பெறுவது முதற்கொண்டு, அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்றவற்றை பெறுவதுவரை இனரீதியான பிரச்சனைகள் பலவற்றுக்கு அவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இவற்றையெல்லாம் தீவிரமாக எதிர்க்கத் தொடங்கிவிட்டால், இளைஞர்கள் போராளிகளாக மாறிவிடுவர் என்று மலையகத் தலைமைகள் கருதி வந்தன.

அவர்களது அத்தகைய நினைப்பு நேர்மாறான விளைவையே ஏற்படுத்தியிருக்கிறது. தங்கள் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதற்கு மலையக அரசியல்வாதிகளுக்கு திராணியில்லை என்று தெரிந்ததும், மலையக இளைஞர்கள் பலர் புலிகளை நாடத் தொடங்கிவிட்டனர்.

மலையகத்தில் இருந்து பதுளை வழியாக மட்டக்களப்புக்கு சென்று ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர். வன்னிக் களத்தில் போர் அனுபவமும் பெற்று வருகின்றனர்.

கரும்புலியாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

கண்டி தலதா மாளிகைத் தாக்குதலில் பலியான கரும்புலிகளில் ஒருவராவது மலையகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் சந்தேகம் நிலவி வருகிறது.

பதுளை மின்மாற்றித் தகர்ப்பு உட்பட மலையகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் விரிவாகத் தொடங்கியபோது அதனை மறைக்கவே அரசு முயன்றது. புலிகள் அல்லாத சக்திகளின் கைவரிசை என்று காண்பிக்கவே முனைந்தது.

புலிகள் மலையகத்திலும் தோன்றிவிட்டனர் என்று தெரிந்தால் மலையக தோட்டத் தொழிற்துறை, உல்லாசப் பயணத்துறை போன்றவை பாதிக்கப்படும் என்று கருதியே மூடி மறைக்க முனைந்தனர்.

ஆனால், மலையகத்தில் புலிகளின் தளம் விரிவாகி வருவதாக அறிந்ததும் வேறு வழியின்றி மலையகத்தில் புலிகள் இருப்பதாக அரசே கூறவேண்டியதாகிவிட்டது.

அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் மலையகத்தில் புலிவேட்டை நடத்தினால் அதிருப்திகள் அதிகமாகும் என்பதாலேயே அதனை ஒப்புக்கொண்டது அரசு.

ஆனால் அரசும், தொண்டமானும் மலையகத்தில் புலிகள் ஊடுருவல் என்ற பதத்தையே பயன்படுத்தி வருகின்றனர். அது தவறானதாகும்.

மலையகத் தமிழ் இளைஞர்களே புலிகளாக மாறி, மலையகத்தில் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் பங்குகொண்டுள்ளனர்.

அந்த உண்மையை ஒப்புக் கொண்டால், தங்கள் இயலாமை அம்பலமாகிவிடும், மேலும் இளைஞர்கள் புலிகளாகும் நிலை விரைவுபடுத்தப்படும் என்று அஞ்சியே தொண்டமான் ஊடுருவல் என்ற பதத்தை பயன்படுத்தி உள்ளார்.

மலையக தமிழ் இளைஞர்களை காரணமின்றி கைது செய்து உடல், உளரீதியாக வதைக்கும் அவசர காலச் சட்டத்தை தொண்டமானும், சந்திரசேகரனும் தொடர்ந்து ஆதரித்தே வருகின்றனர்.

அரசை எதிர்க்கத் துணியாத வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளை கிண்டல் செய்வதன் மூலம், அரசுக்கு தனது முண்டு கொடுப்பை மறைக்க முற்பட்டு வருகிறார் தொண்டமான். ஆனால், பேரினவாத சந்திகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ள இன்றைய அரசுக்கு முண்டு கொடுக்கும் வரலாற்றுத் தவறுக்கு தொண்டமான் உட்பட சகல தமிழ்க் கட்சிகளுமே பொறுப்பாகும்.

பிரபாகரனையும், புலிகளையும் புகழ்ந்து பேசுவதன்மூலம் தன்னை தன்மானத் தமிழ்த் தலைவராக மலையகத் தமிழர்களிடம் காணபித்துக் கொள்வதுதான் தொண்டமானின் நோக்கமாக இருந்து வந்திருக்கிறது.

மலையகத்தில் இன ஒடுக்குமுறைக்கான போராட்டத்தை தலைமையேற்று நடத்த முடியாத சுயநல அரசியலுக்கு, பிரபாகரனை புகழ்வதன்மூலம் தன்மான சாயம் பூசுவதே தொண்டமானின் சாணக்கியமாக அமைந்திருந்தது.

அந்த சாணக்கியத்தின் சாயம் தற்போது வெளுத்திருக்கிறது. மலையகத்தில் புலிகள் உருவாகத் தொடங்குகின்றனர் என்பதை அறிந்ததும் தொண்டமான் கரணமடித்திருக்கிறார்.

புலிகளின் கொலைப்பட்டியலில் தொண்டாவின் பெயர் இருப்பதாக அரசின் புலனாய்வு அமைப்புக்கள் கண்டுபிடித்திருப்பதாக கூறப்படுவதை மறுக்க அவர் முன்வரவில்லை. 'இருக்கலாம்' என்ற தொனியில் கருத்துக் கூறியுள்ளதுடன், யுத்தத்தை முனைப்பாக்கும் திட்டத்தோடு மாகாணசபை தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டதற்கும் வக்காலத்து வாங்கியுமுள்ளார்.

மலையகத் தமிழர்கள் மத்தியில் புலிகள்மீது வெறுப்பை ஏற்படுத்த அரசும், தொண்டாவும் இணைந்து நடத்தும் நாடகம்தான் கொலைப்பட்டியல் பிரசாரமோ என்ற சந்தேகமும் தோன்றாமல் இல்லை.

மலையகத்தில் புலிகள் தோன்றுவதைப் பொறுத்தளவில் அரசுக்கும், தொண்டமானுக்கும் இடையே பொது இணக்கம் ஏற்படுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். ஏனெனில் இரு தரப்பு நலனுக்குமே மலையக தமிழ் இளைஞர்களின் மத்தியில் ஏற்பட்டுவரும் மனமாற்றம் ஆப்பு வைக்கக்கூடியது.

ஹட்டன் ரயில் பாதை குண்டுவெடிப்பில் அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டனர். தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர்கூட கைதானார். அந்த விடயத்தில் தொண்டமானும் அவரது சீடர் சந்திரசேகரனும் மௌனம் அனுஷ்டித்தமையானது அவர்கள் புலிகளை மட்டுமல்லாமல், ஏனைய தொழிற்சங்கங்களை புலிவேட்டை என்ற பெயரில் நசுக்குவதையும் உள்ளூர விரும்புகின்றனர் என்பது புலனாகியது.

இதே சந்திரசேகரனும் புலிகளுக்கு உதவியபோது கைதாகி சிறையில் இருந்தபோது, தொண்டமான் மறைமுகமாக சிறைவாசம் நீடிக்கத் தூண்டியதாக அப்போது மலையக மக்கள் முன்னணி புலம்பித் திரிந்தது. இப்போது சந்திரசேகரனும் குட்டித் தொண்டமானாகிவிட்டார்.

ஆனால், மலையகத்தில் புலிவேட்டை தொடரும்போது, மலையக அரசியல் வாதிகளும், அரசும் எதிர்பார்ப்பதற்கு மாறான விளைவுகளே ஏற்படக்கூடும். மலையகத்தை புலியகமாக மாற்றும் பொறுப்பை அரசு ஏற்கப் போகிறதா? என்பதை தேடுதல் வேட்டைக்கும் காரணமற்ற கைதுகளுக்கும் முன்னர் சிந்திப்பது நன்று.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### ஆலயம் கட்டும் இயக்கம்

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கடைகளில் ஆயிரம் ரூபா வசூலித்து வருகிறது. வவுனியா பூந்தோட்டம் அருகேயுள்ள கிராமப்புறங்களுக்குச் சென்று ஆலயம் கட்ட சீமெந்து வசூலிக்கின்றனர். வசதியானவர்கள் 25 முதல் 50 சீமெந்து பைகள் வாங்கித்தர வேண்டுமென்று கட்டளையாம். முன்னர் ஆயுதம் வாங்க என்று வாங்கினார்கள், இப்போது ஆலயம் கட்டவென்று வாங்குகின்றனர்.

எல்லாம் சரி, இவர்கள் செய்யும் திருப்பணிகளுக்கு புண்ணியம் சேருமா? என்று ஒரு ஆன்மீகவாதியிடம் கேட்டதற்கு அவர் சொன்னார்: "தெருத் தேங்கையை எடுத் வழிப்பிள்ளையாருக்கு அடிக்கிறார்கள். புண்ணியம் எட்டியும் பார்க்காது!"

●□●

புலிகளும், ரெலோவும் அந்தக் காலத்தில் இனவாத இயக்கங்களாக கூறப்பட்டன.

"இவர்களுக்கு பரந்த கண்ணோட்டம் கிடையாது. தமிழ் இனவெறிதான் இருக்கிறது. நாம் அப்படியல்ல. பாலஸ்தீனத்தில் ஒரு பிரச்சனை என்றாலும் அதனை எமது பிரச்சனையாக கருதுபவர்கள். சிங்கள மக்களை நாம் வெறுக்கவில்லை. சிங்களத் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரிப்பவர்கள். எமக்கு இருப்பது சர்வதேசியக் கண்ணோட்டம்!"

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய இயக்கங்கள்தான் மேற்கண்டவாறு அன்று கூறின. தங்களை இடதுசாரிகள் என்று நிரூபிக்க இருந்த இரு இயக்கங்களுக்கும் இடையே போட்டா போட்டியும் இருந்தது. ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பில் இருந்து பிரிந்து வந்து அதைவிட இடதுசாரிகள் நாமே என்றவர்கள் ஈ.பி.டி.பி.யினர்.

இப்படியாகப்பட்டவர்கள் எல்லாம் இன்று கூறும் கருத்துக்கள் நகைப்புக்கு இடமாக இருக்கின்றன. இவர்கள்தானா முன்னர் இடதுசாரிகளாக தங்களை கூறிக்கொண்டனர் என்று ஆச்சரியமாகவும் இருக்கிறது.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்தது பற்றி புளொட் தலைவர் சித்தார்த்தனிடம் பத்திரிகை ஒன்று அபிப்பிராயம் கேட்டிருந்தது.

"அது தென்னிலங்கைப் பிரச்சனை. அவர்கள் ஒத்திவைத்தால் என்ன, நடத்தினால் என்ன? நமக்கு அக்கறை கிடையாது!" என்று கூறியுள்ளார்.

ஏனைய கட்சிகளது தலைவர்களும் இதே போன்ற கருத்துடன்தான் மௌனமாக இருக்கின்றனர்.

முதலாவது விஷயம், தேர்தல் ஒத்திவைப்பு என்பது தமிழ் பேசும் தரப்புடன் தொடர்பற்ற விடயமல்ல. தமிழ் பேசும் தரப்பின் பலத்தின் முதுகெலும்பை முறிக்கத் துடிக்கும் பேரினவாத ஆசையுடன் இரண்டறக்கலந்ததே தேர்தல் ஒத்திவைப்பு.

ஒரு வாதத்துக்காக, தமிழ் பேசும் தரப்புடன் தொடர்பில்லாத பிரச்சனை என்று வைத்துக் கொண்டால்கூட தமிழ்க் கட்சிகளுக்கு அதில் அக்கறை இல்லாமல் இருப்பது சரியா?

ஆம், எனில் இவர்களது பரந்த கண்ணோட்டம் சுருங்கிப்போய்விட்டதா? இவர்களும் தாம் முன்னர் கூறியதுபோலவே தமிழ் இனவாதிகளாக மாறிவிட்டனரா? அப்படியானால் ஐக்கிய இலங்கை என்று இவர்கள் கூறுவது பம்மாத்தா? ஐக்கிய இலங்கை என்றால் சிங்கள மக்களும், நாமும் சகோதரர்கள். ஒரு நாட்டு மக்கள். அவர்களுக்கு ஒரு துன்பம், தொல்லை என்றால் அது நமக்கும் வந்தது போன்றதன்றோ?!

புலிகளைவிட இன்னொரு இயக்கமாக தனித்திருக்க இவர்கள் முன்னர்கூறிய தனித்துவமான, இடதுசாரித்தனமான கருத்துக்கள் எல்லாமும் இவர்களால் கைகழுவப்பட்டுவருகின்றன. இப்போது இவர்களிடம் இழப்பதற்கு மிஞ்சியிருப்பது பதவி ஆசையும், அரசிடம் நல்ல பெயர் எடுக்க புலி எதிர்ப்பு கோஷமும் மட்டுமே!

அதெல்லாம் இருக்க, அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் அவருக்கு ஆதரவாக தமிழ்க் கட்சிகள் வாக்களித்தன. அது என்ன வடக்கு-கிழக்குப் பிரச்சனையோ?

சரி: உண்மை என்ன?

வடக்க-கிழக்குப் பிரச்சனையில் சில சந்தர்ப் பங்களில் அரசை கண்டித்து காட்டமாக அறிக்கைவிடலாம். அம்மையார் கண்டறிந்து கேட்டால் "ஹி..ஹி...ஹி.... அரசியலுக்காக...." என்று கூறி சமாளிக்கலாம்.

ஆனால், தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பாக எதிராக கருத்துக் கூறினால், அதனை ஐ.தே. கட்சிக்கு சார்பான கருத்து என்று அம்மையார் எடுத்துக் கொள்வார். சமாளிக்க முடியாது. உறவைக் கெடுத்துக் கொள்வானேன்? என்றுதான் நழுவியுள்ளனர். அதுதான் உண்மை.

அதனை மறைக்க ஏதோ தமிழர் பிரச்சனை என்றால் மட்டும் பொங்கி எழுந்துவிடுகிறவர்கள் போல கருத்துக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நன்றாக பூச்சுற்றுகிறார்கள். ஆனால், தமது காதில் தாமே சுற்றிக் கொள்கிறார்கள். அதுதான் வேடிக்கை.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 23

# இடி அமீன்

**கடந்தவாரம்**

**இடி அமீனின் மனைவி சாரா, பதவி உயர்வுக்காக சிபாரிசு செய்த மூன்று கம்பீர இளைஞர்கள்மீதும் அமீனுக்கு சந்தேகம். மூவரும் கோரமாகக் கொல்லப்படுகின்றனர். பதவி உயர்வு கொடுத்து சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டதாக சாராவுக்கு அறிவிக்கிறான் இடி அமீன்.**

**இனி....**

இடி அமீன் ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கவனிப்பதற்கான பிரிவின் தலைவனான மலையமுங்கு மகா கொடூரன்.

இடி அமீன்கூட அவனது கொடூரத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறான்.

மலையமுங்குமீது இடி அமீனின் பார்வை கிடைத்ததுக்குக் காரணம், அவனது அழகான சகோதரி.

இடி அமீன் உகண்டா அதிபரானதும் உயர்தர விருந்துக் கேளிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டி ஏற்பட்டது.

அவ்வாறு கலந்து கொள்ளும்போது ஆங்கில நடனம் ஆடத்தெரிந்திருந்தால், பெரும் சீமாட்டிகளின் இடைகளை வளைத்தபடி நடனமாடலாம். ஆடியபடியே தன்னை நாடிவரவும் வைக்கலாமே என்று நினைத்தான் அமீன்.

நடனம் கற்றுக்கொள்ள ஆள் தேடியபோது சிலரைக் கொண்டுவந்து அவன் முன் நிறுத்தினார்கள் உதவியாளர்கள். அத்தனைபேரும் ஆண்கள். அமீனுக்கு மூக்கின்மேல் கோபம்.

**"மடையர்களே, நடனத்தை ஆண்களிடம் கற்றுக்கொள்வதில் என்ன சுவாரசியம் இருக்கப் போகிறது? கற்றுக்கொடுக்கவும் வசதியாக நடன ஆசிரியையாகப் பாருங்கள்!"** என்றான்.

என்றதும், எங்கும் தேடியதில் கிடைத்தவள்தான் ரீனா! அவளது அண்ணன் மலையமுங்கு, அப்போது, கம்பாலாவின் புறநகர்ப் பகுதியில் இருந்த 'நியான்ஸா துணி ஆலை'யில் வாயிற்காப்பாளனாகப் பணியாற்றினான்.

ரீனாவை பார்த்ததுமே அமீனுக்குள் பற்றிக் கொண்டது ஆசை. நீவிவிட்ட குதிரைமாதிரி அவள் நடந்து வந்தபோதே, மனதிற்குள் கட்டில் போட்டு அவளை ஆக்கிரமித்துக் கொண்டான்.

நடனத்தை அவள் கற்றுத்தரும்போதே அமீன் அவளிடம் தனக்குப் பிடித்த இடங்களைத் தொட்டுப்பார்க்க, அவளும் அனுமதிக்க, அமீனின் கட்டில் இருவரையும் எடை பார்த்தது.

ரீனா புத்திசாலி. அமீனை அளந்து கொண்டு, அவனுக்கேற்ப நடந்து கொண்டு, கைக்குள் போட்டுக்கொண்டாள். சில புது அனுபவங்களையும் கொடுத்தாள்.

ரீனாவுடன் ஒரு தடவை அவளது சகோதரன் மலையமுங்குவும் கூட வந்திருந்தான். காட்டெருமை மாதிரி இருந்த அவனது தோற்றம் அமீனுக்கு பிடித்திருந்தபோதும், ரீனாவுடன் சேர்ந்து வந்ததால் சந்தேகப்பட்டான்.

அந்த சந்தேகத்துடனேயே ரீனாவின் கண்களை நேராகப் பார்த்தபடி **"இது?"** என்றான்.

"என் சகோதரன், மலையமுங்கு," என்ற பதிலுக்கு திருப்தியாகி, **"என்ன வேலை செய்கிறாய்?"** என்றான்.

"துணி ஆலையில் வாயிற்காப்பாளன்!" என்றாள் ரீனா சற்றுச் சோகமாக.

சட்டென்று மலையமுங்குவிடம் அமீன்; **"என் ஆட்சி உனக்குப் பிடித்திருக்கிறதா?"** என்றான்.

அக்கேள்விக்கு ரீனாவே பதில் சொன்னாள்: "உங்கள் படத்தை வீட்டில் மாட்டிவைத்திருக்கிறான். அத்தனை பற்றுதல்!"

அடுத்த நொடியே அவர்கள் இருவரும் எதிர்பாராத வார்த்தைகளை உதிர்த்தான் அமீன்:

**"நாளை முதல் நீ இராணுவத்தில் சேர்கிறாய். மூன்று மாதம் பயிற்சி. பின்னர் உயர்ந்த பதவி தருகிறேன். உன் விசுவாசத்தைக் காட்டு. உனக்கு அதிஷ்டம் உன் சகோதரி ரூபத்தில் வந்திருக்கிறது!"** என்றான்- இடியாய் நகைத்தான்.

அன்றிலிருந்து ஐந்து மாதத்தில் மலையமுங்குவுக்கு, இடி அமீன் ஆட்சிக்கு எதிரானவர்களை கவனிக்கும் பிரிவின் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு கிடைத்தது. அவனுக்காகவே அப்பிரிவை புதிதாக உருவாக்கித் தந்தான் அமீன்.

இடி அமீனே பிரமிக்கும்படி விசுவாசத்தையும், கொடூரத்தையும் காண்பித்தான் மலையமுங்கு.

மலையமுங்குவை இடி அமீன் உடனே வரச்சொன்னதற்குக் காரணம் மசாகா நகர மேயர் ஃபிரான்ஸிஸ்.

'ஃபிரான்ஸிஸ் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயுடன் இரகசியத் தொடர்பு வைத்திருக்கிறார். எதிர்காலத்தில் ஆட்சிக்கு எதிரான சக்திகளை ஒன்றுதிரட்டும் திட்டமும் வைத்திருக்கிறார்!' என்று அமீனுக்கு உளவுப்பிரிவு தகவல் கூறியது.

அந்தத் தகவலை ஆராயத்தான் மலையமுங்குவை அழைத்திருந்தான் அமீன்.

"ஃபிரான்ஸிஸ் மக்களால் தெரிவான நகரமேயர். அதனால் கைவைக்கும்போது மக்கள் நம்மீது கோபப்படாதளவுக்கு கை வைக்கவேண்டும்!" என்ற அமீன், அதற்குரிய திட்டத்தையும் போட்டுக்கொடுத்தான்.

இரவோடு இரவாக நகர மேயரின் அலுவலகத்தில் கைக்குண்டுகள், துப்பாக்கிகள் ஆகியன மறைக்க வைக்கப்பட்டன.



மேயரின் இல்லம் இருந்த வளாகத்திலும் இரவோடு இரவாக குண்டுகள் புதைக்கப்பட்டன.

தன்னைச் சுற்றி சதிவலை விரிக்கப்படுவது தெரியாமலேயே நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார் மேயர் ஃபிரான்ஸிஸ்.

மறுநாள் காலையில் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்கள் முன்னிலையில் நகரமேயரின் இல்லமும், அலுவலகமும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டன.

அங்குலம் அங்குலமாகத் தோண்டித் துருவி தேடுவதுபோல தேடிய இராணுவத்தினர், கடைசியாக முதல்நாள் இரவு தம்மால் மறைத்து வைக்கப்பட்ட குண்டுகளையும், ஆயுதங்களையும் கண்டுபிடித்தனர்.



நகர மேயர் நாட்டிற்கு எதிரான சக்திகளுடன் சேர்ந்து சதியில் ஈடுபடத் திட்டமிட்டதாகக் கூறி மலையமுங்குவால் கைது செய்யப்பட்டார்.

கைதானபின்னர் நடந்த கொடுமை உகண்டா மக்களையும் கிலிகொள்ள வைத்தது.

சித்திரவதை முகாமில் மேயரை வைத்து விசாரித்த மலையமுங்கு அவரை பலவிதமாக சித்திரவதை செய்தான்.

வலியும், வெறுப்பும், கோபமும் ஒன்று சேர நகரமேயர்: "இப்படியே உங்கள் அக்கிரமம் தொடர்ந்தால் நாசமாய்த்தான் போவீர்கள்!" என்று கத்தினார்.

அந்தக் கத்தல் மலையமுங்குவை ஆத்திரத்தின் உச்சிக்கு கொண்டுசெல்ல, அதே வேகத்தில் கத்தி ஒன்றை எடுத்து அவன் செய்த காரியத்தால், அந்த முகாமே அதிரும் விதமாக ஒலம் எழுப்பி மேயர், அப்படியே மயங்கிச் சாய்ந்தார்.

தனது ஆணுறுப்பை அவன் வெட்டியெறிந்தபோதுதான் அவர் வலி தாளாமல் கத்திக்கொண்டு மயக்கமானார்.

அவருக்குச் சிகிச்சை கொடுக்கச் செய்த மலையமுங்கு, மறுநாள் சற்றுத் தேறியதும், நிர்வாண ஊர்வலமாக அவரை அழைத்துச் சென்றான்.

1971 செப்டம்பரில் நடந்த இக்கோர ஊர்வலம் உகண்டா மக்களை அமீன் ஆட்சிமீது வெறுப்புக் கொள்ளச் செய்தது. அதேசமயம் பயத்தையும் ஏற்படுத்தியது.

நிர்வாண ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட நகரமேயர் மலையமுங்குவால் கண்டதுண்டமாக வெட்டியெறியப் பட்டதுதான் உச்சக்கட்ட கொடூரம்.

இச் செயலுக்கு இடி அமீனின் அனுமதியைப் பெறவில்லை. தன் சகோதரி ரீனாவுக்கு அமீனிடம் செல்வாக்கு இருந்தமையால், சில காரியங்களை அமீனிடம் கேட்காமலேயே முடித்து விடுவான் மலையமுங்கு.

மலையமுங்கு நகரமேயரைக் கொலை செய்தவிதம் பற்றி இடி அமீன் கவலைப்படவில்லை. மக்கள் அறியக்கூடியதாக கோரமாக நடந்துகொண்டுவிட்டானே என்றுதான் கவலைப்பட்டான்.

மலையமுங்குவை ஃபோனில் பிடித்து **"உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? பொது இடத்தில் வைத்து இப்படியா நடந்துகொள்வது!"** என்று கண்டித்தான் இடி அமீன்.

இடி அமீன் ஃபோனை வைத்ததும் இராணுவ அதிகாரி ஒருவர் அமீனுடன் தொடர்பு கொண்டார். "மலையமுங்குவின் போக்கு தங்கள் பெயரையும் கெடுக்கிறது!" என்றார். அவர் மூத்த அதிகாரி. மலையமுங்குவை விட உயர்ந்த பதவியில் இருப்பவர்.

**"அப்படியா, சரி, நீங்களே அவனை அழைத்து விசாரிக்கலாமே?"** என்றான் அமீன்.

அதனை உத்தரவாகக் கருதியதுதான் அந்த அதிகாரி செய்த தவறு.

மலையமுங்குவை அந்த அதிகாரி அழைத்தார். எடுத்த எடுப்பிலேயே சீறிவிழுந்தார். திட்டித் தீர்த்து குற்றச்சாட்டுக்களை அடுக்கிவிட்டு கேட்டார்: "நீ என்ன பதில் சொல்லுகிறாய்?"

மலையமுங்கு குரூரமாகப் புன்னகைத்தபடி கூறினான்: "நான் இதற்கு வாயால் பதில் சொல்லப்போவதில்லை!"

அடுத்த நொடியே தன் பிஸ்டலை உருவிய மலையமுங்கு அந்த அதிகாரியை நோக்கி சரமாரியாக- பிஸ்டலின் வயிறு காலியாகும்வரை சுட்டுத் தள்ளினான்.

அதனை அறிந்த அமீன்: **"விசாரிப்பவனுக்கு வீரம் வேண்டாமா? அதிகாரி கோழை. தனக்கு அடாத காரியத்தை தலையில் போட்டுக்கொண்டான். மலையமுங்கு அவனது தலையிலேயே போட்டுவிட்டான்!"** என்றான் சர்வ அலட்சியமாக.

அதனை அடுத்து மலையமுங்கு மற்றொரு கோரத்தை நிறைவேற்றினான்.

**(இடி தொடரும்)**

**தருவது ரசிகன்**

---

## ஹீராவை உருக்காத கடிதம்



அஜித்குமார்-ஹீரா காதல் முறிவு; பழசான தகவல். "இனி அஜித்குமாரை லவ் வ மாட்டேன் என்று பத்திரிகைகளுக்கு பகிரங்கப் பேட்டி கொடுத்தார் ஹீரா.

அதன்பின்னர் ஹீராவை சமாதானப் படுத்த 28 பக்கத்தில் உருக்கமான கடிதம் எழுதினார் அஜித்குமார்.

கைவலிக்க அஜித் எழுதிய கடிதம் பற்றியும் பத்திரிகைகளுக்கு கூறிவிட்டார் ஹீரா. அந்தளவுக்கு கடும் கோபத்தில் ஹீரா இருந்தாலும் அஜித் இன்னமும் உருகுகிறார்.

அஜித்குமாரின் பேட்டியில் இருந்து அவரது உருக்கத்தை கண்டுகொள்ளுங்கள்.

**கே: உங்களுக்கும் ஹீராவுக்கும் நட்பு முறை சரியில்லை என்று அவங்களே அறிக்கை விட்டுட்டாங்களே?**

**அ:** ஹீராவைப் பற்றி பேசாதீங்க. ப்ளீஸ்... இந்த விஷயத்தை விட்டு வேறு விஷயம் பேசலாமே.

**கே: உங்களுடைய பெண் சிநேகிதர்கள் பற்றி கொஞ்சம் கூறுங்களேன்?**

**அ:** எனக்கு பிடித்த சில பெண்களுடன் படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் ஜாலியாகச் சுத்துவதுண்டு.
இதைப்போய் அநியாயமாக எழுதுகின்றன சில பத்திரிகைகள். இந்த வயதில் அனுபவிக்காமல் வேறு எந்த வயதில் அனுபவிப்பது?

**கே: உங்களுடைய எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு இப்போது பிரிகிறோம் என்று ஹீரா உங்கள் காதலைப் போட்டு உடைத்து விட்டாரே?**

**அ:** திரும்பத் திரும்ப அங்கதான் வர்றீங்க. பல வருசமாக காதலித்தது உண்மைதான். இதை ஏற்கனவே சொல்லி இருக்கேன். ஹீராவின் அந்த அறிக்கை பற்றி இன்னமும் குழப்பமாகத்தான் இருக்கிறது. அதுபற்றி எதையும் கிளறாதீங்க. ஒரு மாதம் கழித்து ஹீரா விஷயம் பற்றி உங்களைக் கூப்பிட்டுக் கூறுகிறேன்.

**கே: உங்கள் வீட்டில் பெண் பார்ப்பதாகவும், அதற்கு தடையாக இருந்த ஹீராவை மிரட்டியதால்தான் அவர் அமுதபடி அறிக்கை விட்டதாகவும் கூறுகிறார்களே?**



**அ:** என்னுடைய வாழ்க்கையில் என்னுடைய விருப்பத்துக்கு எதிராக அம்மா, அப்பா நடக்கவில்லை. இனியும் நடக்க மாட்டார்கள். எல்லா அம்மா, அப்பா போலத்தான் எனக்கு பெண் பார்த்தார்கள். அது அவர்கள் வேலை. அதற்காக என் ஆசைக்கு குறுக்கே நிற்கும் அளவுக்கு வக்கிரமானவர்கள் அல்ல.

---

## காட்டிக்கொடுக்காத லிப்ஸ்டிக்

அமெரிக்காவில் புதுரகமான உதட்டுச்சாயம் கண்டுபிடித்திருக்கிறார்கள். பெண்கள் தங்கள் காதலர்களுக்கு முத்தம் கொடுக்கும் போது அவர்களது சட்டைகளிலோ, முகத்திலோ அடையாளம் பட்டுவிடுகிறது.



அடையாளத்தை கவனிக்காமல் செல்லும் ஆண்கள் நண்பர்களிடமோ, வீட்டிலோ, சிலர் தம் மனைவியரிடமோ வசமாக மாட்டிக்கொள்கின்றனர்.

இந்த தர்ம சங்கடத்தைப் போக்க புதிய உதட்டுச்சாயம் உதவப் போகிறது. இந்தச் சாயம் முத்தம் கொடுத்தாலும் ஒட்டிக்கொள்ளாது. நீரில் கழுவினாலும் போகவே போகாது. உதட்டுச் சாயத்தோடு திரவமும் கொடுப்பார்கள். அதனால் அழித்தால்தான் போகும்.

இந்த உதட்டுச் சாயத்தை கண்டுபிடித்து ஆண்களின் அமோக நன்றியை பெற்றிருப்பவர் ரோஸ்மேரி நிக்கலோஸ் என்ற நாற்பது வயதுப் பெண்மணி, நன்றி மட்டுமல்ல வருமானமும் சேர்கிறது.

---

## பிரதமரின் சம்பந்தி

பங்களாதேஷ் நாட்டு இளவரசர் முசாபின் ஷம்ஷெர் பற்றிய தகவல்கள் வாயைப் பிளக்கவைக்கின்றன.



பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹலிபீனாவின் சம்பந்திதான் ஷம்ஷெர். பங்களாதேஷின் நம்பர் வன் பணக்காரரும் இவர்தான்.

இவர் பற்றிய வாய் பிளக்கும் விபரங்களை பட்டியலிட இடம் போதாது. உதாரணத்திற்கு சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

இவருடைய சப்பாத்துக்களில் வைரம், புஸ்பராகம், மரகதம் போன்ற விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்குமாம்.

அவர் எழுதும் பேனாவில் மட்டும் ஏழாயிரத்து ஐநூறு வைரம். கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லம் வைரம். இந்தக் கடிகாரத்தில் வைரம் பதிக்க 27 மாதங்கள் பிடித்ததாம்.

இவர் ஒரு விமானம் சொந்தமாக வைத்திருக்கிறார். அந்த விமானத்தில் இருக்கும் பாத்ரூமில் இருக்கும் ஃபிட்டிங்ஸ் எல்லாம் தங்கத்தில் இருப்பதுதான் கொடுமை.

இவரது மகளது திருமணம் சமீபத்தில் நடந்தது. திருமணச்செலவு அதிகமில்லை, ஆக, 30 கோடி ரூபாய் மட்டும்தான். இத்தனை சுருக்கமாக செலவு முடிந்ததில் மனிதருக்கு லேசான வருத்தமாம்.

---

## விற்பனையில் முதலிடம்

வயாக்ரா மாத்திரை கண்பார்வையை பறித்துவிடும் என்பது பொறாமைக்காரர்களின் புரளி என்கிறார்கள் அதன் தயாரிப்பாளர்கள்.



அதற்கு ஆதாரமாக வயாக்ராவால் பயன்பெற்ற ஆண்களின் பேட்டிகளை வெளியிட்டுள்ளனர்.

"வயாக்ரா என்னை இளைஞனாக்கியது. அன்று மட்டும் ஆறு ஏழு தடவைகள் உறவு வைத்துக் கொண்டேன்" என்ற பிரபல பாலியல் நிபுணர் ஒருவர் பேட்டி கொடுத்திருக்கிறார்.

வயாக்ராவை வைத்து ஏகப்பட்ட ஜோக்குகளும் உருவாகிவிட்டன. இன்று உலகிலேயே அதிகூடிய விற்பனையாகும் மாத்திரை வயாக்ராதான்.

இப்படியொரு மாத்திரையை முன்னரே கண்டுபிடிக்காமல் போனோமே என்று பிரபல மருந்து தயாரிப்புக் கம்பனிகள் தலையில் அடித்துக் கொள்கின்றன.

இந்தியாவில் வயாக்ரா மாத்திரை இன்னமும் பகிரங்கமாக விற்பனைக்கு வரவில்லை. கில்லாடி வியாபாரிகள் சிலர் சாதாரண சூப்பை வயாக்ரா சூப் என்று விற்பனை செய்து வருகின்றனர். வயாக்ரா என்ற பெயருக்கு அப்படி மவுசு.

நம்நாட்டிலும் பல மருத்துக் கடைகளில் 'வயாக்ரா' வந்துவிட்டதா என ஃபோனிலும், நேரிலும் ஏராளமான விசாரிப்புக்களாம்.




# இது செம்மணியல்ல

← இது செம்மணியல்ல. மெக்ஸிக்கோ நகரில் சாப்புல்ரெபெக் பூங்காவில் 20 மண்டை ஓடுகளும், 4 உடல்களும் கிடந்தன. சில மண்டை ஓடுகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் சிவப்பு வர்ணக் குறியீடுகளும் காணப்பட்டன.

நரபலிக்காக கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

பலிகளில்தான் எத்தனை வகை, நரபலி, மதப்பலி, இனவாதப்பலி.....!

## கோபுரத்தில் சைக்கிள்




→ பாரிசில் உள்ள ஈஃபில் கோபுரத்திற்கு செல்ல படிகளும் உண்டு. லிஃப்ட் வசதியும் உண்டு. இந்த சைக்கிள் வீரர் சைக்கிள் மூலமே படிக்கட்டுகள் வழியாக கோபுரத்தை அடைந்து உலக சாதனை படைத்துள்ளார். இவர் பெயர் பிரான்ஸிஸ் ரூப்கே. எடுத்துக்கொண்ட நேரம் 36 நிமிடங்கள்!

## கெட்டியாக கட்டிக்கோ

↓ குதிரைச்சவாரி, மாட்டுச் சவாரி பார்த்திருப்பீர்கள். இது ஆட்டுச் சவாரி. நம்மூர் சமாச்சாரமல்ல. அமெரிக்காவில் மின்ன கோட்டா என்ற பகுதியில் ஆண்டு தோறும் இந்த ஆட்டுச்சவாரி நடக்கும். சிறுவர், சிறுமியர் மட்டும்பங்கு கொள்ளலாம். வேகமாக ஓடும் ஆட்டின் கழுத்தை பற்றிக் கொண்டு சவாரி செய்யவேண்டும். ஆடு சற்று இடறினால் கூட படுகாயம் ஏற்படும். உடும்புப்பிடியாய் பிடித்திருக்கிறார் பாருங்கள். துணிச்சல்சவாரி!



## இது யாருடைய எலும்பு?



↙ டைனோசரின் எலும்புக்கூடா? அல்லது யானையின் எலும்புக் கூடா? என்று ஆராய்ச்சியெல்லாம் வேண்டாம். நிறுத்துங்கள்.

இந்த எலும்புக்கூட்டுக்கு சொந்தக்கார மிருகத்தின் பெயர் மம்மூத். டைனோசர் போலவே இதுவும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தது. இன்று எலும்புக்கூடுதான் மிச்சம்.

10 அடி உயரம், 13 அடி நீளம் கொண்ட இந்த மிருகத்தின் எடை 5 தொன். இதன் தந்தம் மட்டும் ஒரு மீட்டர் நீளம் கொண்டது.


கிட்டத்தட்ட 23 ஆயிரத்தி 760 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த விலங்கு இது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த எலும்புக்கூடு சைபீரியாவில் உள்ள இயற்கை வரலாற்று மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## தகவல் பெட்டி

## ஜப்பான் கமரா

↓ புதிதாக அறிமுகமாகியுள்ள டிஜிடல் கமரா இது. ஜப்பான் தயாரிப்பு. சாதாரணமாக 144 படங்களையும், மிகச் சிறப்பான 36 படங்களையும் பிம்பங்களாக தனது வயிற்றில் வைத்திருக்கக்கூடியது. சூப்பராக படம் எடுக்க வசதியாக ஜூம் லென்சுகளும் உள்ளன. 24 எம்.பி ஃபிளாஷ்கார்ட்டும் இருக்கிறது.

இக் கமராவின் பெயர் 'கூல்பிக்ஸ் 900'. இந்த நிக்கோன் கமராவின் விலை ஆக, 60 ஆயிரம் ரூபாய்.




## பிரமாண்ட பியானோ

↓ பன்னிரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு இந்த பியானோ விலை போயிருக்கிறது. நம்நாட்டு மதிப்பில் சுமார் 7 கோடி 80 இலட்சம் ரூபாய்கள்.

அப்படி என்ன விசேஷம் இதில் என்று கேட்டால்; இங்கிலாந்தின் 19ம் நூற்றாண்டின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் பியானோ என்பதால்தான் மட்டற்ற மரியாதை.

பியானோவில் அழகான ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. அந்தக்கால பெரும் பிரமுகர்களின் விரல்கள் தொட்டு விளையாடிய பியானோ என்பதால் இந்தக் கால பெரும் பிரமுகர் ஒருவர் பணத்தை தண்ணீராய் இறைத்து இதனை வாங்கியிருக்கிறார்.

மனிதர்கள் பழசாகப் போனால் ஒதுக்கும் உலகில், பழசான பொருட்களுக்கு உள்ள மரியாதையைப் பார்த்தீர்களா?!



## 107 கோடி அழகி



↑ இந்த அழகியை அள்ளிக்கொண்டு போனால் 10 மில்லியன் பவுண்டு கிடைக்கும். அதாகப்பட்டது 107 கோடி ரூபாய்கள். வாவ் என்று வாயைப் பிளக்க வேண்டாம்.

எந்த பெண்ணிடமும் இல்லாத ஒன்று அல்ல பல இந்தப் பெண்ணிடம் உள்ளன. அதாகப்பட்டது இவர் அணிந்திருப்பவை எல்லாம் விலை உயர்ந்த வைரங்கள். அவற்றின் மொத்த மதிப்புத்தான் 107 கோடி ரூபாய்கள்.

கொடுத்து வைத்தவர் என்று பெருமூச்சுவிடாதீர்கள். வைரங்கள் இந்த வைர அழகிக்கு சொந்தமானவையல்ல. இலண்டனில் நடைபெற்ற வைர வாரக் கண்காட்சியில் இந்த மொடல் அழகி விதம் விதமான வைரங்களை மாட்டிக் கொண்டு போஸ் கொடுத்தார். நிகழ்ச்சி முடிந்ததும் உரியவர்களிடம் கழற்றிக் கொடுத்து விட்டு நடையைக் கட்ட வேண்டியதுதான்.

## போராடும் இனம்



← வெள்ளை நிறக் கொண்டை, அகலவிரித்த இறக்கை. நடனமாடும் தோரணை. இந்த அசத்தல் பறவையின் பெயர் 'காகு'. இவை வசிப்பது தென்மேற்கு பசுபிக் பெருங்கடல் தீவான நியூசலேனியாவில்.

இந்தப் பறவையின் நீளம் 55 சென்டி மீட்டர். எடை ஒரு கிலோ. மலைக்காடுகளில் வாழும் இப்பறவைகள் நிலத்தில் தான் கூடு கட்டி வாழ்கின்றன.

நிலத்தில் வாழ்ந்தால் விலங்குகள் லபக்கென்று அமுக்கிவிடுமே என்று நினைத்து விடாதீர்கள். எதிர்த்துப் போராடும் வல்லமையால் தான் இந்த இனம் இன்னமும் தப்பிப் பிழைத்திருக்கிறது.

எதிரி விலங்குகளைக் கண்டால் தன் இறகுகளை விரித்து தரையில் படபடவென அடித்து எதிர்த்தாக்குதல் நடத்த துணிந்துவிடும். முடியாவிட்டால் பின்வாங்கி தப்பிவிடும். வாழ்வதற்காக போராடுகிறது.

இப்பறவையின் இன்னொரு முக்கிய அம்சம், இதன் குரல் நாய் குரைப்பது போன்றும், காட்டுப் பன்றி கத்துவது போன்றும் இருக்குமாம்.

# மினிசினி

* 'வேட்டிய மடிச்சுக் கட்டு' படத்திற்குப் பின் இரண்டு நேரடித் தமிழ்ப்படங்களில் நடித்து வருகிறார் கன்னடத்தில் பிரபலமாகவுள்ள சாய்குமார். இவர் அடுத்து தமிழில் சொந்தமாகப் படமொன்றைத் தயாரித்து நடிக்கவுள்ளார். இப்படத்தில் சாய்குமாருடன் பிரபுவும் நடிக்கவுள்ளார்.

* 'தாலாட்டு', 'பரிவட்டம்' போன்ற படங்களை இயக்கியவர் டி.கே.ராஜேந்திரன். இவர் அடுத்து நெப்போலியன்- தேவயானி ஜோடியாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* தமிழில் முன்னணி நடிகர்களுடன் பல படங்களில் நடித்து வரும் ப்ரீதா விஜயகுமார் 'பரஸ்வா' என்ற தெலுங்குப் படத்தில் கோமஸ்வர பிரசாத்திற்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். யார் இந்த கோமஸ்வர பிரசாத்? ஆந்திர மாநில முக்கிய பிரமுகர் சிவபார்வதியின் மகன்.

* 'பாட்ஷா' படத்திற்குப் பின் இதுவரை காலமும் படத் தயாரிப்பை நிறுத்தி வைத்திருந்த சத்யா மூவீஸ் நிறுவனம் இப்போது ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளது. இந்தப் படத்தை 'அரிச்சந்திரா' படத்தை இயக்கிய செய்யாறு ரவி இயக்கவுள்ளார்.

## குறும்பு கார்த்திக்

அத்தை மகனில் ரம்யா கிருஷ்ணனை கொஞ்சிக் கொண்டிருந்த கார்த்திக்கிடம் திருப்பூர் ஒருவர் கேட்ட குட்டிக் கேள்விகளுக்கு அவரது குட்டி குட்டிப் பதில்கள்.

**கே: முட்டை பிடிக்குமா?**
கா: சிலதில் பிடிக்கும். சிலதில் பிடிக்காது.

**கே: கட்டணம் ஒரு யூனிட்டிற்கு எவ்வளவு?**
கா: ஷாக் அடிக்கிற கேள்வி எல்லாம் கேக்காதீர்கள்.

**கே: மீனா, ரம்பா பற்றி?**
கா: ஒருவர் அசைவம். இன்னொருவர் போதை.

**கே: வயசான பின்னர் என்ன பண்ணுவீர்கள்?**
கா: ஒன்றும் பண்ணமாட்டேன்!

## துள்ளும் ஜோடி


விஜய் மார்க்கெட் உச்சத்தில் இருப்பதால், தயாரிப்பாளர்கள் துரத்தித்திரிகிறார்கள்.

விஜய் படு உஷார். கதையை தெரிவு செய்து தான் ஒகே பண்ணுகிறார். இயக்குநர் சந்திரசேகரனும் மகனுக்கு ஒத்தாசையாக கதை கேட்கிறார்.

'நாட்டாமை', 'பூவே உனக்காக' போன்ற வெற்றிப் படங்களை தயாரித்த நிறுவனம் சூப்பர் குட் பிலிம்ஸ்.

விஜய் மார்க்கெட்டை நிமிர்த்திய படம் 'பூவே உனக்காக'. விஜய் நடித்த 'லவ் டுடே' படமும் சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பு.

இப்போது தயாராகும் படத்திற்கு துள்ளாத மனமும் துள்ளும் என்று பெயர் சூட்டியுள்ளனர். இதில் விஜய் ஜோடியாக சிம்ரான் நடிக்கிறார். இசை எஸ்.ஏ.ராஜ்குமார். 'பூவே உனக்காக' பட இசையும் இவர்தான். இயக்கம் கே.எழில். விஜய் சிம்ரான் ஜோடி என்றால் துள்ளாத மனங்களும் துள்ளும்தானே.




வர்ஷா
படம்: [illegible]

## காட்சியை வெட்டு

'குருபார்வை' படத்தில் தன் மேலாடை நனைய நனைய நடித்திருந்தார் ஸ்வரிராஸ். பின்னர் என்ன நினைத்தாரோ, அக்காட்சியை வெட்டி எறிந்துவிட்டுத்தான் படத்தை திரையிடலாம் என்று நிபந்தனை போட்டுள்ளார்.

"பணத்தை வாங்கிக் கொள்ளும்போது கவர்ச்சி காட்ட ஒப்புக்கொண்டவர் ஸ்வரிராஸ். நனைந்து நடித்தவரும் அவர்தான். இப்போதுமட்டும் மாறாகப் பேசுவது என்ன நியாயம்? காட்சியை நீக்கமாட்டோம்." என்கிறார்கள் தயாரிப்பாளரும் இயக்குநரும்.



சுவாதி
படம்: அத்தை மகன்

# விஜய்க்கு வந்த முதுகுவலி பொய் என்கிறது பத்திரிகை

விஜய் திடீரென்று சில வாரங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தார் அல்லவா. முதுகுவலி காரணமாக அவரை டாக்டர்கள் ஓய்வெடுக்கச் சொன்னதாகவும் விஜய் கூறியிருந்தார். படுக்கையில் வைத்தே அவரை பேட்டி எடுத்தும் வெளியிட்டனர்.

அதன்பின்னர் குணமாகி இலண்டன் போன விஜய் அங்கு தன் காதலியை பெற்றோர் சம்மதத்துடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்டார்.

இப்போது தமிழக முன்னணிப் பத்திரிகை ஒன்று குண்டைத் தூக்கிப்போட்டிருக்கிறது.

விஜய்க்கு முதுகுவலி என்பது பொய். ரசிகர்கள், ரசிகைகளிடம் அனுதாபம் தேட விஜய் நடத்திய நாடகம் அது என்று கூறியுள்ளது அப்பத்திரிகை.

நாடகம் ஏன் என்றும் அப்பத்திரிகையே விளக்கியும் உள்ளது.

'பிரியமுடன்' படம் விஜய் நீண்டகாலம் முன்னரே ஒப்புக்கொண்ட படம். 'காதலுக்கு மரியாதை' மாபெரும் வெற்றிபெற்ற பின்னர் விஜய் மென்மையான காதல் உணர்வுள்ள இளைஞராக கருதப்படலானார்.

பிரியமுடன் படத்தில் வில்லத்தனமான கரெக்டர். கொலை செய்யத் துணியும் காதலன். கிட்டத்தட்ட சிவப்பு ரோஜா கமல் மாதிரி.

மென்மையான காதலரான விஜய்யின் இமேஜ் பிரியமுடன் படத்தில் எதிர்மாறாக இருப்பதால், படம் படுதோல்வியடையும். குறிப்பாக விஜய்யின் ரசிகைகள் படத்தை நிராகரித்துவிடுவார்கள் என்று பயந்தனர் விஜய்யும் பெற்றோரும்.

இந்த நேரத்தில் ஒரு படம் பயங்கரமாக அடிபட்டால் மார்க்கெட்டிலும் சரிவு வருமோ? என்றும் பயந்தனர்.

அதனால்தான் பிரியமுடன் படம் வெளியாகும் நேரத்தில் விஜய் ரசிகைகளும், ரசிகர்களும் அவர்மீது அனுதாபம் கொண்டு வேறு எந்த விமர்சனமும் இல்லாமல் படம்பார்க்கச் செய்ய அந்த நாடகமாம்.

மேற்கண்டவாறு அப்பத்திரிகை எழுதியுள்ளது. குறிப்பிட்ட பத்திரிகைக்கு இதுவரை விஜய் மறுப்பு தெரிவிக்கவில்லை. மறுப்பு கொடுப்பானேன் என்று பொருட்படுத்தாமல் விட்டுவிட்டாரா? அல்லது செய்தி உண்மையா? என்பதெல்லாம் விஜய்க்குத்தான் வெளிச்சம்.

எது எப்படியோ, வில்லத்தனமான பாத்திரத்தில் விஜய் தோன்றினாலும் பிரியமுடன் சூப்பர் ஹிட்.



## தொடர்வாரா

சரத்குமாரும் விஜயசாந்தியும் இணைந்து நடிக்கும் செய்தி பழையது. வழக்கம்போல சரத்குமாரு[illegible] அல்வா கொடுத்துவிட்டு டாட்டா [illegible]டிவிடுவாரோ விஜயசாந்தி என்று சந்தேகமாக இருந்தது.

விஜயகாந்த், சத்யராஜ், அர்ஜுன் ஆகியோருடன் நடிக்க சம்மதித்துவிட்டு திடீர் வாபஸ் வாங்கியவர் விஜயசாந்[illegible]

திரையுலக மறுபக்கம் 68

# நடிகைக்கு சஞ்சிகை கொடுத்த பதிலடி
# சினிமா உலகை கற்றுக் கொண்டவர்

தமிழக சஞ்சிகையான குமுதத்தில் 'ஒரு நடிகையின் கதை' வெளியானது. ஸ்ரீனிவாசலு என்பவர் எழுதினார். சில நடிகைகள்,நடிகர்கள் பற்றிய உண்மையான சில அனுபவங்களை அத்தொடரில் கூறியிருந்தார். ஏற்கனவே அரசல் புரசலாக வெளியான தகவல்களும் அவற்றில் இருந்தன.

அதனை எதிர்த்து ஒரு நடிகை தமிழக முதல்வர் கருணாநிதியிடம் முறையிட்டார். அவர் ரயில் நடிகை. அவருக்கு சார்பாக கிராம இயக்குநரும் வரிந்துகட்டி வாதாடினார். இந்த இருவர் பற்றியும் பல கதைகள் உண்டு.

இதன் பின்னர் சில காலம் சென்று அத் தொடர் நிறுத்தப்பட்டது. தொடரை நிறுத்திய குமுதம் அந்த நடிகைக்கு கொடுத்த பதில் இப்படி அமைந்தது.

'ஒரு நடிகையின் கதையை எதிர்த்த ஒரு நடிகை சில காலங்களுக்கு முன்னர் குமுதத்தில் ஒரு பேட்டியில் ஆங்கில நாவல்களில் சிட்னி ஷெல்டன் நாவல்களை விரும்பி வாசிப்பதாக குறிப்பிட்டார்.

சிட்னி ஷெல்டன் விவரிக்காத தகாத உறவுகளையா ஸ்ரீனிவாசலு விவரித்துவிட்டார்?

ஒரு நாவலில் இரண்டு பெண்கள் உறவு வைத்துக் கொள்வதை எங்கெங்கே, எப்படி என்ற கணக்கில் நுல்லியமாக எழுதுகிறார் ஷெல்டன்.

இன்னொரு நாவலில் ஒரு ஆபிரிக்க ஆண்மகன் ஒரு ஆங்கிலேய பெண்மணியை எப்படி பலவந்தமாக குப்புற படுக்க வைக்கிறான் என்பதை பல பக்கங்களில் விவரிக்கிறார். இதைப் படிக்கும்போது எழாத தன்மானம் இப்போது எழுந்திருக்கிறது, அந்த நடிகைக்கு!

சிட்னி ஷெல்டன் எழுதினால் 'ஆகா! ஓகோ!' பதலக்கூர் ஸ்ரீனிவாசலு எழுதினால் அய்யய்யோவா?" என்று தொடர்கிறது பதில்.

அந்த நடிகை தமிழக முதல்வருக்கும் வேண்டப்பட்டவர். தேர்தல் பிரசாரமும் செய்தவர். வெளிநாட்டு மாப்பிள்ளையைத் திருமணம் செய்தவர். முன்னாள் பிரபல நடிகரின் மகள். சகோதரியும் நடிகையே.

### மலர்ந்த காதல்.

சுவாசத்தோடு தொடர்புடைய பெயர் கொண்ட மூன்றெழுத்து நடிகை அவர். சமீபத்தில் நடிகை ஒருவருடன் காதல் முறிந்த இளம்குமார நடிகருக்கும், சுவாச நடிகைக்கும் இடையேதான் முதன் முதலில் காதல் மலர்ந்தது.

அப்போது இருவருக்கும் திரையுலகம் புதிது. சுவாச நடிகையை அறிமுகம் செய்த இயக்குநர் அவரை தன் அன்புப் பிடியில் வைத்திருந்தார். அந்த இயக்குநரின் வக்கிரங்களால் வெறுத்துப்போயிருந்த நடிகைக்கு, குமார நடிகரின் அறிமுகம் ஆறுதலாக இருந்தது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் வல்லவரான இளம்குமார நடிகர், தன் பின்னால் நடிகையையும் ஏற்றிக்கொண்டு வலம் வந்தார். பின்னால் அமர்ந்திருக்கும் நடிகையின் ஸ்பரிசம் நடிகரை புதிய அனுபவங்களுக்கு தூண்டியது. நடிகைக்கும் மாறுதல் தேவைப்பட்டது.

சென்னையின் புறநகரில் உள்ள கடற்கரை ஓர விடுதி ஒன்றில் இருவரும் தொடர்ச்சியாக உலகை மறந்து தங்கியிருந்தனர்.

படப்பிடிப்புக்கு வரமுடியாத நிலை இருப்பதாக இருவருமே தனித்தனியாக அறிவித்தபோதும் பட இயக்குநருக்கு ஜகிப்பது கஷ்டமாக இருக்கவில்லை.

தெரிந்தது மாதிரிக் காட்டிக்கொண்டால் தொடர்ந்து படப்பிடிப்புக்கு வராமல் இருந்துவிடுவார்களோ என்று நினைத்து அமைதியாக இருந்துவிட்டார் இயக்குநர்.

மூன்றுநாள் என்பது ஒருவாரமாகியும் இருவரும் வந்தபாடில்லை. நடிகையின் வீட்டிலும் இந்தச் சங்கதி தெரிந்திருந்தது. அதனால் நடிகை தன் உறவினர் வீட்டுக்கு அவசர காரியமாக சென்றிருப்பதாக கூறி சமாளித்தனர்.

### இருவரும் நீச்சல்

வழக்கமாக இப்படியான ஜோடிகள் எங்கு பறந்து செல்லும் என்பது இயக்குநர் அறியாதது அல்ல.

இரண்டு மூன்று இடங்களில் விசாரித்து, கடைசியாக எப்படியோ கண்டுபிடித்தனர்.

அவர்கள் சென்றபோது இருவரும் ஜாலியாக அந்த கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்தனர். நீச்சல் உடையில் நடிகரின் இருகைகளிலும் தாவி நீச்சலிட்டுக் கொண்டிருந்தாராம் நடிகை.

ஒருவிதமாக பேசி, காலில் விழாத குறையாக மன்றாடி படப்பிடிப்புக்கு அழைத்து வருவதற்குள் இவருக்குப் போதும் போதுமென்றாகிவிட்டதாம்.

இதற்கிடையே நடிகையை கட்டுப்பாட்டில் வைத்திருந்த இயக்குநருக்கு தகவல் போய்விட்டது. அந்த இயக்குநர் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர். அந்த நேரம் பார்த்து அவரது கட்சி அரசியல் புயலில் மாட்டியிருந்தது.

அந்த சூழலில் நடிகையையும், நடிகரையும் பிரிக்க தன் பலத்தை காட்டினால் வம்பில்போய் முடியும் என்பதால் இயக்குநர் அப்படியே விட்டுவிட்டார்.

தடையே இல்லாமல் சுவாச நடிகையுடன் இனிமை கண்ட நடிகருக்கு மார்க்கெட் மளமளவென்று உயர்ந்தது. பல நடிகைகள், நடுத்தர வயது நடிகைகள் உட்பட அவரை விருந்துக்கு அழைக்கத் தொடங்கினர். அவரது இளமையை புகழ்ந்தனர்.

அந்த ருசியில் சுவாச நடிகையை கைகழுவத் தொடங்கினார் நடிகர். ஒரு கட்டத்தில் மனமுடைந்த நடிகை தூக்க மாத்திரைகளை நாடினார். சினிமாவில் நடிக்க மறுத்து வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தார்.

நடிகரோ வேறு ஒரு நடிகையுடன் நெருக்கமாகியதுடன், கூட நடித்த சில நடிகைகளுடனும் 'உல்லாசம்' கண்டார்.

### மீண்டும் காதல்

மனதை தேற்றிக்கொண்ட சுவாச நடிகை மறுபடி நடிக்க ஆரம்பித்தார். அப்போது பிள்ளையாரின் மறுபெயர் கொண்ட நடிகரிடம் மனதை பறிகொடுத்து தன்னையும் கொடுத்தார்.

அந்த நடிகருக்கும் திருமணமாகியது. இப்போது நடிகை புலம்பவில்லை. அவர் சினிமா உலகைப் புரிந்துகொண்டார்.

தற்போது பிரபல தயாரிப்பாளர் ஒருவரின் நட்பைப் பெற்று, அவரது இரண்டு படங்களில் நடித்துவருகிறார். அந்த தயாரிப்பாளரும் நடிகைக்காக தன் நண்பர்களான தயாரிப்பாளர்களிடம் சிபாரிசு செய்வதாகத் தகவல்.


பாண்டியராஜன்-குஷ்பு
படம்: மனைவிக்கு மரியாதை

சினிவிசிட்

# ஐஸ்வர்யாவுடன் ரஜினி?

ரஜினி என்றால் புதிர். புதிர் என்றால் ரஜினி என்பது தமிழ்த் திரையுலக அகராதி.

ரஜினியின் அடுத்த படத்தின் பெயர் என்ன? கதாநாயகி யார்? இயக்குவது யார்? என்பதற்கான பதிலை இதுவரை ரஜினி மூச்சுவிடவில்லை.

ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்திவைத்தார் ரஜினி. ஒரு ஜோடிக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபா செலவு செய்தார்.

சென்ற ஆண்டு திருமணம் செய்துவைத்த ஜோடிகள் சிலர் குழந்தைகளுடன் வந்து கலந்துகொண்டதில் பூரித்துப்போயினர் ரஜினியும் மனைவி லதாவும்.

இத்திருமண விழாவின் பின்னராவது ரஜினி பட அறிவித்தல் அட்டகாசமாக வெளியாகும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றம்.

அதனால் மறுபடி ஊகம். ரஜினியின் அடுத்த படம் படையப்பா என்று செய்தி அடிபடுவதாக முன்னரே கூறியிருந்தோம். அப்படத்தின் நாயகி ஐஸ்வர்யா ராய் என்று தமிழக சஞ்சிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.


இந்த ஊகம் இருவர் படத்தில் ஐஸ்வர்யா நடித்த சூட்டோடு கிளப்பப்பட்டது. ரஜினி தன் அடுத்த படத்திற்காக ஐஸ்வர்யா ராயை நாடினார் என்றும், அவர் பிஸி என்றும் அப்போது கூறப்பட்டது. இப்போது மறுபடி அதே ஊகம். சூப்பர் ஸ்டாருடன் ஜோடி சேருவாரா முன்னாள் உலக அழகி?!


சரண்ராஜ்-கருத்தி
படம்: அண்ணன் தங்கச்சி

# விஜயசாந்தி?

சரத்தை ஏமாற்றவில்லை. சில காட்சிகளும் எடுக்கப்பட்டுவிட்டன. 'ராஜஸ்தான்' படத்தை இயக்குபவர் ஆர்.கே. செல்வமணி. இவர் முன்னர் விஜயகாந்த், விஜயசாந்தி நடிப்பதாக இருந்த தாயகம் படத்தையும் இயக்கவிருந்தார்.

ராஜஸ்தான் படத்தில் விஜயசாந்தி சரத்துடன் தொடர்ந்து நடிப்பாரா, இடையிலே முறித்துக்கொண்டு கிளம்பி விடுவாரா தெரியவில்லை.


பிரசாந்த்-சிம்ரன்
படம்: கண்ணெதிரே தோன்றினாள்

## காதோடு சொல்லுகிறோம்

நகைச்சுவை வேல் நடிகரின் சமீபத்திய நன்பியைக் கண்ட திரையுலகினர் மூக்கில் விரலை வைக்கின்றனர். இந்து பெண் தெய்வத்தின் பெயர் கொண்ட முன்னாள் கதாநாயகிதான் அந்த நண்பி, சகோதர நடிகைகளாக இருந்து கமல், ரஜினி சத்யராஜ் பிரபு போன்ற பிரபலங்களுடன் ராசியாக இருந்தவர்கள் அவர்கள். சமீபத்தில் அமெரிக்காவில் இருந்து திரும்பிய அந்த நடிகைக்கு அவருடன் நெருக்கமாக இருந்த ஹீரோக்கள் சரியாக கைகொடுக்கவில்லை. அதனால்தான் நகைச்சுவை வேலுடன் ஐக்கியமாகியுள்ளார். அவரது காரிலும் ஜோடியாகப் பயணம் செய்கிறாராம்.

## முகப்பில்
## விஜய்-ரம்பா
## மீனா

சூப்பர் ஸ்டாரின் படத்தில் தங்கள் வாரிசை நடிக்க வைக்க படாதபாடுபடுகின்றனர் நட்சத்திர தம்பதியினர். ப்ரியமான வாரிசுடன் ஒருமுறையாவது தொட்டு நடிக்க பிரபல நடிகர்கள் சிலரே துடித்துக் கொண்டிருந்தாலும், சூப்பர் ஸ்டாரின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நிற்கின்றது தம்பதி. சூப்பர் ஸ்டாரின் அடுத்த படத்தை இயக்கக்கூடும் என்று கருதப்படும் இரண்டு இயக்குநர்களுக்கு ஸ்பெசல் விருந்தே கொடுத்தாராம் வாரிசு நடிகையின் தாய்க்குலம்.

வள்ளி நாயகி தற்போது கவர்ச்சியாக நடிக்கத் தொடங்கியிருக்கிறார். புளியங்கொம்புகளாகவும் பிடிக்கத் தொடங்கியிருக்கிறார். "மும்பாய் சினிமா உலகில் எத்தனை பேருடன் உறவு வைத்துக்கொண்டாலும் அது பெரிய சங்கதியாக யாரும் கருதமாட்டார்கள். இங்கே சும்மா பேசிக் கொண்டிருந்தாலே 'கிசு கிசு' கிளப்பி விடுகிறார்கள்" என்று கவலைப்படுகிறாராம்.

குலுக்கல் நடனப் புகழ் ஜோதியான நடிகை டாக்டர் ஒருவரை இரகசிய திருமணம் செய்துகொண்டார். நடிகையின் தாயார் கடும் எதிர்ப்பு காட்டினாராம். மகள் அடம்பிடித்ததால் டாக்டருடன் சமரசமாகி தன் செலவில் கிளினிக்கும் வைத்துக் கொடுத்திருக்கிறாராம்.

## வீழ்வோம் என்று நினைத்தாரோ!

போரும்பஞ்சமும் போதுமென்று
புகலிடம் தேடி அகதிகளாய்
நீரிணை கடந்திடப் போனவர்கள்–மரணம்
நேரிடுமென்று நினைத்தாரோ......?

மூட்டை முடிச்சுகள் உடலோடும்–தம்
முந்தையக் கனவுகள் மனதோடும்
நாட்டை விட்டுப் போனவர்கள்
நாளையை இழந்து போனதென்ன...?

கப்பலில் மனிதர்கள் பாரமென்றா–
அவர்கள்
கவலைகள் அதைவிடப் பாரமென்றா
உப்புகலந்த கடல்நீரில்–மக்கள்
உடல்கள் கலந்திடக் கவிழ்ந்ததென்ன...?

கனவுகள் விழுங்கிய கடலலையே–உன்
கடும்பசி இப்படி ஆறியதோ?
இனிவரும் ஊழி பிரளயத்தை–நீ
இப்படி ஒத்திகை பார்ப்பதுமோ...?

சங்குகள் ஒதுங்கும் கடற்கரையில்–உடல்
அங்கங்கள் ஒதுங்கிய அவலமென்ன....?
எங்கோ ஓடிய தன்மக்களை–தாய்மண்
மீண்டும் தன்னிடம் அழைத்ததுவோ!

சீதையை இழந்த ராமனுக்கும்–இன்று
தாயகம் இழந்த தமிழருக்கும்
பாதையில் அமைந்த நீரிணையே...
பயணங்கள் தொடர வழிவிடுக!

ஆர். முரளீஸ்வரன்- மட்டக்களப்பு

## குரைக்க ஒரு நாய்வேண்டும்!

நாய் என்றால்
அது குரைக்க வேண்டும்!
கடிப்பது
இரண்டாம் பட்சமே!
★
கடிக்காததும்
நாய் தான்–ஆனால்
குரைக்காதது
நாய் ஆகாது!
★
கடிப்பது பாசிசம்,
குரைப்பது ஜனநாயகம்!
பல நாய்கள்
கடித்துச் சாதிக்காததை
குரைத்தே
சாதித்திருக்கின்றன!
★
குரைக்க–
ஒரு நாய் வேண்டும்!
எங்கள் நாய்களால்
குரைக்கவும் முடியவில்லை;
கடிக்கவும் முடியவில்லை!
★
குரைக்கின்ற
மற்ற நாய்களையும்
விரட்டிவிட்டு
ஊர் நாய் என்பதையே
தகுதியாய்க் கொண்டு
இந்த இயலா நாய்களையே
வாசலில் கட்டினோம்!
★
பாவம்
அது என்ன செய்யும்
நண்பன் வந்தாலும்
எதிரி வந்தாலும்
நாய்க்குரிய பண்பில்
வாலை மட்டும் ஆட்டுது....!

மீராவோடை எஸ். நளீம்.

## அந்தக்கால காதல் மன்னன்


அன்று


சாவித்திரியுடன்


மனைவி பிள்ளைகளுடன்

எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்திலேயே காதல் மன்னனாக கலக்கியவர் ஜெமினி கணேசன். எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி தமிழ்த் திரையுலக மூவேந்தர்கள்.

ஜெமினி சினிமாவில் மட்டுமல்ல, அதற்கு வெளியேயும் காதல் மன்னர்தான். பல மனைவியர், ஏராளம் காதலிகள். நடிகையர் திலகம் சாவித்திரியும் ஜெமினியின் மனைவியாக இருந்து மறைந்தவர்தான். மலருக்கு மலர் தாவும் வண்டான ஜெமினி, அதனை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டவர்.

சமீபத்திய 'அவ்வை சண்முகி' படத்தில் ஜெமினியின் காதல் கணைகள் அசத்தல். வயதானாலும் அந்த முறுக்குப்போகவில்லை. 'வயாக்ரா' வாங்குவதற்கு மனுப்போட்டிருக்கிறாரோ தெரியவில்லை.


இன்று


மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். உடன்


நடிகர் திலகம் சிவாஜியுடன்

## முடிவுரை

இது எம்
முகத்தின்
முடிவுரை.
•
கனவுகளை
இமைக்குள்
கட்டிவைத்த
இருட்டிய விழிகளின்
ஊமைக் கதை
இது!
•
வெளிச்சப்
பார்வையில்
கானல் நீராய்,
வெள்ளி முளைத்து
வெருளியான கதை!
•
முகாம்களும்
முட்கம்பிகளும்
அதிகரித்த
தேசத்தில்
இருப்பிழந்த
நிலையில்–எம்
இனத்தின்
இறுதி யாத்திரை!
•
துப்பாக்கி ரவைகள்
பட்டாசாய் முழங்க,
குருதி மழையில்
பன்னீர் தெளிக்க,
குதூகலமாய்
பிணவாடையுடன்
பாடையில்–எங்கள்
பகற்கனவுச்
சுதந்திரம்!
•
கொள்ளிகுடத்துடன்–
எம் இன
அரசியல் வாதிகள்....!
•
இது எம்
இனத்தின்
இறுதியாத்திரை!?
•
யாழ்-ஞானகணேசன்.

## தேன் கிண்ணம்

## அணையாத காதல்




காதல் விடத்தைக்
கக்கிவிட்டு
பறந்துவிட்டாய்!
கனடாவா?
அவு(ட்)ஸ்திரேலியாவா?
0–0
காய்த்த மரம்
கல்லெறி படுவது போல்
காதலித்த நெஞ்சம்
பேதலிக்கின்றது!
0–0
கருகிய நெஞ்சத்தில்
உன் முகம்
மலரும் போதெல்லாம்
ஏன் இந்த
விரக்தி மணம்
வீசுகின்றது?
0–0
உடை மாற்றுவது போல்
எளிதாக
மாற்றிவிட்டாய்–
புதிய உறவுகளைப்
புதுப்பிக்க!
0–0
பாம்பு
செட்டை கழற்றினால்
மீண்டும்
போடுவதில்லை;
நீ
என்ன பாம்பு?
0–0
என்
நெருப்பு
இன்னும்
அணையவில்லை–
நீ தந்த
காதல் எண்ணெய்
உள்ளதால்!
0–0
மாரிமுத்து யோகராஜன்-
மட்/ ஆசிரியர்
கலாசாலை.

## இலவு காத்தோம்....!

மலர்ந்தவைகூட
உதிர்ந்துகொண்டிருக்கும்
ஒரு மந்தகாசமான பொழுது
புதியவை மலர்வதாய்
பேச்சுக்கேட்கிறது!
★★★
எரியும் உயிரில்
குளிர்காயும் கூட்டம்
பந்தமும் கையுமாய்
பவனிவருகிறது!
★★★
வயிற்றில் நெருப்பேந்திய
மக்கள்
வாயில் வாள் ஏந்திய
வழிகாட்டிகள்!
★★★
நம்பிக்கைகள்
புதை குழிவரை
போனபின்பும்
கண்கள் பொத்தி...
கைகள் கட்டி...!
★★★
இதைத் தோண்ட
மண்வெட்டியெடுக்கத்
துணியாத மனிதங்கள்
விடியப் போவதாய்
கட்டியம் கூறும்–
காத்திருப்போம்!!
★★★
உரும்பராய்-சிவன் சுதன்.

## பேனா நண்பர்கள்



பெயர்: என். தேவநாயகம்
வயது: 20
முகவரி: 101, புளியங்குளம்,
தேவாநகர்,
திருகோணமலை.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்: ஆர். கிருஷ்ணவேணி,
வயது: 14
முகவரி:
த.பெ.இல.333, முவான்
கந்தை, மாவத்தகம.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(23.08.1998 தொடக்கம் 29.08.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு, கேது. |
| கடகம் | - செவ்வாய், புதன், வெள்ளி. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. (வக்ரம்) |

சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தேகசுகமின்னை, கவலை. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- மனகிழ்ச்சி, பொருள் விரயம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், சுப காரியம். | பகல் | 11 | மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, சோம்பல். | மாலை | 5 | மணி |
| வியாழன்- வெளியிடப் பிரயாணம், மனக் கவலை. | காலை | 8 | மணி |
| வெள்ளி- இனவரவு, மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| சனி- வீண்பிரயத்தனம், மனச்சஞ்சலம். | மாலை | 4 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் பிரச்சனை, மனக்கிலேசம். | காலை | 7 | மணி |
| திங்கள்- உடல் வியாதி, மனவியாகூலம். | காலை | 6 | மணி |
| செவ்வாய்- பணவரவு, வெற்றி. | காலை | 7 | மணி |
| புதன்- மனப் பயம், வெளியிடப் பிரயாணம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தனலாபம், மன மகிழ்ச்சி. | மாலை | 4 | மணி |
| வெள்ளி- கீர்த்தி, அதிகார விருத்தி. | காலை | 7 | மணி |
| சனி- பொருட் செலவு, வீண் அலைச்சல். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணவரவு, நிம்மதியின்மை. | காலை | 8 | மணி |
| திங்கள்- நம்பிக்கையின்மை, மனப் பயம். | காலை | 7 | மணி |
| செவ்வாய்- மனக்குழப்பம், பிரயாணம். | மு.ப. | 9 | மணி |
| புதன்- நண்பர் உறவு, மன மகிழ்ச்சி. | காலை | 6 | மணி |
| வியாழன்- மனக் கவலை, நண்பர்கள் விரோதம். | மாலை | 5 | மணி |
| வெள்ளி- குடும்ப மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி- இலாபக் குறைவு, வீண் முயற்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, தீவிர யோசனை. | காலை | 7 | மணி |
| திங்கள்- பணவரவு, உறவினர் வருதல். | காலை | 6 | மணி |
| செவ்வாய்- நிலையற்புத்தி, விரோதம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- அவமதிப்பு, வெளியிடப் பிரயாணம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- தனவரவு, மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| வெள்ளி- வாகன மோதல், பொருள் வரவு. | மாலை | 4 | மணி |
| சனி- பணச் செலவு, மனக்குழப்பம். | காலை | 8 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, பொருள் நட்டம். | காலை | 7 | மணி |
| திங்கள்- தேகசுகம், யோசனை. | காலை | 6 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், பொருள் விரயம். | மாலை | 6 | மணி |
| புதன்- இலாபமின்மை, தர்மவிரயம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- காரியபங்கம், செலவு. | காலை | 8 | மணி |
| வெள்ளி- பணவரவு, மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| சனி- காரிய நட்டம், இனசன விரோதம். | பகல் | 2 | மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு் அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியத் தடை, வீண் யோசனை. | மாலை | 7 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, சுற்றுலா. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தன லாபம், தேக சுகம். | மாலை | 6 | மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, முயற்சி பலிதம். | காலை | 7 | மணி |
| வியாழன்- சுபசெய்தி, இனசன வரவு. | காலை | 7 | மணி |
| வெள்ளி- தனலாபம், பிரயாணம். | மு.ப. | 9 | மணி |
| சனி- தேகசுகக் குறைவு, கவலை. | மாலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் நன்மை, சுக விருத்தி. | காலை | 7 | மணி |
| திங்கள்- காரிய நட்டம், மனச் சஞ்சலம். | மாலை | 6 | மணி |
| செவ்வாய்- செலவு அலைச்சல், பணச் செலவு. | காலை | 7 | மணி |
| புதன்- சுபயோகம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- துயரமான தகவல், மனச்சலனம். | காலை | 8 | மணி |
| வெள்ளி- நண்பர் விரோதம், முயற்சி தடை. | பகல் | 1 | மணி |
| சனி- வாகனப் பங்கம், தேகசுகம் பாதிப்பு. | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் விரோதம்,வீண் பொல்லாப்பு. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- திரவிய லாபம், அந்நியர் உதவி. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வீண் அலைச்சல், மனப் பயம். | பகல் | 12 | மணி |
| புதன்- காரியத் தடை, இலாபமின்மை. | காலை | 7 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, இனசன வரவு. | காலை | 8 | மணி |
| வெள்ளி- தரும காரியம், பிரயாணம். | காலை | 7 | மணி |
| சனி- முயற்சி தடை, சுபகாரிய தாமதம். | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, அரசபயம். | காலை | 7 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- மனக் கவலை, வீண் அலைச்சல். | மாலை | 6 | மணி |
| புதன்- புத்தி விருத்தி, பிரயாணம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- இனசன விரோதம், சஞ்சலம். | காலை | 7 | மணி |
| வெள்ளி- நண்பர் வருகை, கௌரவம். | காலை | 8 | மணி |
| சனி- வாக்குவாதம், மனக்கவலை. | பகல | 12 | மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கவலை, நண்பர் உதவி. | காலை | 7 | மணி |
| திங்கள்- தேகசுககுறைவு, கவலை. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வீண் அலைச்சல், சோர்வு. | காலை | 8 | மணி |
| புதன்- வீண் தொல்லை, பொருள் செலவு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பொருள் வரவு, நிம்மதியின்மை. | மாலை | 6 | மணி |
| வெள்ளி- பெண்களாற்கலகம், கவலை. | காலை | 8 | மணி |
| சனி- தொழில் கேடு, முயற்சித் தடை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குழப்பம், யோசனை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண் கவலை, அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, கீர்த்தி. | காலை | 7 | மணி |
| புதன்- பணவரவு, ஏமாற்றம். | காலை | 8 | மணி |
| வியாழன்- பணவரவு, பொருள் நட்டம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- மனக் கவலை, பிரயாணம். | மாலை | 5 | மணி |
| சனி- வெற்றி, தேகமெலிவு. | காலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மீனம்: சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், கௌரவம். | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- போஜன சுகம், மன மகிழ்ச்சி. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வாக்குவாதம், வீண் அலைச்சல். | பகல் | 11 | மணி |
| புதன்- குடும்ப கலகம், நிம்மதியின்மை. | காலை | 7 | மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், வாக்கு வாதம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தனலாபம், கீர்த்தி. | காலை | 7 | மணி |
| சனி- தேகசும் பாதிப்பு, மனக் கவலை. | மாலை | 6 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

# லேடீஸ் ஸ்பெஷல்

## உடல் அழகும் சரும அழகும்



உடல் அழகைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என நினைக்கும் பெண்கள் முதலில் தமது சருமப் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சருமத்தில் எண்ணெய்ப் பசையான சருமம், உலர்ந்த சருமம், இரண்டும் கலந்த சருமம், அதிக உணர்ச்சிக் கொள்ளும் சருமம் என 4 வகைகள் உண்டு.

இவற்றில் தமது சருமம் எந்த வகையைச் சேர்ந்தது என்பதை முதலில் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த மாதிரியான சவர்க்காரத்தை உபயோகப்படுத்துவது மிகவும் முக்கியம். அப்போதுதான் சருமம் புத்துணர்ச்சியுடன் காட்சி தரும்.

சவர்க்காரம் போட்டுக் கழுவினால் போதாதா? அது எந்த சவர்க்காரமாக இருந்தால் என்ன, என்று நினைக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தமது சருமத்திற்குத் தகுந்த சவர்க்காரத்தைத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களானாலும்- அவர்கள் கணவன், மனைவியாக இருந்தாலும் அவரவர் சருமத்தின் தன்மைக் கேற்றபடி தனித்தனி சவர்க்காரங்களை வாங்கி உபயோகிப்பதுதான் நல்லது.

இரவில் படுக்கப்போகுமுன் சிறப்பாக கவனம் எடுத்து முகத்தைக் கழுவ வேண்டும். உடம்பிற்கு சவர்க்காரம் போட்டுக் குளிக்கலாம் என்றாலும் முகத்திற்கு அடிக்கடி சவர்க்காரம் போடக்கூடாது.

வெளியே போய்வரும்போது காற்றில் கலந்திருக்கும் எத்தனையோ அசுத்தங்கள் சருமத்தில் படியும். அவற்றைச் சுத்தமாகக் கழுவ சவர்க்காரம் மட்டும் போதாது.

'கிளீன்சிங் மில்க்' (CLEANSING MILK) எனப்படும் அழகுசாதனப் பொருளை முகத்தில் தேய்த்துக் கழுவ வேண்டும். இது முகத்தில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத துவாரங்களில் படிந்திருக்கும் அழுக்குகளை முழுமையாக அகற்றுகிறது.

கிளீன்சிங் மில்க் போட்டு முகத்தைக் கழுவிய பின் டோனர் (Toner) என்ற இன்னொரு அழகுசாதனப் பொருளைப் போட்டு முகத்தைக் கழுவவேண்டும்.

இரவில் படுக்கச் செல்லும்போது முகத்தில் எந்தவிதமான மேக்-அப்பும் இல்லாமல் சுத்தமாகக் கழுவி விட்டுப் படுப்பது அவசியம். மேக்-அப் போட்டுப் படுப்பது சரும அழகைக் கெடுத்துவிடும்.

## தாய்ப்பால் இருக்க தண்ணீர் எதற்கு?



தாய்ப்பால் மற்றும் தாய்ப்பால் ஊட்டுதல் பற்றிய சில விடயங்கள் இதோ:

* பிரசவத்திற்கு முன்பே கர்ப்பிணிப் பெண்ணிடம் தாய்ப்பால் உற்பத்தி தொடங்கிவிடுகிறது.
* குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்ட வேண்டும்.
* தாயின் மார்பில் உறிஞ்சி குழந்தை பால் குடிக்கும்போது உடலில் ஏற்படும் மாறுதலால் ஒருவித ஹோர்மோன் சுரந்து தாய்ப்பாலின் உற்பத்தியைப் பெருக்குகிறது.
* சேரியன் சத்திர சிகிச்சை நடந்தால் ...ன்கு மணிநேரம் கடந்த பின்னர்தான் தாய், பாலூட்டலாம்.
* தாய் மார்பில் முதலில் சுரக்கும் பாலில் குழந்தைக்குத் தேவையான நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது. அதனால் முதல் பாலை தவறாமல் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். இந்த முதல் பாலைக் குடிக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்த்மா மற்றும் சில நோய்கள் ஏற்படாது.
* நன்றாகப் பால் குடிக்கும் குழந்தைக்கு கோடை காலத்தில்கூட தண்ணீர் தேவை இல்லை. ஏனென்றால் குழந்தைக்குத் தேவையான உணவும், தண்ணீரும் பாலிலே இருக்கிறது.
* தாய்ப்பால் ஒழுங்காக ஊட்டப்படும் குழந்தைகளுக்கு தனியாக விட்டமின் சத்துக்களுக்காக எதுவும் கொடுக்க வேண்டியதில்லை.
* பல குழந்தைகளுக்கு கிரைப்வோட்டர் கொடுக்கிறார்கள். அதில் சிறிதளவு மதுத்தன்மை உள்ளது. அதே நேரத்தில் குழந்தையின் வாய்வுத் தொல்லையைப் போக்கும். ஆனாலும் தொடர்ந்து கிரைப்வோட்டர் கொடுப்பது நல்லதல்ல.
* தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் அழகு நிலைக்கும். உடல் குண்டாகாது. புற்றுநோய் வராமலும் தடுக்கப்படுகிறது.
* சிறிய மார்பகங்களைக் கொண்டவர்களுக்கு குறைவாகவே பால் சுரக்கும் என்று நினைப்பது தவறு. குழந்தை பால் குடிக்கும் முறையில்தான் தாயிடம் பால் அதிகம் சுரக்கும்.



# கண்ணீரில் கரைந்த இரவுகள்



இரு துருவங்கள்

டயனாவின் குளியலறையில் கேலிச்சித்திரங்கள் சட்டமிடப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தன.

அவற்றை இரசித்தபடியே டயானா குளித்து முடிப்பார். அதில் ஒருவிதமான திருப்தி அவருக்கு ஏற்பட்டது.

கேலிச் சித்திரங்கள் அனைத்திலும் ஒரு மனிதர் தான் காணப்பட்டார். அவரைத் தான் பலவிதமாக, பல கோணங்களில் கேலி செய்து சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன.

அந்த மனிதர் வேறுயாருமல்ல; இளவரசர் சாள்ஸ்தான் அவர்.

அவரை கேலி செய்து பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியான கேலிச்சித்திரங்களைச் சேகரித்து அவ்வாறு தொங்கவிட்டிருந்தார் டயானா.

இளவரசர் சாள்ஸ்மீது டயானா எந்தளவு வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதற்கு மேற்படி சம்பவமே தக்க உதாரணமாகும்.

"டயானாவின் சில நடவடிக்கைகள் பைத்தியக்காரத்தனமாகத் தெரியலாம். ஆனால் அத்தனையும் அவளது மென்மையான உள்ளத்தில் ஏற்பட்ட காயங்களின் வலிகளே!" என்பது டயானாவுக்கு நெருக்கமான உளவியல் நிபுணர் ஒருவரது கருத்து.

தங்கள் தாயாரின் குளியலறையில் தந்தையாரின் கேலிச்சித்திரங்களை புத்திரர்களும் காணத்தவறவில்லை. அதனையிட்டு தங்கள் தாயாரிடம் அவர்கள் எதனையும் கேட்கவும் இல்லை.

## "எனக்கொரு தேவதை வேண்டும்!"

### பிடித்த வாசகங்கள்

கென்சிங்டன் மாளிகையில் டயானா நடமாடும் பகுதிகளில் இருந்த நாற்காலிகள், குஷன்களில் பலதரப்பட்ட வாசகங்கள் நூலால் பொறிக்கப்பட்டிருந்தன.

தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் தரத்தக்க வாசகங்களே அவ்வாறு பொறிக்கப்பட்டிருந்தன.

கென்சிங்டன் மாளிகையில் டயானா தனியாக வசித்தார். அவருக்காகவே அம்மாளிகை ஒதுக்கப்பட்டிருந்தது.

அப்படியிருந்தும் தமது உளவாளிகள் சிலரை அரச குடும்பத்தினர் அங்கு விட்டு வைத்திருந்தனர். அவர்கள் டயானாவின் நடவடிக்கைகளை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தனர்.

மாளிகைக்கும், டயானாவுக்கும் பாதுகாப்புக்காக பொலிசாரும், பாதுகாப்பு அலுவலர்களும் எப்போதும் உள்ளேயும், வெளியேயும் நடமாடிக்கொண்டிருந்தனர்.

கென்சிங்டன் மாளிகையிலும் தான் ஒரு சிறைப்பறவையாக இருப்பதாகவே டயானா எண்ணினார்.

"இந்தக் கூண்டைவிட்டும் விரைவில் வெளியேறிவிடுவேன். அந்த நன் நாளுக்காக காத்திருக்கிறேன் !" என்று கூறிக்கொண்டிருந்தார்.

டயானாவின் சகோதரரின் பெயர் சாள்ஸ் ஸ்பென்சர். அவரிடம் ஒருமுறை, "உனது பெயர், நான் மறக்கவிரும்பும் ஒரு பெயரை அடிக்கடி ஞாபகப்படுத்துகிறது!" என்றாராம் டயானா.

சாள்ஸ் ஸ்பென்சருக்கு அலஸ்தோட்டத்தில் நான்கு படுக்கை அறைகளைக்கொண்ட வீடு ஒன்று சொந்தமாக இருந்தது.

மிக அமைதியான சூழலில், எந்தக் கெடுபிடியும் இல்லாதிருந்த அந்த வீடு டயானாவுக்கு பிடித்தமானது.

அதனை அறிந்திருந்த சாள்ஸ் ஸ்பென்சர் அந்த வீட்டை டயானாவுக்கு தர முன்வந்தார்.

சந்தோசபூரிப்பில் தன் சகோதரரின் கன்னத்தில் முத்தமிட்டார் டயானா.

தனக்கான ஒரு கூடு- அரச குடும்ப உறவுகளுக்கும், தொடர்புகளுக்கும் வெளியே இருக்கிறது என்ற நினைப்பே அவருக்கு சந்தோசத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது.

கென்சிங்டன் மாளிகைக்கு திருமணத்தின் பின்னர் டயானா- சாள்ஸ் தம்பதி சென்றபோது, அந்த இல்லத்தை அழகுபடுத்தியவர் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த டட்லி பொப்லாக்.

இல்ல அழகுபடுத்தல் நிபுணரான அவரை நன்றாக ஞாபகத்தில் வைத்திருந்த டயானா, அவருக்குத் தகவல் அனுப்பி அழைக்க முடிவு செய்தார்.

அலஸ் தோட்டத்தில் உள்ள தனது கூட்டை அழகுபடுத்தவே அவருக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்.



### அண்ணா நீயுமா?

அலஸ் தோட்ட வீட்டுக்கு செல்லும் நினைப்பே டயானாவுக்கு தனி உற்சாகத்தைத் தந்துகொண்டிருந்தது.

தன் சிநேகிதிகளிடம் அந்தத் தகவலை என்றுமில்லாத குதூகலத்துடன் அறியப்படுத்தினார்.

"சாள்ஸுடன் திருமணம் நடக்க இருந்தபோது, அரச குடும்ப மருமகளாக செல்லப்போவதை நினைத்துக்கூட டயானா அந்தளவுக்கு மகிழ்ச்சிப்பட்டதில்லை. அலஸ் தோட்ட வீடு என்றதும் தனக்கு சிறகு முளைத்ததுபோல பூரித்தார்," என்று அவரது சிநேகிதிகள் கூறினர்.

ஆனால் டயானாவின் துரதிஷ்டம் அவரது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அவரது சந்தோஷச் சிறகுகள் மறுபடி முறிக்கப்பட்டன.



இளவயதில் சகோதரர் சாள்ஸ் ஸ்பென்சருடன் டயானா

டயானாவின் சகோதரன் சாள்ஸ்ஸ்பென்சரிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்பு டயானாவுக்கு பேரிடியானது.

வீட்டைத்தர தானாக முன்வந்த சாள்ஸ் ஸ்பென்சர், அந்த முடிவை மாற்றிக்கொண்டார்.

"நீ இங்கு வந்தால் எப்படியாவது பொலிசாரும், பாதுகாவலர்களும் வந்தே தீருவார்கள். பத்திரிகையாளர்களும் இங்கு வந்து மொய்ப்பார்கள். அலஸ்தோட்ட அமைதியே கெட்டுப்போய்விடும்!" என்றார் சாள்ஸ் ஸ்பென்சர்.

சாள்ஸ் ஸ்பென்சர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வோர் இடியாக டயானாவின் தலையில் இறங்கியது.

'சகோதரபாசம் என்பதும் சில சமயங்களில் வேஷமாகிவிடு கிறதோ?' என்று எண்ணிக் கலங்கினார்.

தனக்கு ஏற்படும் மகிழ்ச்சிகள் எதுவுமே சொற்ப ஆயுளில் மடிந்து போவதை எண்ணி தனிமையில் புலம்பினார்.

"என்னைத் தேவதை என்கிறார்கள்; எனக்குத்தான் ஒரு தேவதையின் அருள் தேவையாக இருக்கிறது. எனக்கு மகிழ்ச்சியைத் தரவல்ல தேவதையைத்தான் நானும் தேடிக்கொண்டிருக்கிறேன். என்னைப் போய் தேவதை "என்கிறார்களே!" என்று சொல்லி வெதும்பினார்.

அவரை சிநேகிதிகளால் ஆறுதல்படுத்த முடியவில்லை. 'கணவனின் அலட்சியத்தால் கலங்கிநிற்கும் டயானாவை அவரது சகோதரரும் காயப்படுத்திவிட்டாரே!' என்று சிநேகிதிகளும் கவலைப்பட்டனர்.

தன் சிநேகிதி ஒருத்தருக்கு டயானா எழுதியதாக கூறப்படும் கடிதத்தில் உள்ளத்தினுள்ளே கொந்தளித்த உணர்ச்சிகளைக் கொட்டியிருந்தார்.

"ஏமாற்றங்கள்தான் வாழ்க்கையில் நிரந்தமான சொத்துக்கள் என்று நினைக்கிறேன். எல்லோருமே என்னை ஏமாற்றுவதற்காக அவதாரமெடுத்ததுபோல ஏன் நடந்து கொள்கிறார்கள்?

நான் எவரையும் ஏமாற்ற நினைத்ததில்லை. அதற்காகவும் சேர்த்து என்னை ஏமாற்றுகிறார்களோ தெரியவில்லை.

நான். தனிமரமாக நிற்கிறேன். என்னை எல்லாப் பக்கம் இருந்தும் அசைத்துப்பார்க்க எல்லோரும் பிரியப்படுகிறார்கள் போலிருக்கிறது!" என்று எழுதியிருந்தார்.

### மறுமணம்

டயானாவுக்கு தனது தந்தையாரின் இரண்டாவது மனைவியான றைனை அதிகம் பிடிப்பதில்லை. சிறிய தாயாரான றைனுக்கு டயானா சூட்டியிருந்த பட்டங்களில் ஒன்று 'றைன் அமிலம்'.

டயானாவின் தந்தையாரான ஸ்பென்சர் இறந்தபின்னர் சிறிய தாயாரான றைன் ஃபிரான்ஸ் நாட்டு செல்வந்தரான கவுண்ட் ஜீன் ஃபிராங்கொயிஸ்டி சாம்ரன் என்பவரை மறுமணம் செய்து கொண்டார்.

டயானா இத்திருமணத்தால் தன்மீது கோபம் கொண்டிருக்கக் கூடும் என்று றைன் நினைத்தார்.

ஆனால் நடந்தது வேறு.

றைனையும், அவரது கணவரையும் அழைத்து விருந்து கொடுத்து கௌரவித்தார் டயானா. றைன் நெகிழ்ந்துபோனார்.

**(அடுத்த வாரமும் வரும்)**


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EG

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-08-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | அ. மேரி அன்ரோனியா, 38, கரப்பன்காடு வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 15

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.





என்னைப் புதியவுயி ராக்கி-எனக்
கேதுங் கவலையறச் செய்து-மதி
தன்னை மிகத்தெளிவு செய்து-என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# ஓநாயின் சூழ்ச்சி

ஒரு கிராமத்தில் ஒருவனிடம் செம்மறியாட்டு மந்தை ஒன்று இருந்தது. அவன் அந்த மந்தையைப் பராமரிக்கும் பொறுப்பை ஒரு இடையனிடம் ஒப்படைத்திருந்தான்.

ஒருநாள் அந்த இடையன் செம்மறி யாட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்த போது வழி தவறிய வெள்ளாட்டுக் குட்டி யொன்றைக் கண்டான். வெகுநேரம்வரை அதன் சொந்தக்காரர் அதனைத் தேடி வராததால் அதனைத் தன்னுடைய செம்மறி யாட்டு மந்தையுடன் சேர்த்துக் கொண்டான்.

செம்மறியாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டு வரும்போது அவற்றுடன் வெள் ளாட்டுக் குட்டியையும் கொண்டு வருவான்.

ஒரு நாள் செம்மறியாட்டு மந்தையுடன் வெள்ளாட்டுக் குட்டி மேய்ந்து கொண்டிருந் தது. மேய்ந்து கொண்டே அது மந்தையை விட்டுச் சற்றுத் தூரம் சென்றுவிட்டது.

கொழுத்துச் செழித்திருந்த வெள்ளாட் டுக் குட்டி மேய்ந்து கொண்டிருப்பதை சற்றுத் தொலைவில் இருந்த ஓநாய் ஒன்று கவனித்தது. தனியாக நின்று கொண்டிருந்த வெள்ளாட்டுக் குட்டிக்கு அருகே ஓநாயால் போகமுடியாது. ஏனென்றால் ஓநாய் நின்ற இடத்திற்கும் ஆட்டுக் குட்டி நின்ற இடத்திற் கும் குறுக்காக ஆறு ஒன்று ஓடிக் கொண்டி ருந்தது.

எனவே ஆற்றிற்கு அருகே ஆட்டுக் குட்டியை வரவழைத்து எப்படியாவது அதைக் கொன்று தின்ன முடிவு செய்தது ஓநாய்.

வெள்ளாட்டுக் குட்டி, செம்மறியாட்டு மந்தையுடன் இருப்பதை பலமுறை ஓநாய் பார்த்திருந்தது. மனதில் ஒரு திட்டத்தை உரு வாக்கி, ஆற்றின் அருகே நின்று ஆட்டுக் குட்டியை அழைத்தது ஓநாய்.

"வெள்ளாட்டுக்குட்டியே! நீ ஏன் செம்மறி யாட்டு மந்தையுடன் சேர்ந்திருக்கிறாய்? உன் தாயாரையும், உறவினர்களையும் நான் அடிக் கடி பார்ப்பதுண்டு. உன் தாயார் உன்னைப் பற்றி அடிக்கடி என்னிடம் கேட்பதுண்டு.

உன்னை எங்காவது கண்டால் தன்னிடம் அழைத்து வரும்படி என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறது. எனவே என்னுடன் வந்து விடு. நான் உன்னை உன் தாயாரிடம் சேர்த்து விடுகிறேன்!" என்று நயவஞ்சகமாகப் பேசியது.

ஓநாயின் பேச்சில் கபடத்தனம் இருப்ப தைப் புரிந்து கொண்டது ஆட்டுக்குட்டி.


"ஓநாயே! என்னை எனது தாயாருடன் சேர்ப்பிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டதற்கு மிக்க நன்றி. நான் தனியாக எங்குமீ செல்லமாட்டேன். இப்படித் தனியாக ஒருமுறை வந்துதான் என் தாயாரைப் பிரிந்தேன்.

என் தாயாரை மறுபடி நீர் சந்தித்தால் நான் இங்குதான் அடிக்கடி மேய்ச்சலுக்கு வருவேன் என்றும் அவர்களை வந்து என்னை அழைத்துச் செல்லும்படியும் சொல்லிவிடும்!" என்று கூறி அவ்விடத்தைவிட்டு செம்மறியாட்டு மந்தையுடன் சேர்ந்து கொண்டது ஆட்டுக்குட்டி.

தனது சூழ்ச்சி ஆட்டுக்குட்டியிடம் பலிக் காததைக் கண்ட ஓநாய் ஏமாற்றத்துடன் சென்றது.

*'நமது விரோதிகள் நம்மிடம் பரிவு காட்டி அன்பொழுகப் பேசுகிறார்கள் என்றால் எமக்கு எதிராக ஏதோ ஒன்றைச் செய்வதற்கான சூழ்ச்சியே அது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்!*

## அதிசயம் - ஆனால் உண்மை!





**நீர்மூழ்கிப் பறவை:** 'ஸ்வான்க்ரெப்' எனப்படும் இப் பறவை தன் முதுகில் குஞ்சுகளை ஏற்றிக்கொண்டு ஆழம் மிகுந்த நீரில் மூழ்கி நீந்தக் கூடியது.



**நண்டுச் சிப்பி:** 'ரிப்ட் லிம்பட்' என்ற நண்டுச் சிப்பி, பாறையை வெகு இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும். இதன் ஒரு சதுர அடிக்கு, 70 இறாத்தல் பலத்தைப் பயன்படுத்தினால்தான் இதனுடைய ஒரு காலை அசைக்க முடியும்.

**மரங்கொத்தித் தலை:** முற்காலத்தில் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் வாழ்ந்த பழங்குடி மக்கள் சிவப்புத் தலை மரங்கொத்தியின் தலையை நாணயமாகப் பயன்படுத்தி வந்தனர்.





**சிவப்பு நதி:** ஸ்பெயின் நாட்டில் ஓடும் ரியோடின்டோ நதியில் ஒரு வித தாதுக் கரைசல் கலந்துள்ளது. இந்தத் தாதுக்கரைசலும், காற்றும் சேர்ந்து நதிநீரை சிவப்பு நீராக்கி வைத்துள்ளன.

## வாரம் ஒரு நாடு

### லிதுவேனியா

| | |
|---|---|
| தலைநகர் | - வில்நியுஸ் |
| பரப்பு | - 65,200 சதுர கிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 37 இலட்சம் |
| மொழி | - லிதுவேனியன் |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| எழுத்தறிவு | - 98.4% |
| நாணயம் | - லிடாஸ் |
| தனிநபர் வருமானம் | - 1910 டொலர். |



**அமைவிடம்:**

முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றான லிதுவேனியாவுக்கு வடக்கே லத்வியா, கிழக்கே பெலோரஷ்யா, தெற்கே போலந்து, மேற்கே பால்டிக் கடல் ஆகியன எல்லைகளாகவுள்ளன.


**வரலாறு:**

சோவியத் யூனியனும், ஜெர்மனியும் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை அடுத்து இது 1939ல் சோவியத் யூனியனின் ஆளுகைக் குட்பட்டது. 1940ல் சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றானது. 1991 ஆகஸ்டில் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனிநாடாகியது. 1993 ஆகஸ்ட் 31ல் ரஷ்யா இங்கிருந்த தனது இறுதிப்படை களைத் திருப்பி அழைத்துக்கொண்டது.

**பொருளாதாரம்:**

மிக வேகமாகத் தொழில் வளர்ச்சி கண்டு வருகிறது. பைன் மரக்காடுகள் இங்கு அதிகமாகவுள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.08.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 258
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 256

**பரிசுக்குரியவர்:**
மொஹமட் ச.:.பான்,
ஒக்ஸ்.:.போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன் என். முகமட் ஸியாத், அப்துல் மஜீத் வித்தியாலயம், சின்னக் கிண்ணியா. | மர்சா மிருணாளினி கனகநாயகம், கொ/நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்., கொழும்பு-13. |
| பி. உமாமகேஸ்வரி, மூன்பிலேன் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா. | செல்வி கு. கௌதமி, செவிப்புலன் இழந்தோர் பாடசாலை, லிங்கநகர், திருமலை. |
| உம்மு குல்தும், ஸாஹிரா கல்லூரி, கம்பளை. | ஆர். நிசாந்தினி, இ/தமிழ் ம.வித்தியாலயம், பலாங்கொடை. |
| க. சகாயதேவன், சென். மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | இரவீந்திரதாசன் பிரசாந்தன், மெதடிஸ் தமிழ் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை. |
| இராசநாயகம் விண்டு, மட்/களுதாவளை மகா வித்., களுவாஞ்சிக்குடி. | த.பாபுஜி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |

## முட்டையின் நிறம்

மரப்பொந்துகளிலும் குழிகளிலும் முட்டையிடும் பறவைகளின் முட்டைகள் எல்லாம் பொதுவாக வெண்மை நிறமாக இருக்கும். உதய காலப் பறவை இனங்களின் முட்டைகளும் வெண்மையாக-மென்மையாக இருக்கும்.



திறந்த வெளிக் கூட்டில் வசிக்கும் பறவைகளின் முட்டைகள் சூழல்களுக்கேற்ற நிறத்தில் அமைந்திருக்கும். சில முட்டைகள் பழுப்பு நிறமாக இருக்கும். சில முட்டைகளில் சிறு சிறு புள்ளிகள் இருக்கும். பொட்டுக்கள் வைத்தது போன்றும் தழும்புகள், வரிகள் உள்ளன போன்றும் சில பறவைகளின் முட்டைகள் காணப்படும்.

டார்மிகான் எனும் காட்டுக் கோழி முட்டை யிட்டவுடன் முட்டையின் நிறம் இரத்தச் சிவப்பாக இருக்கும். பிறகு வெளிச்சூழல்களுக் கேற்ப சிறிது நேரத்திற்குள் கறுப்பாக மாறிவிடும்.

## கோபத்தின் விளைவு


கோபம்- இது எல்லாருக்கும் ஏற்படும். இதன் விளைவு என்ன?

நாம் ஒரு சில நொடிகள் கோபமாக இருக்கும் நேரத்தை சக்தியாக மாற்றினால் அதன் மூலம் இரண்டு வாட் பல்ப் ஒன்றை எரிய வைக்கலாம். ஒரு நிமிடம் இரண்டு நிமிடங்கள் அல்ல, தொடர்ந்து 8 நிமிடங்கள் எரிய வைக்கலாம் என்கிறார் கள் ஆராய்ச்சியாளர்கள்.



கோபம் உடலில் இரசாயன மாற்றத் தையும் உண்டு பண்ணுகிறது. சிறிது அட்ரனலினை வெளியிடுகிறது. இரத்தத் தில் உள்ள கிளைக்கோஜனை குளுக் கோஸாக மாற்றுகிறது.

## நாற்காலி பற்றிய செய்திகள்



- நாற்காலிகள் அறிமுகமாவதற்கு முன் விலங்குகளின் தோலில் பாய் போலச் செய்து தரையில் உட்காரும் பழக்கம் இருந்தது.
- சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தியர்கள் விலங்குகளின் எலும்புகளில் ஸ்டூல் போன்ற இருக்கைகளை முதலில் தயாரித்தனர்.
- எகிப்தியர்களைப் பின்பற்றி பாபிலோனியர்களும், அசிரியர்களும் அழகிய வேலைப் பாடுகளுடன் கூடிய நாற்காலிகளைத் தயாரித்தனர்.
- கிரேக்கர்கள் மிக எளிமையான நாற்காலிகளைத் தயாரித்தனர். இவர்களைப் பின்பற்றி பின்னர் ரோமானியர்கள் உலோகம், தந்தங்கள், கற்கள் கொண்டு நாற்காலிகள் தயாரித்தனர்.

## மருந்துக் கொம்பு



காண்டாமிருகத்தின் கொம்பை பொடியாக்கி உட்கொண் டால் பல நோய்கள் குணமாகும். இக் கொம் பிற்கு விஷத்தை முறிக்கும் ஆற்றல் உண்டு. இதன் காரணமாக சீன நாட்டினர் அதிக விலை கொடுத்து இக் கொம்புகளை வாங்கிச் செல் கின்றனர்.

ஆபிரிக்காவில் இக் கொம்பு களைக் கொண்டு வேலைப்பாடு களுடைய கலைப்பொருட்கள் செய் யப்படுகின்றன. இது அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இதற்காக பல காண்டாமிருகங்கள் வேட்டையாடப் படுகின்றன.

## கிரிக்கெட்டின் வரலாறு



இப்போது நம் நாட்டில் பெரும் பாலானவர்கள் விரும்பிப் பார்க்கும் விளையாட்டு கிரிக்கெட். இந்த விளையாட்டு எப்போது தோன்றியது என்று தெரியுமா?

சுமார் 450 வருடங்களுக்கு முன் கிரிக்கெட் போன்ற ஒரு விளையாட்டு இங்கிலாந்தில் விளையாடப்பட்டு வந்தது.


1700ம் ஆண்டு இலண்டனில் உள்ள ஹொமன் கிளப் என்ற இடத்தில் கிரிக்கெட் விளையாடப்பட்டதாக குறிப்புக்கள் உள்ளன.

ஆயினும் 1744ம் ஆண்டுதான் கிரிக்கெட் விளையாட்டிற்கென விதிமுறைகள் வகுக் கப்பட்டு, ஒரு போட்டியாக இங்கிலாந்தில் நடத்தப்பட்டது. அப்போது இரண்டு ஸ்டம்புகள் மட்டுமே நடப்பட்டு விளையாடப்பட்டது. இதன் பின்னர் 30 ஆண்டுகள் கழித்தே மூன்று ஸ்டம்பு கள் பயன்படுத்தி விளையாடப்பட்டது.

இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டு தற்போது பல நாடுகளில் விளையாடப்பட்டு வருகிறது.

## சீனாவின் முதன்மைகள்

முதல் பெயர்-கதே
முதல் தலைநகரம்- நான்ஹிங்
முதல் தத்துவஞானி-கன்பியூசியஸ்
முதல் மன்னன் - ஷி-ஹாவங்க்-டி
முதல் தலைவர் - மாசே துங்
முதல் ஜனாதிபதி -சன்யாட்சென்
முதல் பிரதமர் -சூ என்-லாய்
முதல் நாளிதழ் -டஸிங்பவோ
முதல் பத்திரிகை-டிபோமாளிகை ரிப்போர்ட்
முதல் செயற்கைக்கோள்-ஸிஸோம்-1.



## அமோக வாரம் 10

# மேற்கே ஒரு குற்றம்



**எழுத்துலக வேந்தன் சுஜாதா**

“வசந்த் இதைப் பாரு!”

வசந்த் பார்த்தான். “என்ன இது வெறும் ரசீது?”

“ரசீதைக் கொடுத்துட்டு அந்தப் பெட்டியை வாங்கிக்க முடியும்!”

கணேஷ் யோசித்தான். “மை காட் வசந்த்! அவுங்க ரொம்ப கெட்டிக் காரங்க!”

கவரைப் பார்த்தான். செண்ட்ரலி லேயே தபாலில் சேர்க்கப்பட்டிருந்தது.

“சாவி அனுப்பிச்சிருக்கான்! என்ன அர்த்தம்.?”

“பெட்டியை வாங்கிக்க! திறன்னு அர்த்தம்.”

“வாங்க பாஸ், அடுத்த ஸ்டாப் செண்ட்ரல்?”

செண்ட்ரல் ஸ்டேஷனை அவர்கள்



வந்தடைந்த போதுமாலை ஆறு மணியிருக்கும். டிக்கெட் பரிசோதகரிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றார்கள். இரைச்சல். இரண்டாயிரம் ஜனங்கள். ‘ஆ’ என்று போர்டை பார்த்துக்கொண்டு, டிக்கெட் வாங்கிக் கொண்டு, திருதிரு என்று விழித்துக் கொண்டு, பால் சாப்பிட்டுக் கொண்டு, பத்திரிகை வாங்கிக் கொண்டு...

க்ளோக் ரூமில் சீட்டைப் பார்த்து அந்தப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான். மேலே பணம் கேட்கவில்லை. இருபத்திநாலு மணிநேரம் ஆகியிருக் காது. நேற்று மாலை ஆறுமணிக்கு மேல் தான் கொண்டு வைத்திருக்க வேண்டும். அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கும்?

“திறந்து பார்த்துறலாமா பாஸ்!”

“இங்கே வேண்டாம். கார்ல” என்றான்.

காரை கணேஷ் ஓட்டிக்கொண்டிருக்க வசந்த் அதை மடியில் வைத்து அந்தச் சாவியினால் திறந்தான். விசிலடித்தான்.

“என்ன?”

“நூறு ரூபாய் நோட்டு.”

“எவ்வளவு இருக்கு?”

“நிறைய்ய!”

“இருபத்தி அஞ்சாயிரம் இருக்குமா?”

“இருக்கும்னுதான் தோண்றது.”

“லெட்டர் ஏதாவது இருக்கா?”

வசந்த் பார்த்து ‘இல்லை’ என்றான்.

கணேஷ் கவலைப்பட்டான். இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது. பணம் கிடைத்து விட்டது. எத்தனை பெரிய குற்றமாக இருக்க வேண்டும் அது. இருபத்தி ஐந்தாயிரம்- கேள்வி கேட்காமல் ஒரு பெட்டியில் வைத்து- மை காட்... மிகப் பெரிய விஷயமாகிவிட்டது. இருபத்தி ஐந்து லட்சம் புரண்டால்தான் இருபத்தி ஐந்தாயிரம் இப்படிச் சில்லரையாகப் புரள முடியும்.

“ஜெர்மனிக்கு டிக்கெட் எடுக்க வேண்டியதுதானே, ஓ! இட்ஸ் ஸோ எக்ஸைட்டிங் பாஸ்!”

“எதுக்கும் ராஜேந்திரன் கிட்டே ஒரு வார்த்தை...”

“பாஸ்! இனிமே. இந்த விவகாரத்தை நாம விட முடியுமா சொல்லுங்க?”

“ஏன் முடியாது? இன்னொரு விளம்பரம் பேப்பர்ல கொடுத்துட்டா!”

“என்ன விளம்பரம்?”

“எங்களுக்குப் பணம் வேண்டாம். எல்லாம் கான்ஸல்னுட்டு.”

“அவுங்க ரகசியம் முழுக்க உங்களுக்குத் தெரியும்னு நினைச்சுக்கிட்டிருக்காங்க. சும்மா விட்டுருவாங்களா? மற்றொரு விபத்து நிகழாதா? இத பாருங்க, நல்லதோ கெட்டதோ இதில் தலையைக் கொடுத்தாச்சு!”

“விழப்போறது மாலையா, கத்தியா தெரியாது!”

அலுவலகத்துக்கு வந்ததும் பணத்தை எண்ணிப் பார்த்தார்கள். 300 நூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

“முப்பதாயிரம்! கைச் செலவுக்கு அஞ்சாயிரம் சேர்த்து அனுப்பிச்சிருக்காங்க!”

“நோட்டு நம்பர்களைப் பாரு.”

“பார்த்துட்டேன். வரிசைக்கிரமமா ஒரு கட்டுக்கூட இல்லை. எல்லாம் பழைய நோட்டு கலப்பான நம்பர். நோட்டு நம்பரை வெச்சுக்கிட்டு ட்ரேஸ் பண்றது கஷ்டம்.”

கணேஷ் டெலிஃபோன் செய்தான்.

“ராஜேந்திரன், பணம் கிடைச்சுடுத்து.”

“கிடைச்சுடுத்தா! யார் கொண்டு வந்து கொடுத்தாங்க?”

“யாரும் வரலை. செண்ட்ரல் ஸ்டேஷன்ல க்ளோக் ரூம்ல அனாமத்தா ஒரு பெட்டியில இருந்தது பணம். எங்களுக்கு ரசீது மட்டும் வந்தது. போய் பொட்டியை கலெக்ட் பண்ணிட்டு வந்தோம். பொட்டிக் குள்ள வேணும்கிற பணம் இருக்கு. முப்பதாயிரம். எல்லாம் பழைய நோட்டு.”

“கடுதாசி கிடுதாசி?”

“ஏதும் இல்லை!”

ராஜேந்திரன் சற்று நேரம் கழித்துச் சொன்னார்.

“பெரிய கை!”

“அதான் எனக்கும் கொஞ்சம் தயக்கமா இருக்கு. இந்த நிலையில் நாங்க ஜெர்மனிக்குப் போறதா? போனா அங்கே என்ன நடக்கப் போறது? இது ஏற்றுமதியா? இறக்குமதியா? கடத்தல்னா என்ன கடத்தல்? எங்கே கடத்தல்? ம்யுனிக்லயா? பாரிஸ்லயா? லண்டன்லயா? ஒண்ணும் தெரியாம கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாப்ல போறதில என்ன பிரயோசனம்?”

“செய்ய வேண்டிய காரியத்தைப் பத்தி அவுங்க ஒண்ணுமே சொல்லலியா?”

“நான்தான் எல்லாம் தெரியும்னு சொல்லிட்டனே!”

“வினோதமான கேஸ்யா இது! அரூபமான ஒண்ணை எதிர்பார்த்துக்கிட்டு மேற்கே போறது! ம்...! ஆனா விவகாரம் என்னவோ மிகப் பெரிய விவகாரம்னு தெரியுது. முப்பதாயிரம் இப்படி சுலபமா புரளுதுன்னா... கணேஷ்! ஒண்ணு கேக்கட்டுமா உங்களை?”

“என்ன?”

“கொஞ்சம் தீரச் செயல்களுக்குத் தயாரா நீங்க... கொஞ்சம் அபாயகரமான செயல்களுக்கு...?”

“தயாரோ தயாரில்லையோ? இதில கொஞ்சம் அகலக் கால் வெச்சுட்டமே!”

“அப்ப போய்ட்டு வாங்க!”

“போய் என்ன செய்யறது...?”

“இதுவரைக்கும் என்ன செஞ்சிங்க? உங்களை அறியாமத்தானே எல்லாம் நேர்ந்தது. அதேபோல மத்த விஷயங்களும் நடந்துடும். நிச்சயம் நீங்க விவரத்தை மேல் நாட்டில அறிவீங்க. அவுங்க ஆளுங்களுக்கு தகவல் தெரிவிப்பாங்க. அவுங்க அங்கே உங்களை காண்டாக்ட் பண்ணுவாங்க! நடக்கிறது நடக்கும்!”

“ஆனா அதிலே ஒண்ணு மிஸ்ஸிங்... மேல்நாட்டில யாராவது என்னோட தொடர்பு கொள்றாங்கன்னே வெச்சுக்குங்க. அவுங்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?”

“பாச்சா காட்டுங்க!”

“ராஜேந்திரன்! நான் செத்தா இந்த ஊர்லயே சாகணும்னுதான் விரும்பறேன். எங்கேயோ வெளிதேசத்திலே வாய்க்காலில அனாதைப் பிணமா கிடக்க விரும்பலை!”

“அப்படி எல்லாம் நடக்க விட்டுடறதா? நான்தான் சொன்னேனே, இண்டர்போல் வழியா செய்தி சொல்லி அந்தந்த தேசத்துப் பொலிஸ் உங்களுக்குப் பாதுகாவல் நிச்சயம் தரும். அவுங்களுக்கும் இந்த கேஸில நிச்சயம் இண்டரஸ்ட் இருக்கும். குற்றத்தோட மற்ற பாதி மேற்கேயும் நடக்கப்போறதில்ல?”

“சரிதான். ஆனா குற்றம் என்னன்னுதான் தெரியலை. அதுதானே சிக்கல்!”

“அப்ப போறீங்களா?”

“போய்த் தொலைக்கறேன். அந்த பத்து ரூபாய் நோட்டுக்களைப் பாத்தீங்களா?”

“எல்லா ஸ்டேஷன்களுக்கும் நம்பர்களை அனுப்பியிருக்கேன். எல்லா பாங்குகளுக்கும் செய்தி போயிருக்குது. பாங்குக்காரங்க ஒத்துழைக்கணும். ஒவ்வொரு பாங்கிலும் தினம் எத்தனையோ பத்து ரூபா நோட்டுப் புழங்கும். அதில் இந்த நம்பரை ஞாபகம் வெச்சிக்கிட்டு சிரத்தையா அந்த கேஷ் கிளார்க்குங்க பார்ப்பாங்களாங்கிறது சந்தேகம். எதுக்கும் சொல்லி வெச்சிருக்கோம்!”

“அந்த பத்து ரூபா நோட்டுக்களை விட்டா வேற எதுவுமே இல்லியே!”

“பார்க்கலாம். நீங்க டிக்கெட் வாங்கிடுங்க. பயப்படாதீங்க.”

“பயப்படாதீங்கன்னு சுலபமா சொல்லிட்டிங்க. புளியைக் கரைக்குது!”

“உங்களுக்கா? நம்பமாட்டேன் நான்!”

“அம்மா வீடு எங்கேன்னு சின்னப் புள்ளைல ஒரு விளையாட்டு உண்டே தெரியுமா?”

“இன்னும் கொஞ்சம் தூரம்!”

“கொஞ்ச தூரமா, அஞ்சாயிரம் மைல்!”

“குட் நைட்!”

வேற ஏதாவது வேணுமின்னா ஃபோன் பண்ணுங்க!”

“குட்நைட்!”

வசந்த் கணேஷையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“பயப்படாதீங்க பாஸ்! நான் எதுக்கு இருக்கேன்?”

“நீயா? உன்னை நம்பினா ஒரு காரியம் நடக்குமா? அதுவும் வெளி நாட்டில! இங்கேயே பெண்கள்னா உனக்கு ஒரு சபலம். அங்கே கரைகாணாம பெண்கள்! அதுவும் ஒவ்வொருத்தியும் திமிசுக்கட்டை மாதிரி இருப்பாளுக! வசந்த், கவலையா இருக்கு எனக்கு?”

“நோ ஒர்ரி பாஸ். நான் ஓய்வு நேரத்தையும் பிஸினஸ்ஸையும் கலக்கவே மாட்டேன்; நாளைக்கு காலைல முதல் காரியமா பாஸ்போர்ட் ஆபீசுக்குப் போய்ட்டு....”

“வசந்த், டிக்கெட் எல்லாம் வாங்கினப்புறம் ஒரு விளம்பரம் கொடுக்கப் போறேன். ‘வாங்கியாச்சு. வேற ஏதாவது செய்தி இருக்கான்னு கேட்டு’... அவங்க ஒரு தடவை டெலிபோன் செஞ்சாக்கூடப் போதும்... புடிச்சுறலாம்!”

“பாஸ், உங்களுக்கு என்ன நட்சத்திரம்?”

“ஜோஸ்ய புத்தகம் வேற பார்க்க ஆரம்பிச்சுட்டியா? மகம்!”

“சிம்மராசி! வெரிகுட்” என்று அந்த ஜோதிடப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தான்.

“கிரக நிலையைப் பார்க்கும் போது சிரமங்களும் சோதனைகளும் இருந்து கொண்டே இருக்கும். ஆனாலும் தாங்க முடியாத அளவுக்கு எந்தத் தீங்கும் சம்பவித்து விடாது. அவ்வப்போது சிரமங்களுக்கு நிவாரணம் ஏற்படவே செய்யும். சமயத்தில் உதவி கிடைக்கும். விசேடமான புத்திக் கூர்மை அவ்வப்போது உங்களுக்கு உறுதுணையாக இருந்து காப்பாற்றும்.”

“எப்படி?”

“ஜோஸ்யம் பார்த்துத்தான் செய்ய வேண்டிய வேலை அது!”

சரியாக ஒரு வாரத்தில் அவர்கள் பாஸ்போர்ட் ஏற்பாடுகள் நிறைவேறி டிக்கெட் வாங்கிவிட்டார்கள். அந்த நாட்களில் எதிர்த்தரப்பிலிருந்து எந்தவிதமான செய்தியும் இல்லை. செய்தித்தாளில் மற்றொரு விளம்பரம் கொடுத்தார்கள்: “டிக்கெட் வாங்கியாகிவிட்டது. வேறு ஏதாவது செய்தி இருக்கிறதா?” என்று. டைப் அடித்து ஒரு கடிதம் வந்தது. ‘டிக்கெட் வாங்கிவிட்டது தெரியும். முன்னேற்பாடுகளில் ஒரு மாறுதலும் இல்லை. வேறு செய்தி எதுவும் இல்லை. குட்லக்’ என்று. அந்தக் கடிதத்தை ராஜேந்திரனிடம் அனுப்பி வைத்தான். ராஜேந்திரன் அதிலிருந்து அதிகம் அறிந்து கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்.

கணேஷும் வசந்தும் அந்த வினோதப் பிரயாணத்தை மேற்கொள்வது ஊர்ஜிதமாகிவிட்டது. ஃபிரான்சிற்கும் இங்கிலாந்துக்கும் விசா இங்கேயே வாங்கிக்கொண்டு விட்டார்கள். கணேஷ் தன் உல்லன் சூட்டை ட்ரை கிளீனிங் கொடுத்தான். வசந்த் மேகத்தில் சஞ்சாரம் செய்தான். சென்னையில் மழை பெய்தது. வசந்த் ஓசியாக தன் நண்பனிடமிருந்து ஓவர் கோட் வாங்கிக் கொண்டான். ரிசர்வ் பாங்க் தரும் அன்னிய செலாவணி போதாதென்றுபட்டது. ராஜேந்திரன் வெளிநாடுகளில் அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றார். கணேஷ் தான் படிக்க நினைத்துப் படிக்க நேரம் கிட்டாத நான்கைந்து புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தான்.

பதினான்காம் தேதி அவர்கள் புறப்பட்டார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

## அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்


**03**

**ராஜஜெயா**

குழந்தையென்றும் பாராமல் கொடுமைப்படுத்தினான்.

ஒவ்வொருநாள் காலைப் பொழுதும் இப்ராகிமின் உதையுடன்தான் விடிந்தது சதாமுக்கு. படுக்கையில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் சதாமை அடித்து, காலைப் பிடித்து தரதரவென இழுத்து எழுப்புவான் இப்ராகிம். “எந்திரிடா தேவடியா மகனே! கிளம்பி ஆடு மேய்க்கப் போ!” என்று வள்ளென விழுவான்.

விவரம் புரியாத அந்தச் சிறுவயதில் சதாம் அழுது கொண்டே ஆடுகளை ஓட்டிக் கொண்டு மேய்க்கப் போவான்.



“இந்த நாய்மகனை எனக்குப் பிடிக்கல, அவன பாக்கவே வெறுப்பா இருக்கு. நமக்கு அவன் வேணாம்!” என்று சுபாவிடம் கத்துவான் இப்ராகிம்.

“பச்சை மண்ணைப் பத்தி ஏன் இப்படியெல்லாம் பேசுறே?” என்று சுபா எதிர்த்துச் சொன்னால், அவளோடு பிலுபிலுவென்று சண்டைக்குத் தொற்றிக்கொண்டு போவான்.

சண்டை நாறும், வீதி வேடிக்கை பார்க்கும்.

‘நான் என்ன செஞ்சுட்டேன்? என்னால் ஏன் இவங்களுக்குள் சண்டை?’ என்று சிறுவன் சதாம் தனக்குத்தானே கேள்வி கேட்பான். கேள்விக்கு விடை கிடைக்காமல் ரணமாகிப் போகும் அவன் உள்ளம்.

‘நம்ம அப்பா மட்டும் இருந்திருந்தா....?’ ஏக்கம் கனவாய் கசியும். விழியோரம் நீராய் நிறைக்கும்.

சதாமை இப்ராகிம் வேப்பங்காயாக நினைத்தான். என்றாலும் அந்தச் சிறுவனால் அவனுக்கொரு காரியமும் ஆகிவந்தது...

இப்ராகிமுக்கு கொஞ்சம் திருட்டு புத்தி உண்டு. அவன் சதாமை அழைப்பான். அக்கம் பக்கத்தில் மேயும் அடுத்தவன் வீட்டுக் கோழி அல்லது ஆட்டை அடையாளம் காட்டுவான். ‘அதை யார் கண்லயும் படாம, நைசா புடிச்சுட்டு வா. இந்த வேலையாவது ஒழுங்கா செய்யிறியானு பாப்போம்’’ என்று கொம்பு சீவி விடுவான்.

சதாமுக்கு ரோஷம் வரும். களவை கச்சிதமாய் முடித்து, சாமர்த்தியத்தை இவனிடம் காட்டணும் என்று வெறி வரும். எழுந்து போவான். சுற்றும்முற்றும் பார்ப்பான். யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவுடன் அந்த கோழியை அல்லது ஆட்டை சத்தமின்றி அபேஸ் செய்து கொண்டு வந்து விடுவான். அதை பக்கத்து ஊருக்கு எடுத்துச் சென்று, ஏமாந்த சோணகிரி எவனாவது மாட்டினால், “எங்க வீட்ல இதை ஆசையா வளர்த்தேன். திடீர் செலவு வந்துருச்சு. அதுனால விக்கிறேன்” என்று பொய்ப்பாட்டு பாடி, விற்று, பணத்தை பாக்கெட்டில் போட்டுக் கொள்வான் இப்ராகிம்.

இந்தக் குறுக்கு வழி வருமானத்துக்கு உதவியாக இருந்த சதாமுக்கு, போனால் போகிறதென்று ஒரு மிட்டாய்கூட வாங்கித் தரமாட்டான். அத்தனை கல்நெஞ்சுக்காரன் அவன்!

இப்ராகிம் கொடுமைக்கு பயந்து ஆடு மேய்ப்பதும், திருடிக் கொண்டு வந்து கொடுப்பதும், மிஞ்சிய நேரம் சித்ரவதை அனுபவிப்பதுமாய் குமுறலுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த சதாமுக்கு ஒரு தகவல் கிடைத்தது.

“மாமா மகன் அட்னன் பள்ளிக்கூடத்தில படிக்கிறானாம்!” என்பதுதான் அது.

சதாமின் தாய் மாமன் கயருல்லா. ராணுவ அதிகாரியாக இருந்தவர். ஏதோ தகராறு காரணமாக டிஸ்மிஸ் ஆனவர். அவர் இப்போது பாக்தாத் நகரத்தில் ஒரு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். அவரது மகன் அட்னன்தான் பள்ளியில் சேர்ந்து படிக்கிறானாம்.

அம்மாதான் இந்தத் தகவலை சதாமிடம் சொன்னாள்.

“அம்மா.... நானும் பள்ளிக்கூடம் போறேம்மா...” என்று சிணுங்கினான் சதாம்.

“நம்மூர்ல எங்க இருக்கு பள்ளிக் கூடம்?”

“அப்ப... நானும் பாக்தாத்துக்குப் போறேம்மா. மாமா வீட்ல இருந்துக்கிட்டு அட்னனோட சேர்ந்து படிக்கிறேன்.”

“இப்பவே உனக்கு பத்து வயசாயிருச்சு. இனிமே நீ பள்ளிக்கூடத்துல சேர்ந்து என்னிக்கி படிச்சு முடிக்கிறது?” என்று அலுப்புடன் சொன்னாள் அம்மா.

“நா சீக்கிரமாவே படிச்சிருவேம்மா. என்னை பாக்தாத்துல கொண்டு போய் விடும்மா. நான் ஆடு மேய்க்க வேணாம். சித்தப்பாகிட்ட அடி வாங்க வேணாம். சொன்னா கேளும்மா...” என்று கெஞ்சினான்.

பிள்ளை ஆசைப்படுகிறான். கெடுப்பானேன்? என்று மனமிளகிய அம்மா சம்மதம் கொடுத்துவிட்டாள்.

ஆனால் இப்ராகிம் தடை போட்டான். “நீ படிச்சு என்ன கிழிக்கப் போறே? ஆட்டை ஒழுங்கா மேய்ச்சுக்கிட்டு சும்மா கிட!” என்றான்.

சதாம் தன் பள்ளிக்கனவை கலைக்கத் தயாராக இல்லை. நித்தம் அடம்பிடித்தான். இப்ராகிமிடம் அடிபட்டான்.

ஒருநாள் காலை.

சதாமை உதைத்து எழுப்பி, “ஆடு மேய்க்கப் போ!” என்று விரட்டினான் இப்ராகிம்.

சதாம் அவனை முறைத்துப் பார்த்தான். “நான் இனிமே ஆடு மேய்க்கப் போக மாட்டேன். போ....!” என்று உறுதியுடன் சொல்லிவிட்டு விருட்டென்று எழுந்து வீதியில் போய் நின்று கொண்டான்.

வாசலுக்கு வந்த இப்ராகிம், “டேய், திமிரா? சொன்னா கேக்க மாட்டே?” என்று மிரட்டினான்.

“சும்மா கத்தாதே! அதுக்கு வேற ஆளப் பாரு!” என்று நெஞ்சை நிமிர்த்தினான் சதாம்.

“என்னடா சொன்னே....?” என்றவாறு அடிக்க அவனை நோக்கி ஓடி வந்தான் இப்ராகிம்.

வருவது வரட்டும் என்று துணிச்சலுடன் நின்றிருந்த சதாம், இப்ராகிம் ஓடி வருவதைப் பார்த்து கீழே குனிந்தான். அருகில் பெரிய கல் ஒன்று கிடந்தது. அதை இரண்டு கைகளாலும் தூக்கினான். தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஆவேசமாகக் கத்தினான்...

“கிட்ட வராதே! வந்தேன்னா, கல்லப் போட்டு கொன்ருவேன்....”

அவ்வளவுதான். இப்ராகிம் திடுக்கிட்டான். அப்படியே நின்றான். சதாமின் முகத்தில் கொப்பளித்துக் கொண்டிருந்த கோபத்தைப் பார்த்தான். பயந்தான். அவன் உள்ளுணர்வு நடுக்கத்துடன் படபடத்தது.

‘பையன் மிஞ்சிட்டான். இனி இவனை நாம் அடக்கி வைக்க முடியாது!’

(தொடர்ந்து வரும்)

# முள் நிலவு

## நிலவு 09

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

"நீ இப்படி ஒரு முடிவு எடுத்துக்கிட்டு வீட்டை விட்டு கிளம்பி வந்தது என்னோட மனசுக்குச் சரியா படலைம்மா...!"

கிருஷ்ணகாந்தின் அப்பா வெங்கடேஷ்வரன் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு கவலையான குரலில் சொல்ல; மனைவி செளந்தரமும் தலையசைத்து ஆமோதித்தாள்.

"ஆமாம்மா...! நாங்க ஏதோ சொல்லிக் குடுத்துத்தான் நீ இந்த முடிவுக்கு வந்துட்டேன்னு மத்தவங்க தப்பா நினைக்கலாமில்லையா?"

நிலா புன்னகைத்தாள்.

"அத்தே...! நா... ஒண்ணும் சின்னக் குழந்தை கிடையாது. எனக்கும் நியாய அநியாயம் தெரியற வயசுதான்... உங்க மகனுக்கு நிச்சயம் பண்ணிட்ட என்னை பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு என்னோட அம்மா வேற ஒருத்தருக்கு கட்டிக்கொடுக்கப் பார்க்கறது சரியா...?"

"சரியில்லைதான்...! அதை அம்மாவுக்கு பக்குவமா எடுத்துச் சொல்லி மனசை மாத்தணும். அதை விட்டுட்டு இப்படி வீட்டை விட்டு வெளியே வரக் கூடாதம்மா..."

"நா... உங்க வீட்டுக்கு திருட்டுத் தனமா வரலை அத்தே! எங்கப்பாவோட



ஆசிர்வாதத்தோடுதான் வந்திருக்கேன்... உங்க மகனோட கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்த பின்னாடிதான் என்னோட வீட்டுக்குப் போவேன்..."

வெங்கடேஷ்வரன் சன்னமான குரலில் குறுக்கிட்டார். "அதை இந்த ஊர் ஒத்துக்காதேம்மா...?"

"இந்த ஊரைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நீங்க ரெண்டு பேரும் இதை ஒத்துக்கிட்டா போதும்..."

"நாங்க ஒத்துக்கிறோம்! ஆனா..."

"சொல்லுங்க மாமா..."

"உன்னோட அம்மா இங்கே வந்து ஏதாவது பிரச்சனை பண்ணினா...?"

"அதை நான்... ஃபேஸ் பண்ணிக்கிறேன் மாமா."

நிலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே- வீட்டு வாசலில் ஒரு புயலின் வேகத்தோடு அந்த ஆட்டோ வந்து நிற்க-

பாக்யம் இறங்கினாள்.

ஆட்டோவிலிருந்து கோபாவேசத்தோடு இறங்கி போர்டிகோ படிகள் ஏறிய பாக்யத்தை வெங்கடேஷ்வரனும் செளந்தரமும் எதிர்கொண்டார்கள்.

"வாங்க...!" சொல்லி கை குவித்து வரவேற்ற அவர்களை பாக்யம் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் பெரிய குரலெடுத்து சத்தம் போட்டாள்.

"எங்கே...அவ...?"

"கொஞ்சம் கோபப்படாம பொறுமையா இருங்க. எல்லாத்தையும் நிதானமா பேசி முடிவு பண்ணிக்கலாம்..."

பாக்யம் கோபத்தைக் குறைக்காமல் சத்தம் போட்டாள். "எதை எப்படிப் பேசணும்னு எனக்குத் தெரியும். அது எனக்கும் என்னோட மகளுக்கும் உள்ள விஷயம். நீங்க அதுல தலையிட்டு உங்களை அசிங்கப்படுத்திக்க வேண்டாம்... கூப்பிடுங்க அவளை...!"

"நானே வந்துட்டேன்... சத்தம் போடாதேம்மா..." நிலா உள்ளேயிருந்து புன்னகையோடு வெளிப்பட்டாள்.

மகளைப் பார்த்ததும் பாக்யம் ஆவேசமானாள்.

"ஏண்டி உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா... இப்படி ஓடுகாலித்தனமா வீட்டை விட்டு வந்திருப்பே...?"

"இப்படி வர்றதுக்கு ஸ்பெஷலா எந்தத் தைரியமும் வேண்டியதில்லேம்மா...! ஒரு மாசம் கழிச்சு எப்படியும் இந்த வீட்டுக்கு மருமகளா வரப்போறவதானே நான்...? இன்னிக்கு ரிகர்சல் பார்த்தேன். அவ்வளவு தான்..."

"இந்த வீட்டுக்கு நீ மருமகளா...? அது பழைய கதை. இந்த சம்பந்தம் வேண்டாம்னு சொல்லியாச்சு..."

"நீ சொல்லியிருக்கலாம்மா... ஆனா அதை நான் ஏத்துக்கிட்டேனா இல்லையான்னு பார்க்க வேண்டாமா...?"

பாக்யம் மகளையே நிஷ்டூரமாய் முறைத்துக்கொண்டு நிற்க, அங்கே வேண்டாத நிசப்தம் நிலவியது.

வெங்கடேஷ்வரன் பாக்யத்திடம் திரும்பினார்.

"என்னை தப்பா நினைக்கலேன்னா நான் ஒண்ணு சொல்லலாமா?"

"என்ன...?"

"கல்யாணம்ங்கிறது பொண்ணோட இஷ்டப்படிதான் நடக்கணும். நிலா படிச்ச பொண்ணு. அவளுக்கு நல்லது எது கெட்டது எதுன்னு தெரியும். நீங்க உங்க பிடிவாதத்தை கைவிட்டுட்டு கொஞ்சம் யோசனை பண்றது நல்லது. உங்க இஷ்டப்படிதான் எல்லாமே நடக்கணும்னு நீங்க ஆசைப்பட்டா ஏதாவது ஒரு இழப்புக்கு நீங்க தயாராயிருக்கணும்...!"

பாக்யம் ஆத்திரமாய் முன்னால் வந்து நிலாவின் தோள்பட்டையைப் பிடித்தாள்.

"இந்த எகத்தாளப் பேச்செல்லாம் என்கிட்ட வேண்டாம். மரியாதையா புறப்படு...!"

"எங்கே...?"

"நம்ம வீட்டுக்குத்தான்...!"

"இனிமே அது நம்ம வீடு இல்லை... உன்னோட வீடு. இப்ப நின்று பேசிட்டிருக்கியே இதுதான் என்னோட வீடு!"

பாக்யம் வெகுண்டாள்.

"எவ்வளவு நெஞ்சழுத்தமடி உனக்கு...?"

"பாலூட்டினது நீயாச்சே...!"

"இப்ப நீ வரப்போறியா இல்லையா?"

"நோ சான்ஸ்...!"

இப்போது வெங்கடேஷ்வரன் குறுக்கிட்டார். "இதோ! பாரம்மா.. பெத்த அம்மாவை இப்படி எடுத்தெறிஞ்சு பேசறது கொஞ்சமும் சரியில்லை... உனக்கும் கல்யாணம்ன்னு ஒண்ணு நடக்கிறவரைக்கும் அவங்க பேச்சுக்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆகணும்... நீ இப்படி வீட்டைவிட்டு வந்தது சரியில்லை...!"

நிலா புன்னகைத்தாள்.

"மாமா! உங்க கடமைக்கு நீங்க சொல்ல வேண்டியதை சொல்லிட்டீங்க... நான் இந்த வீட்டுக்கு வரப்போகிற மருமகள்ங்கிற உரிமையில் சொல்ல நினைக்கிறதை சொல்லலாமா...?"

"சொல்லு..."

"நான் இங்கே வந்தது, வந்ததுதான்... இந்த வீட்டைவிட்டுப் போகமாட்டேன். நான் போய்த்தான் ஆகணும்னு நீங்க கட்டாயமா சொல்லிட்டா எனக்கு இதைத் தவிர வேற வழியில்லை..!"

சொன்ன நிலா தன் வலது உள்ளங்கையைப் பிரித்து காட்டினாள்.

கை நிறைய 'வேலியம்' தூக்க மாத்திரைகள்.

எல்லோரும் பிரமித்துப் போய் நிற்க-

நிலா நிதானமான குரலில் தொடர்ந்தாள். "கையில் மொத்தம் இருபது மாத்திரைகள் இருக்கு... நீங்க இந்த வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னா இந்த இருபது மாத்திரையும் என் வயித்துக்குள்ளே போயிடும்...! இப்ப சொல்லுங்க... நான் இந்த வீட்ல இருக்கிறதா? இல்லை... வெளியே போயிடறதா...?"

"என்ன அவகூட சேர்ந்துட்டு நீங்களும் மிரட்டறீங்களா?"

"இது மிரட்டல் இல்லை! மனசுக்குப்பட்ட உண்மை."

"உங்க தைரியத்துலதான் அவ இப்படியெல்லாம் பேசறா."

"அம்மா...!"

பாக்யம் நிலாவை ஏறிட- அவள் தொடர்ந்தாள்.

"இந்த நிமிஷமே உன்கூட வீட்டுக்குப் புறப்பட்டு வர நான் தயார். ஆனா இந்த வீட்டுக்கே உன்னை மருமகளா அனுப்பி வைக்கிறேன்னு எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு!"

"என்னடி பெரிய வார்த்தையெல்லாம் பேசறே?"

"அம்மா... இது என்னோட கல்யாண காரியம். பேச வேண்டிய கட்டாயம்... பேசிட்டிருக்கேன்..."

பாக்யம் இரண்டடி பின்வாங்கினாள். "நான் இப்ப போறேன். ஆனா உன்னை இங்கிருந்து எப்படி கூட்டிட்டுப் போறதுன்னு எனக்குத் தெரியும்...! வர்றேன்...!"

"அம்மா! ஒரு நிமிஷம் நிக்கறியா?"

"என்ன...?"

"முதல் தடவையா இன்னிக்குதான் சம்பந்தி வீட்டுக்கு வந்திருக்கே... ஸ்ட்ராங்கா ஒரு டிகாஷன் காப்பி போட்டுத் தர்றேன். குடிச்சிட்டுப் போறியா....? நம்ம வீட்ல கூட இம்மாதிரியான காப்பி கிடைக்காது."

மகளின் கேலிப்பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளாமல் விடுவிடுவென்று வேகமாய் நடந்து வாசலில் வெயிட்டிங் போட்டு விட்டு வந்த ஆட்டோவுக்குள் ஏறிக் கொண்டாள்.

ஆட்டோ புகை கக்கிக் கிளம்பிப் போவதை ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த வெங்கடேஷ்வரனும் செளந்தரமும் நிலாவிடம் திரும்பினார்கள்.

"இது எதுல போய் முடியுமோன்னு பயமாயிருக்கும்மா."

"மாமா! நீங்களும் அத்தையும் யாரைப் பத்தியும் கவலைப்படாம கல்யாண காரியங்களைக் கவனிங்க... என் கழுத்துல தாலின்னு ஒண்ணு ஏறிட்டா யாரும் எதுவும் பண்ண முடியாது..."

வெங்கடேஷ்வரன் புன்னகைத்தார்.

"நீ ரொம்ப ஸ்பீடா போறேம்மா...! கொஞ்சம் நிதானம் தேவை. இவ்வளவு வேகம் கூடாது..."

"மாமா... என்னோட அம்மாவைப் பத்தி உங்களுக்கு சரியா தெரியலை. நான் அந்த வீட்ல இருந்தா ரெண்டே நாள்ல கல்யாணத்தை முடிச்சு என்னை டெல்லிக்கு பேக் பண்ணிடுவாங்க... என் அம்மாவோட வேகத்துக்கு சமமா செயல் பட்டாத்தான் இந்த இக்கட்டில் இருந்து என்னால தப்பிக்க முடியும்..."

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த செளந்தரம் மெல்லிய குரலில் குறுக்கிட்டாள்.

"எல்லாம் சரிதாம்மா நிலா... ஆனா நீ இப்படி வீட்டை விட்டு வெளியே வந்ததைப் பற்றி ஸ்டேட்ஸில் இருக்கிற எங்க பையனுக்குத் தெரியப்படுத்தி அவன் இதைப்பத்தி என்ன நினைக்கிறான்னு கேட்க வேண்டாமா?"

"தாராளமா கேளுங்க அத்தை... நானே அவர்க்கு ஃபோன் பண்ணி பேசலாம்னுதான் இருந்தேன். இப்பவே கூட நீங்க ஃபோன் பண்ணிப் பேசலாம்... ஸ்டேட்ஸ்ல இப்போ சாயந்திர நேரம்... உங்க ஸன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பியிருக்கலாம்..."

செளந்தரம் தன் கணவரைப் பார்க்க- அவர் மனைவியின் பார்வையைப் புரிந்துகொண்டு டெலிஃபோனை நோக்கிப் போனார்.

• • •

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

"என்ன கிளம்பலாமா...?"

கேட்டுக்கொண்டே என் மனைவி வரவும் நான் ஒன்பதாவது அத்தியாயத்துக்கு 'தொடரும்' போட்டு எழுந்தேன். நேரம் காலை மணி ஒன்பதே முக்கால்.

டாக்டர் மிருதுபாஷிணியைப் பார்க்கக் கிளம்பினோம். என் கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டரில் சரியாய் இருபது நிமிடப் பயணம்.

ஹாஸ்பிடல் வந்தது.

பம்பாய் டாக்டர் சைக்யாட்ரிஸ்ட் புன்னம் சந்தரும் டாக்டர் மிருதுபாஷிணியும் வராந்தாவிலேயே கிடைத்தார்கள்.

மிருதுபாஷிணி புன்னகைத்தாள்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 11

**கவியரசு கண்ணதாசன் எழுதிய-அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

ஒரு கவிதை எழுதித் தரும்படி கேட்டார் டி.கே.சீனிவாசன். பதற்றத்தில் எதையோ எழுதிக்கொண்டுத்தான். மூன்றாவது அணி புறப்பட்டது.

அவன் தலைமை தாங்கினான்.

இரயில் நிலையத்துக்கு அவன் வந்து சேர்ந்தபோது பெரிய திருவிழா நடப்பது போல் அந்த இடம் தோற்றமளித்தது.

பொலிஸார் 'வியூகம்' வகுத்து அவ்வளவு பேரையும் விலக்கி வைத்திருந்தார்கள்.

பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் ஆத்திரமடைந்த நிலையிலிருந்தனர்.

அவர்களுக்கும் பசி.

துணைக் கலெக்டரும் அங்கே வந்துவிட்டார்.

அது நீதி நிர்வாகம் பிரிக்கப்படாத காலம்.

அந்தத் துணைக் கலெக்டர்தான் அரியலூர் மாஜிஸ்டிரேட்.

மிகவும் இளைஞர்.

ஐ.ஏ.எஸ். படித்துவிட்டு, உடனடியாக இந்த உத்தியோகத்திற்கு வந்தவர்.

அவனுடைய அணி ஸ்டேஷனுக்குள் வந்தது.


உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வந்தார்.

"எல்லோரும் வெளியிலே போங்கள்!" என்றார்.

எல்லோரும் கையிலிருந்த 'பிளாட்பாரம்' டிக்கட்டுகளைக் காட்டினார்கள்.

"நான் உங்களை இரயிலின் முன்னாள் படுப்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை!" என்றார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

"படுப்பது எங்கள் கடமை!" என்றான் அவன்.



பொலிஸார் தீவிரமடைந்தார்கள்.

இரயில் வந்தது.

இரயில் முன்னால் படுப்பதற்கு அவனும் நண்பர்களும் ஓடினார்கள்.

ஆயுதந்தரித்த பொலிசார் அவர்களைத் தடியாலடித்துத் துரத்தினார்கள்.

சிலரை அலாக்காகத் தூக்கி அருகில் நின்ற கூட்ஸ் இரயிலுக்கு அந்தப் பக்கம் எறிந்தார்கள்.

அவனும் கூட்ஸ் இரயிலுக்குப் பின்பக்கம் தள்ளப்பட்டான்.

அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை.

கணநேரம்.

'விசில்' சத்தம் கேட்டது.

இரயில் புறப்பட்டுவிட்டது.

தூரத்தில் நின்ற டி.கே.சீனிவாசன் பக்கத்தில் ஓடி வந்தார்.

"போய்யா, போய்யா, ஓடுகிற இரயிலுக்கு முன்னால் படு அய்யா!" என்றார்.

அருமையான யோசனை!

அவனுக்குக் கோபம் வந்தது.

"நீங்களும் வாருங்கள். இரண்டு பேருமே சாவோம்!" என்றான்.

அதற்குள் ஓடிய இரயில் ஒரு பர்லாங்கு தூரத்தில் நின்றது.

அவன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே தண்டவாளத்தில் சுமார் ஐயாயிரம்பேர் அமர்ந்திருந்தார்கள்.

அவன் மெய் சிலிர்த்தது.- ஆவேசம் பிறந்தது.

ஒரு பர்லாங் தூரமும் ஓடினான்.

இரயிலுக்கு முன்னால் அமர்ந்துவிட்டான்.

கூடியிருந்த பெருங்கூட்டம் கைதட்டியது.

எதிரே அவன் பார்த்தான்.

இரயிலின் இரண்டு பக்கத்திலும் சுமார் ஐம்பதுபேர்- ஆயுதந்தரித்த பொலிசார்- அணி நடை போட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்து வெங்கடராமன், அரியலூர் டெபுடி கலெக்டர், சில சார்ஜண்டுகள் முன்னால் வந்தார்கள்.

தடியடிக்கு உத்திரவிட்டார்கள்.

பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை ஆரம்பித்தார்கள்.

அவன் முதுகிலும் பலமான அடி விழுந்தது.

ஆனால் வலி இல்லை!

அடிக்கும் தடியை ஒடித்துவிட்டுக் கொண்டு அடித்த அந்தப் பொலிசாரில் சிலர் கழகத்தின் அனுதாபிகள் என்பது பிறகு அவனுக்குத் தெரியவந்தது.

ஒரு பகுதி கூட்டம் கலையாமலே இருந்தது.

உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பூண் போட்ட தடியால் அடிக்கத் தொடங்கினார்.

ஓரடி அவன் தலையில் பலமாக விழுந்தது.

அவன் நினைவு கலங்கிற்று.

கண்கள் இரண்டும் வெளியே வந்து விழுவதுபோல் தோன்றிற்று.

சர்க்கிள் தன் புட்ஸ் காலால் அவனை உதைத்துத் தண்டவாளத்துக்கு வெளியே தள்ளினார்.

கூடியிருந்த கூட்டம் சீற்றமடைந்தது.

கற்கள் சரமாரியாகப் பொலிசார்மீது விழத்தொடங்கின.

கல்வீச்சைக் கண்டு பொலிஸ் அதிகாரிகள் ஆத்திரமடைந்தனர்.

"சுடுங்கள்!" என்று உத்தரவிட்டார் டெபுடி கலெக்டர்.

கீழே கிடந்த அவன் மெதுவாக எழுந்தான்.

துப்பாக்கிகள் வெடித்தன.

சேலம் வழக்கறிஞர் சிவப்பிரகாசம் ஓடிவந்தார்.

அவனைக் கைத்தாங்கலாக அணைத்துக் கொண்டார்.

இருவரும் நடந்தார்கள்.

துப்பாக்கிகள் சுட்டுக்கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்கள் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள்.

அவனும் அன்று சுடப்பட்டிருக்கக் கூடும்.

சூடு அவன்மேல் படாததற்கு பொலிஸாரின் ஜாக்கிரதையே காரணம் என்று கூற வேண்டும்.

அந்த இடத்தைத் தாண்டி, டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை அருகே வந்தார்கள்.

(சரிதம் தொடரும்)

# அன்னக்கிளியக்கா...!



"அன்னக்கிளியக்கா.. அன்னக்கிளியக்கா.. என்னா இது..? நானும் மொதல்லர்ந்து பாத்துக்கிட்டே வாரேன். கொலனியில கை காசுக்கு கொழுந்து எடுக்குறோமேங்கற நெனப்பே இல்லாம நம்ம தோட்டத்துல நாள் சம்பளத்துக்கு எடுக்குற மாதிரியில்ல சொத்தா, சொத்தான்னு எடுத்துகிட்டு வர்ரீக..?"

எப்போதும் தனக்குமுன் வேகமாக நிரை பிடித்து, எல்லோரையும் முந்திக் கொண்டு கொழுந்து பறித்துக் கொண்டு போகும் அன்னக்கிளி இன்று மிகவும் வாடிய முகத்துடன், எல்லோரையும்விட கடைசியாக, கொழுந்து பறித்துக் கொண்டிருந்ததை ஆச்சரியத்துடன் அவதானித்த வனத்தம்மாதான் சற்று கேலியாக அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

தோட்டத்தில் சம்பள உயர்வுக்காக ஐந்தாறு நாட்களாக வேலை நிறுத்தம் செய்ததில், ஆட்களுக்கு அவ்வளவாக சம்பளம் இருக்காது என்று கருதிய நீலமாத்தியா கடையிலும் கடன் கொடுக்க மறுத்துவிட்டதினால், எப்படியாவது காசு கொடுத்தே அரிசி வாங்கி சாப்பிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட அன்னக்கிளி வீட்டில் கடந்த மூன்று நாட்களாகவே அரை குறை பாடுதான். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கவே றுக் காலையிலிருந்து சுத்தமாக உணவில்லை என்கின்ற நிலையில்தான் பட்டினியுடன்-

மம்பட்டி தோட்டத்தில் இருக்கும் அன்னக்கிளியும் வனத்தம்மாவும், மூன்று, நான்கு கிலோமீட்டர்கள் தொலைவில் இருக்கும் திஸ்பனை கொலனியில் சிங்களவர்களுடைய தனியார் தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து பறித்து, கிலோவுக்கு ஐந்து ரூபாவீதம் கூலியைப் பெற்றுக் கொண்டு வயிற்றை நிரப்புவதற்காகத் தான் வந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

பசிக் கிறக்கத்தில் சோர்வாக வேலை செய்து கொண்டிருந்த அன்னக்கிளிக்கு வனத்தம்மாவின் கேள்வி மூளைக்குள் பாயவே தனது பட்டினி நிலையை வெளிக் காட்டவிரும்பாத அன்னக்கிளி சுதாகரித்துக் கொண்டபடி..

"இல்ல வனத்து.. புள்ளய புள்ளகாம்பராவுல வுட்டுட்டு வந்தேன், அழுவுறானோ என்னவோ. அதான்

"ஏக்கா.. உம் பெரிய பய தொக்கர இருப்பான்ல?" என்று வனத்தம்மா தெம்பூட்டவே நொந்து போனவளாய் அன்னக்கிளி பதிலளித்தாள்.

"அவனப்பத்தி தெரியாதா.. வனத்து?... தறுதலை.. எந்த நேரமும் கிரிகெட்டு, கிரிகெட்டுனு ஊர் கலுசறைகளோட சுத்திகிட்டு இருப்பான்.. எப்ப பாரு கிரவுண்டுலதான் இருப்பான். வயசு பதினாறாச்சு.. அறிவுங்கறதே இல்ல.. ஒரு வெறவு குச்சிக்குக்கூட கில்ல..." என்று தத்தமது வேதனைகளை கிளறிண்டவர்கள் கொழுந்து பறிப்பதையும் நிறுத்தவில்லை.

காலை எட்டுமணியிலிருந்து- கொழுந்துகளை பறித்த கைகளில் கூலியாக ஐம்பது, ஐம்பது முளைத்திருந்தது என்னவோ இருவருக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது... வேலை முடிந்து கால்கள் வீடுகள் நோக்கி வீறுநடை போட்டன.

வீட்டுக்குள் நுழைந்தவள், தனது வயிற்றுப் பசியை ஆற்றப்போகும் ஐம்பது ரூபாயை சுவாமிபட ராக்கையில் வைத்துவிட்டு, தனது ஒன்றரை வயது சின்னாவை தூக்கிக் கொண்டு வர புள்ளகாம்பராவை நோக்கி நடந்தோடினாள். தனது மூத்த மகன் தொக்கர கிரவுண்டில் கிரிகெட் ஆடிக்கொண்டு நிற்கவே...

"ஏய்... தொக்கர... தொக்கர..!" என்று அன்னக்கிளி அழைத்தாள்.

தனது விளையாட்டுக்கு இடையூறு ஏற்படப்போவதை எண்ணி எரிச்சலடைந்த தொக்கர.. "ச்சென்னம்மா..?" என்றபடியே கோபத்துடன் தனது தாயின் அருகில் வந்து நின்றான்.

அவனது தோற்றம்-அவன் உணவு, உடை, படிப்பு, சுத்தம், இவற்றைவிட கிரிகெட்டுக்கே முக்கியத்துவம் கொடுப்பவன் என்பதை அடித்துச் சொல்லியது.

"ஏய்... இந்தா... சாமிபடத்துகிட்ட ஐம்பது ரூபா சல்லி இருக்கு. எடுத்துகிட்டு போயி ஒரு கெலோ அரிசியும், நூறு கிராம் பருப்பும் ஐம்பது கிராம் சீனியும், விசுகோத்து ஐஞ்சு ரூவாக்கும் வாங்கிட்டு வா..!" என்றவள் புள்ள காம்பராவை நோக்கித் தொடர்ந்தாள்.

ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்டு கிரவுண்ட் வழியாக கடைக்குப் போய்க் கொண்டிருந்த தொக்கரவை சக பையன்கள் பிடித்துக் கொண்டார்கள்.

"டேய்... தொக்கு.. போன ஞாயித்துக் கெழம ராஸ் தோட்டத்துலர்ந்து நம்மளோட மெச் அடிக்க வந்து கஞ்சி குடிச்சிட்டு போனாங்கில்ல.. அவுங்க நமக்கு கஞ்சி குடுக்கணுமாம்.. அவுங்க தோட்டத்துக்கு மெச்சுக்கு கூப்பிட்டிருக்காங்க. நாங்கல்லாம் இப்பவே போறோம்... நீயும் வா..!" என்று எல்லோரும் வற்புறுத்தவே. வேறு எதையும் பற்றிக் கவலைப்படாதவன் அவர்களுடன் சென்றே விட்டான்.

**எம். சண்முகராஜா**

மணி இரவு எட்டாகியது. தொக்கர வரவில்லை. அரிசி வந்த உடன் சாதம் தயாராக்குவதற்கு கொதிக்கின்ற உலையுடன் அன்னக்கிளி காத்து இருந்தாள்.. நேரம் செல்லச் செல்ல பசி வயிற்றைக் கிள்ளியது. பானையைப் பார்த்தாள். அன்னக்கிளியை பார்த்து வெறும் உலை நகைத்தது. தொக்கர வீட்டில் தங்குவது அரிது என்றாலும், 'பணத்துடன் போய் தொலைந்தானே.. பாவி!" என்று மனம் ஏங்கினாள். பசி அதிகரிக்கவே தண்ணீர் ஒரு கோப்பை குடித்தவள், அப்படியே படுத்து உறங்கி விட்டாள். பசி கிறக்கம் உறக்கமாக மாறி விடிவை ஏற்படுத்திற்று

மறுநாள் காலை வனத்தம்மா வந்து வேலைக்கு அழைக்கவே அவளுடன் சென்றுவிட்டாள் அன்னக்கிளி. மணி பத்தாகி பதினொன்றாகியது. அன்னக்கிளியால் பசி தாங்க முடியவில்லை. கண்கள் செருகவே வரக்கட்டில் கொழுந்து கூடையுடன் புரண்டுவிழுந்தாள். தலையில் பலத்த இரத்தக் காயத்துடன் சிங்கள முதலாளியின் டிரக்டரில் ஏற்றப்பட்டு மூங்கிகுத்து ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள். டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருந்த போது..

தொக்கரயின் திறமையால் ராஸ்தோட்டத்தில் மெச் வெற்றிபெற்று- தொக்கர கப்பை தூக்கி கொள்ள.. தொக்கரயை சக பையன்கள் ஆரவாரத்துடன் தூக்கி கொண்டு மம்பட்டி தோட்டத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது உயிர் பிரிந்து.. பிணமாய் அன்னக்கிளியையும் நாலைந்துபேர் தூக்கிக்கொண்டு ஒப்பாரியுடன் ஊருக்குள் நுழைந்துகொண்டிருந்தார்கள்.

---

# சிக்கனம்

மழை பெய்யும் போக்கைப் பார்த்த காயத்ரிக்கு 'திக்'கென்றது. 'லேசில் இந்த மழை விடாது. எப்படியும் இன்னும் ஒரு மணி நேரமாவது நீடிக்கும். மழை விட்ட பின்பு செல்லலாம் என்றால் அதற்குள் இருட்டிவிடும். கையில் குழந்தையையும் காய்கறி சாமான் பையையும் தூக்கிக்கொண்டு அந்த இருட்டில் எப்படித் தனியாகப் போவது? சீக்கிரம் போகலாம் என்றால் இந்தச் சனியன் பிடித்த மழை விடாது போலிருக்கிறது. மழையில் நனைந்து கொண்டு போனாலும் குழந்தைக்கு காய்ச்சல் வந்துவிடும். அதற்கு மருந்து செலவு அது இது என்று இருநூறு முன்னூறு ரூபாய் ஆகிவிடும். ஏற்கனவே மாமிக்காரி நான் சிக்கனமா செலவு பண்றது இல்லைன்னு குறைபட்டுக்குவா. இப்போ மழையில நனைஞ்சி ஒண்ணுக்கிடக்க ஒண்ணு ஆகிப் போனா தண்டச் செலவு வச்சிட்டான்னு ருத்ர தாண்டவமே ஆடிவிடுவாள். என்ன செய்யலாம்? ஆட்டோவில் போயிடலாமா? இதோ இருக்கிற நம்ம வீட்டுக்கு ஆட்டோவா? அதற்கு ஐம்பது ரூபாய் தண்டமா? என்று கரித்துக் கொட்டுவாளே! பரவாயில்லை. சமாளிச்சிக்குவோம்.' ஆட்டோவைக் கூப்பிட்டாள்.



வீட்டை அடைந்தவுடன் ஆட்டோக்காரனுக்குப் பணம் தந்துவிட்டு உள்ளே போனாள். மாமிக்காரி ஒரு மாதிரிப் பார்த்தாள்.

"இல்லை அத்தை. மார்க்கெட்டுக்குப் போனவுடனேயே மழை பிடிச்சிட்டு... குழந்தை நனைஞ்சி அதுக்கு உடம்பு முடியாம போயிடிச்சின்னா நாளைக்கு நாம தானே இருநூறு முன்னூறுன்னு செலவு பண்ணனும்.

நாளைக்கு அவ்வளவு செலவு பண்றதுக்கு பதிலா இன்னைக்கே ஒரு ஐம்பது ரூபா செலவு பண்ணினா பிரச்சனை இல்லையே அதான்."

மாமியாரைச் சமாளித்து விட்டதாக பெருமைப்பட்டாள்.

"உக்கும்... அதுசரி. ஆட்டோவுக்கு எவ்வளவு கொடுத்தே?"

"ஐம்பது ரூபா அத்தை!"

"அதுல என்ன பெரிய லாபம் இருக்குது? ஐம்பது ரூபா போனது தான் மிச்சம். ஏன் அந்த ஐம்பது ரூபாய்கூட இன்னொரு நாற்பது ஐம்பது ரூபாபோட்டு ஒரு குடை வாங்கிட்டு வந்திருக்கலாமே? எப்பவும் மழைக்கு உபயோகமா இருக்குமே? சிக்கனம் பண்றாளாம் சிக்கனம்!"

மாமிக்காரி முகவாய்க் கட்டையை

**ராஜேந்திரன்**

தோளில் இடித்துக் கொண்டே சொன்னாள். காயத்ரி உறைந்து நின்றாள்.

'சேச்சே! இந்த யோசனை எனக்கு ஏன் தோணாமப் போச்சு?'

---

# திருமணம் ரொக்கத்திலே நிச்சயிக்கப்படுகிறது!

கணேசனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தாள் அமுதா. அந்த இனிய மாலைப் பொழுதிலே என்றுமே இல்லாத ஏதோ ஒருவித தவிப்பு அவள் உள்ளத்தை ஊடறுத்துக்கொண்டு இருந்தது.

இன்று நேற்றல்ல-கடந்த நான்கு வருடங்களாகவே அவனைத் தெரியும். அந்த வளாகத்துக்கு நுழைந்தன்றே அந்த கனிவான பார்வையைத்தான் முதன் முதலில் சந்தித்தாள்.

அவனுடைய அமைதியான போக்கும், அன்பான பேச்சும், அவளுக்கு மிகவும் பிடித்து இருந்தது. ஒருவரை ஒருவர் அதிகமாகவே புரிந்து வைத்து இருந்தார்கள். ஆனாலும் ஒரு ஆழமான நட்பைத்தான் அவனிடம் இருந்து எதிர்பார்க்க முடிந்ததே தவிர, அவளுடைய காதல் உணர்வுகள் அவனால் கூட அங்கீகரிக்கப்படாமல் இருந்ததுதான் வேதனை. அதற்கு அவனது குடும்ப நிலைகூட காரணமாக இருக்கலாம், என்பது அவளுக்கும் ஓரளவுக்குத் தெரிந்தே இருந்தது.

கணேசன் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். தந்தை ஒரு சுருட்டுத் தொழிலாளி. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரதான ஏற்றுமதிப் பொருளாக சுருட்டும், புகையிலையும் விளங்கியது. பல தொழிலாளர்கள் இந்தச் சுருட்டுத் தொழிலைத் தான் நம்பி வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். தென்பகுதிக்கு பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையில், அந்த தொழிலும் படுத்து விட்டது. மனிதர்களே வந்து போக முடியாத நிலையில் பொருட்கள் எங்கே...?



**இணுவை உத்திரன்**

அமுதாவைப் பொறுத்த வரையில் அவனுடைய எண்ணங்கள் இன்பகரமான ஒரு வாழ்க்கையையே வட்டமிட்டுக் கொள்ளும். எண்ணத்திற்கு தூரம் தொலைவு கிடையாது. தங்கு தடை கிடையாது. எப்பொழுதுமே முடிவில்லாத உலகம் இந்தக் கற்பனை உலகம்தான். இங்கு எதையும் நினைக்கலாம்; எங்குமே செல்ல முடியும்; எல்லையே இல்லை.

அவளும் இப்படியானதொரு வட்டத்துக்குள்ளே கற்பனையில் மூழ்கி இருந்தாள். அதனால்தானோ என்னவோ அவன் வந்ததைக்கூட அவள் அறியவில்லை.

"அமுதா!" என்று அவன் அழைத்தபோதுதான் தன் நிலைக்கு வந்தாள். அவள்முகம் மலர்ந்தது.

"கணேஷ் ஒவ்வொரு நிமிசமுமே உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தன். ஊரிலை எல்லாருமே சுகமா? எப்பிடி உங்கடை வீட்டிலை என்னைப் பற்றி சொன்னீங்களா? அவர்கள் சம்மதிச்சாங்களா?" அவள் ஆவல் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

"இல்லை அமுதா. நான் உம்மைப்பற்றிக் கதைச்சால்தானே அவர்கள் சம்மதிக்கிறதிற்கு! எனக்கு எனக்கு... ஊரில திருமணம் பேசிக்கொண்டு இருக்கினம்," என்று அவன் தயங்கித் தயங்கிச் சொன்னபோது, அவள் முகம் மாறியது. கண்கள் கலங்கின. இதயம் ஒரு தடவை விட்டு அடித்துக் கொண்டது.

"கணேஷ்! அதுக்கு நீங்கள் என்ன சொன்னீங்கள். சம்மதிச்சிட்டீங்களா?"

"அமுதா! என்ரை பதிலில்தான் அக்காவின்ரை எதிர்காலமே அடங்கி இருக்கு. இப்பவெல்லாம், ஊரிலை ஒரு மாப்பிள்ளை எடுக்கிறதென்றால், சாதாரணமாகவே நாலோ ஐந்தோ லட்ச ரூபாய் வரையிலை தேவையாய் இருக்கு. அதாலை அந்தக் காசைத்தரக்கூடிய வசதியான இடத்திலை எனக்கு சம்மந்தம் பேசிக்கொண்டு இருக்கினம்!" என்று அவன் சொல்லும்போதே அவள் இடைமறித்தாள்.

"கணேஷ்! அதுக்காக சீதனமா கேட்கிறீங்க? நீங்களா இப்பிடி? உங்களை மாதிரி ஆட்களாலை உங்கடை அக்கா மட்டும் இல்லை, என்னை மாதிரியும் எத்தனையோ பெண்களின்ரை வாழ்க்கை எவ்வளவு தூரம் பாதிக்கப் படுகிறது தெரியுமா?"

"இல்லை அமுதா. சீதனம் வாங்கக்கூடாது எனறு எண்ணும் ஒருவன் இருந்தால்கூட போதும், இந்த உலகத்திலே நான் வாங்கமாட்டன். அது இல்லாத வரையிலை என்ரை அக்காவின்ரை வாழ்க்கைக்காக என்னை எங்காவது விற்றுக் கொள்ளலாம் என நினைக்கிறன். இதைத் தவிர எனக்கு வேறை வழியே தெரியேல்லை. இப்பிடி ஒரு பெரிய தொகைக்கு திடீரென்று நான் எங்கை போவன். வீட்டிலை இருந்து தங்களை உருக்கித்தான் எனக்கு படிக்கிறதிற்கு பணம் அனுப்பிச்சினம். இனி குடும்பப் பாரத்தை சுமக்க வேண்டியது என்ரை கடமை. 'என்ரை தம்பி எனக்கொரு நல்ல வாழ்கையை அமைச்சுத் தருவான்!' என்ற நம்பிக்கையோடையும், கனவுகளோடையும் என்ரை அக்கா...!" அவன் குரல் கம்மியது. வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டான். அவன் கண்கள் கலங்கி இருந்தன. அந்த இடைவெளியை பயன்படுத்திக் கொண்ட அமுதா, அவன் கண்களை நேராகப் பார்த்தாள்.

"கணேஷ்! அவ்வளவுதொகை பணத்தை தரக்கூடிய நிலையிலைகூட நாங்கள் இல்லையே! இதற்கு வேறை வழியே இல்லையா? எனக்கு உங்களை இழந்து..." அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை.

அவளைத் தேற்றக்கூடிய வழி தெரியாமல் அவள் முன் முழங்காலை குத்தி அமர்ந்தான் கணேஷ். அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு, "என்னை மன்னிச்சுக்கொள்ளும் அமுதா." அவனால் வெளிப்படையாக அழமுடியவில்லை. உள்ளம் அழுதது. 'ஏன்தான் இந்த உலகத்திலே பிறந்தோம்?' என்று இருந்தது. 'இவளை இழந்து எப்படித்தான் வாழப் போகிறேனோ?' மீண்டும் ஒரு தடவை அவன் மனம் எண்ணியது. 'அதோடு எங்கே நான் கரைந்து' விடுவேனோ? என்ற பயமும் தொற்றிக் கொண்டது அவனை.

"உங்களின்ரை குடும்ப நிலைமை எனக்கு நல்லாகவே தெரியும் அமுதா! என்ன செய்யிறது? ஏமாற்றம் உமக்கு மட்டுமில்லை. மற்றவர்களின்ரை தியாகத்தாலை நான் ஒருவாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதைவிட, என்ரை தியாகத்தாலை மற்றவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்தால் அந்த நிம்மதியே வாழ்க்கை பூராக போதுமாக இருக்கும் தானே?" என்று சொன்னபோது அவள் எழுந்தாள். அவளின் பெருமூச்சொன்று அவனை சுட்டுக் கொண்டது.

"கணேஷ்! உங்கடை அக்கா என்னை விடவும் அதிஷ்டக்காரிதான். ஏனென்றால் அக்காவுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க நீங்களாவது இருந்தீங்கள். ஆனால், எனக்கு அப்பிடி ஒரு தம்பிகூட இல்லையே! என்ன செய்யிறது? திருமணங்கள் எல்லாம் எங்களின்ரை கையிலையே இருக்கு? அது சொர்க்கத்திலை தானாமே நிச்சயிக்கப்படுகின்றது?" என்றாள் விரக்தியாக. அழுகைய்ய அடக்க மிகவும் கஷ்டப்படுகிறாள் என்று தெரிந்தது. அவன் நிலையும் அதுதானே.

"இல்லை, அமுதா இல்லை, இல்லை. திருமணங்கள் சொர்க்கத்திலை நிச்சயிக்கப்படுகிறேல்லை. ரொக்கத்திலைதான் நிச்சயிக்கப்படுகின்றன!" என்று அவன் சொன்னபோது வார்த்தைகள் தளதளத்தன.

---

# தப்புக்கணக்கு

பெயர்: லாவண்யா
வயது: 22
நிறம்: சிவப்பு
சராசரிக்கும் சற்று அதிகமான உயரம்.

இவளைச் சென்ற மாதம் இருபத்தாறாம் திகதியிலிருந்து, தன் அண்ணன் மகன் முரளிதரன் கையில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டுமென்று, அத்தை சரோஜா துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறாள்.

போன இருபத்தாறு அன்றுதான் முரளி, பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் ஒரு பிஸ்கட் கம்பெனியின் கிளை



**எஸ். அன்னபூரணி**

நிறுவனத்தில் பொது மேலாளராக வேலையில் அமர்ந்தான். நல்ல படிப்பு. நல்ல வேலை. நல்ல சம்பளம். லாவண்யா மட்டும் எதில் குறைச்சலாம்? கண்ணைப் பறிக்கும் அழகு. புத்திசாலித்தனம். இவளை வேண்டாமென்று மறுக்க முரளிதரனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?

முரளி லாவண்யாவிடம் மிகவும் அன்போடுதான் நடந்து கொள்கிறான். லாவண்யாவும் முரளி மீது உயிரையே வைத்திருக்கிறாள். இவர்கள் கல்யாணம் சிக்கலின்றி நடந்துவிடும்.

ஆனால், கோமதி- அவள் பெண் சாந்தினி...

சாந்தினியும் நல்ல அழகிதான். புத்திசாலிதான். கோமதி அப்படியொன்றும் வசதியானவள் அல்ல. சரோஜாவை விடவே சற்று வசதி குறைவானவள்தான். சரோஜாவின் தங்கைதான் கோமதி.

பதினைந்து வருடங்களுக்கு முன், ஒரு விபத்தில் தாய், தந்தையரைப் பறிகொடுத்துவிட்டு அநாதையாக நின்ற பன்னிரண்டு வயது முரளியை முதலில் கோமதிதான் எடுத்து வளர்ப்பதாக இருந்தது. ஆனால், சரோஜாவின் குறுக்குப் புத்தி வேலை செய்தது.

முரளி கெட்டிக்காரப் பையன். கொஞ்சம் ஆதரவு காட்டினால் மளமளவென்று முன்னுக்கு வந்துவிடுவான். தனக்கோ அதிகம் வசதி கிடையாது. நாளைக்கு லாவண்யாவை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுப்பதென்றால் ஐந்தாறு இலட்சம் ரூபாயாவது வேண்டாமா? அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது?

முரளியை, தானே வளர்ப்பதாக முந்திக்கொண்டாள். அதன்படியே அவனை நன்றாகப் படிக்கவும் வைத்தாள். நல்ல வேலை அதுவாகத் தேடி வந்தது. ஒரு சதம் செலவில்லாமல் லாவண்யாவை அவனுக்குக் கட்டி வைத்துவிடலாம்.

பாவம் கோமதி! தன் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி, கல்யாணச் செலவுகளுக்கும் பணம் புரட்ட முடியாமல் திண்டாடப் போகிறாள்!

மாலையில் முரளி அலுவலகத்திலிருந்து திரும்பியதும், அவனிடம் இது பற்றிப் பேச்செடுத்தாள் சரோஜா.

"அத்தை...! என்ன சொல்றீங்க? நினைவு தெரிஞ்ச நாளா ஒரே வீட்டில் அவளும் நானும் ஒண்ணா வளர்ந்திருக்கோம். அப்படியிருக்க, அவளை மனைவியா நினைச்சுப் பார்க்கக்கூட என்னால் முடியுமான்னு நீங்க யோசிக்கலையா? லாவண்யாவை என் உயிருக்குயிரான தங்கையாகத்தான் நான் நேசிக்கிறேன். தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க! நான் சாந்தினியைக் கல்யாணம் பண்ணிக்கிறதாய் கோமதி அத்தைக்கு வாக்குக் கொடுத்திருக்கேன். பெரிய மனசு பண்ணி எங்களை ஒண்ணு சேர்த்து வெச்சு, ஆசிர்வாதம் பண்ணுங்க!" என்று காலில் விழுந்தான் முரளி.

விக்கித்துப்போய் நின்றாள் சரோஜா!



# எழுந்து நட மகளே

துருவது ரஜீகன்

தாலாட்டும் போதே
வீரத்தை ஊட்டும்
தாய் அவள்!

நிலாவை பிடித்துத் தருவதாக
அவள் பொய் சொல்வதில்லை!

பேய் வரும் என்று
அவள் மிரட்டுவதில்லை!

இருளைக் காட்டி
எச்சரிப்பதில்லை!

கண்ணுறங்கவைப்பதற்காக
மண்ணுக்குள் உறங்கவேண்டிய
மூடக் கதைகளை
மூளைக்குள் திணிப்பதில்லை!

அழுவதை நிறுத்துவதற்காக
வேப்பமர பிசாசை
வீட்டுக்கு அழைப்பதில்லை!

தாலாட்டும்போதே
வீரத்தை ஊட்டும்
தாய் அவள்!

"செங்கரும்பே! சேதி
சொல்லு!
கொஞ்சுமொழி பேசி
வெல்லு!

செந்தமிழே உனது
மொழி!
சொந்த மண்ணே உனது
விழி!

நம் தமிழை முட்டவரும்
கொடும்பகையை
மோதி மிதி!

மந்திரத்தால் மாங்காய்
விழாது மகளே!
அறிவு எனும் அஸ்திரத்தால்
எதுவும் விழும்!

உன்னை நீ நம்பு
உலகம் உன் கையில்!

எதையும் இரந்து கேட்காதே!
உதையும் வாங்கி கிடக்காதே!

நான் என்ற மமதை
கொள்ளாதே!
நாம் என்று மனதை
விரிவாக்கு!

ஒரு கை வீச்சில்
ஓசை எழாது!
இரு கை எனவே
கூடி வாழ்!

ஆராய்ந்து பார்த்து
செயலில் இறங்கு!
ஊரோடு நின்று
உரத்தை போடு!

பகையைத் தேடி
நீ போகாதே!

இலக்கியநயம்

தேடி வந்தால்
நீ விடாதே!

தடைகளை உடைக்க
தயக்கம் கொள்ளாதே!

புழுத்துப்போன கொள்கைகளை
ஒழித்துக்கட்ட பின் நிற்காதே!

மண்ணில் வாழ வேண்டுமென்றால்
மனதில் உறுதி வேண்டுமடி!

பெண் என்றால் பேதை அல்ல
பூமியில் யாருக்கும் தாழ்வு அல்ல!

அன்புக்கு அடங்கி நட
வம்புக்கு வாலை அறு!

ஆணுக்கு மதிப்பு கொடு
அவனிடம் மதிப்பு பெறு!
மிதிக்க நினைப்போரை
மதிக்க மறு!

தாழ்வு உணர்ச்சி தகர்
யாவருக்கும் நீயும் நிகர்!

வாழ்க்கையை ரசி
வேண்டாதவற்றை நசி!

நிமிர்ந்து நட மகளே
குனிவது கோழைக்குணம்!

துணி நில் மகளே
துஞ்சுவது கூனல் குணம்!

அதிகம் பேசாதே!
அளந்து பேசு!

பெருமை பேசாதே
பெருமையாய் பேசப்படு!

கர்வம் வெறு
கௌரவம் பெறு!

காதல் கொள்
கண்ணியம் பேண்!

தீயோரை வெறு
நல்லோரை பெறு!

தெளிந்து நட்பு கொள்
துணிந்து துணை நில்!

பதவிகள் தேடாதே
பதவி உனை தேடட்டும்!

புகழ் தேடாதே
புகழ் உனை தேடட்டும்!

எழுந்து நட மகளே
எதிர்காலம் உனதே!

நிமிர்ந்து நட மகளே
நிலம் உன் வசமே!

வைரம் என ஜொலிப்பாய்
வானம் உன் வசமே!
வீரம் நீ விதைப்பாய்
காலம் உன் வசமே!

எழுந்து நட மகளே
எதிர்காலம் உனதே!

தெளிந்த நீர்போல
நிகழ்காலம் இருக்காது!
இருட்டில் ஒளிதேடி
எதிர்காலம் இனிதாக்கு!

நெருப்பாறு என்றாலும்
நீந்திக் கடந்தால்தான்
வருங்காலம் என்றாலும்
வசந்தம் என்றாகும்!

கரையில் காத்திருந்தால்
பெரு மீன் சிக்காது!
கடலில் இறங்கி
வலைவீசி போராடு!

வாழ்க்கையும் மீன்தான்
போராடாமல் வாழ்க்கையில்லை!
வாழ்வதற்காக போராடு
வளர்வதற்காக போராடு!

எழுந்து நட மகளே
எதிர்காலம் உனதே!

பெண்ணாகப் பிறப்பது
பாவம் என்று
பேடிகள் சொன்னது
பொய்யாகும் காலத்தில்
பிறந்ததுக்காய் பெருமைப்படு!

பெண்புத்தி பின்புத்தி
என்றவர் புத்தியில்
இருந்தது மண் என்று
தெரிந்துவிட்ட காலத்தில்
பிறந்ததுக்காய் பெருமைப்படு!

பெண் என்றால்
தெய்வம் என்பர்
வெறும் போலி மனிதர்!
நம்பாதே! தெய்வத்தையே
தின்பவர்கள் அவர்கள்!

பெண் என்றால்
மனுஷி!
பெண் என்றால்
சக மனுஷி!
என்பாரை நம்பு!

தெய்வம் தெய்வமாக
இருந்துவிட்டுப் போகட்டும்,
நாம் மனிதராகவே
என்றும் இருப்போம்
என்று நீ கூறு!

தாயவள் பாடிய
தாலாட்டுப் பாடலுக்கு
பாரதியின் பாடல்தான்
ஆரம்பப் பாடம்!

இதோ அப்பாடல்:

"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா
மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்கள் அறமடா
கைகள் கோர்த்து களித்து நின்றாடுவோம்!"

ஸ்போர்ட்ஸ்

## கொமன்வெல்த்தில் கிரிக்கெட்

கொமன்வெல்த் போட்டிகளில் இந்த முறைதான் முதற்தடவையாக கிரிக்கெட் விளையாட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் இந்திய அணி, சிறு பிரச்சனை ஒன்றை எதிர்நோக்குகிறது.

அதாவது, கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டி வருகின்ற செப்டெம்பர் மாதம் 11ம் திகதி முதல் 21ம் திகதி வரை கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது. இதே வேளையில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் கலந்துகொள்ளும் சஹாரா கோப்பைப் போட்டிகள் வருகின்ற செப்டெம்பர் மாதம் 12ம் திகதி முதல் 21ம் திகதி வரை கனடா நாட்டின் டொரண்டோவிலும் நடக்கவுள்ளன.



எனவே இந்திய அணி சஹாரா கோப்பைப் போட்டிகளில் கலந்து கொண்டு, கொமன்வெல்த் போட்டிக்கு அஜய் ஜடேஜா தலைமையில் 2ம் தர அணியை அனுப்ப முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக இந்திய ஒலிம்பிக் சங்கத்திற்கும், இந்திய கிரிக்கெட் கவுன்ஸிலுக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த முரண்பாட்டைத் தீர்த்து வைக்கும்படி சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜே.வை.லீலே கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில்:

'கனடா நாட்டில் உள்ள டொரண்டோ நகரில் சஹாரா கோப்பைப் போட்டிகள், செப்டெம்பர் 12-20 வரை நடக்கின்றன. கொமன்வெல்த் போட்டிகள் செப்டெம்பர் 11-21 வரை நடக்கின்றன. இவ்வாறு ஒரே நேரத்தில் இரு போட்டிகளும் நடப்பதால் வீரர்களை அனுப்பி வைப்பதில் கருத்து வேறுபாடு எழுந்துள்ளது.

இந்தப் பிரச்சனையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தீர்த்து வைக்க வேண்டும். கொமன்வெல்த் போட்டி சர்வதேச தரம் வாய்ந்ததா? சஹாரா கோப்பை கிரிக்கெட், கொமன்வெல்த் கிரிக்கெட் இவை இரண்டிலும் எது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். இது குறித்து தங்களின் முடிவை எமக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்!'

என்று எழுதியுள்ளார்.

இந்நேரத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர், கொமன்வெல்த் போட்டிக்கு வலுவான இந்திய அணியை அனுப்பி வைக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார். ஏனெனில் அவுஸ்திரேலியா அணி இடம் பெற்றுள்ள பிரிவில் அன்டிகுவா, கனடா ஆகிய பலமற்ற அணிகளுடன் இந்தியாவும் உள்ளது.

கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டிக்கான அணிகள் அனைத்தும் பலமற்ற அணிகளாகவே இருக்கின்றன. அவுஸ்திரேலிய அணி மட்டுமே பலம் வாய்ந்த அணியாக இருக்கிறது. இங்கிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய அணிகளும் 2ம் தரம் வாய்ந்த அணிகளையே கொமன்வெல்த் போட்டிக்கு அனுப்பவுள்ளன.

## பயிற்சியாளர் நீக்கம்

மேற்கிந்தியத் தீவு அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான கோர்டன் கிரீனிட்ஜ், பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பங்களாதேஷ் அணிக்கு பயிற்சியாளராக கிறீனிட்ஜ் நியமிக்கப்பட்டார். இருந்த போதும், அந்த அணியின் தரம் எதுவும் இதுவரை உயராததால் நீக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அந்த நாட்டில் நடந்த சுதந்திரதின கோப்பைப் போட்டியில் பங்களாதேஷ் ஒரு வெற்றியைக் கூடப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக சுப்பர் மாக்ஸ் 8

8 வீரர்கள் பங்குபற்றும் 'உலக சுப்பர் மாக்ஸ் 8' கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. ஒக்டோபர் 14ம் திகதி முதல் 16ம் திகதி வரை 3 நாட்கள் நடக்கும் இப்போட்டிகள் யாவும் பேர்த் நகரிலேயே இடம்பெறுகின்றன.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் சச்சின் டெண்டுல்கர், முகமட் அஸாருதீன், சௌரவ் கங்குலி, ஜவகல் ஸ்ரீநாத் ஆகியோரும் பங்கு பெறுவர்கள் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அண்மைக் காலமாக அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டிகளில் டெண்டுல்கரின் ஆட்டம் சிறப்பாக இருப்பதால், அவுஸ்திரேலிய இரசிகர்கள் டெண்டுல்கர் தமது மண்ணில் ஆட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இதைத் தொடர்ந்தே இவர்கள் 'சுப்பர் 8' போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ஒரு திருத்தம்

சென்றவாரம் சிந்தியா பதிலில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி உற்சவம் செப்டம்பர் 11ல் நிறைவுபெறும் என்று கூறியதுதப்பு. செப்டம்பர் 7ம் திகதிதான் நிறைவுபெறுகிறது. 5ம் திகதி தேர். 6ம் திகதி தீர்த்தம். 7ம் திகதி மௌனத் திருவிழா. தவறுக்கு வருந்துகிறேன்.

-சிந்தியா.

## சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா! சிலருக்கு தொட்டுத் தொட்டுப் பேசும் பழக்கம் இருக்கிறது. இது இயல்பானதா? அல்லது செயற்கையானதா?**

செல்வி அ. சிவதாரணி, நுவரெலியா.

சமீபத்தில் வெளியான புத்தகம் ஒன்றில் கூறியிருப்பதைப் பாருங்கள்:

"வாழ்க்கையில் உயர நினைக்கும் மனிதனுக்கு ஒரு நாளில் குறைந்தபட்சம் பன்னிரண்டு அன்பான தழுவல்கள் தேவை. அது அவன்(ள்) குழந்தை, அம்மா, நண்பன்(பி), காதலி, காதலன், மனைவி, கணவன் என்று யாரிடமிருந்து வேண்டுமானாலும் இருக்கலாம்.

வாழ்க்கை இப்படியே இருந்தால் போதும் என்று நினைப்பவனுக்கு ஒரு நாளில் குறைந்தது எட்டுத் தழுவல்கள் தேவை.

உயிர் வாழ்ந்தாலே போதும் என்ற மனநிலையில் இருப்பவனுக்குக்கூட ஒரு நாளில் நான்கு தழுவல்கள் தேவைப்படுகின்றன!"

◆✻

**★ விடுகதை ஒன்று கூறமுடியுமா?**

ஏ. சிநேகன், தெல்தோட்டை.

"என்னதான் இடித்தாலும் இனிய நாதத்தை எடுத்துத் தருவாளே?"

"மத்தளம்!"

◆✻

**★ ஞாபக சக்தியை அதிகப்படுத்த மாத்திரை இருக்கிறதா?**

எஸ். சிறிகுமார், மட்டக்களப்பு.

இப்போதுதானே 'வயாக்ரா'வையே கண்டுபிடித்திருக்கிறார்கள். இனி எதற்கு வேண்டுமானாலும் மாத்திரை கண்டுபிடித்து விடுவார்கள். ஞாபகமறதிக்கும் மாத்திரைகள் உண்டு.

டாக்டரிடம் சென்றார் ஒருத்தர். அவருக்கு ஞாபகமறதி அதிகம்.

"டாக்டர் எனக்கு எதையும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் மறந்து போய்விடுகிறேன். நீங்கள்தான் ஏதாவது மருந்து கொடுத்து சரி பண்ண வேண்டும்!" என்றார்.

"சரி, உங்களுக்கு எத்தனை ந[illegible] இந்தக் குறைபாடு இருக்கிறது?" என்று கேட்டார் டாக்டர்.

உடனே அவர் என்ன கூறினார் தெரியுமா?

"எது, எத்தனை நாளா இருக்கிறது என்று கேட்கிறீர்கள்!"

◆✻

**★ சிந்தியா! ஆண்டவன் ஏன் கெட்டவர்களுக்கு கருணை காட்டுகிறான்?**

வி. பத்மராஜா, யாழ்ப்பாணம்.

வேகமாகச் சென்ற பஸ் ஒன்று ஆற்றில் விழுந்து மூழ்கிப்போனது. அதில் பயணம் செய்த அனைவரும் பலியானார்கள். அவர்களில் தெய்வீகப் பிரசாரம் செய்த பெரியவர் ஒருவரும் இருந்தார்.

அந்தப் பஸ்சை செலுத்திய சாரதி சொர்க்கத்துக்கும், பெரியவர் நரகத்துக்கும் அனுப்பப்பட்டனர்.

பெரியவர் கடவுளிடம் முறையிட்டார்.

"கடவுளே! என்ன அக்கிரமம்? நான் காலம் பூராவும் மக்களுக்கு தெய்வீக பிரசாரம் செய்து கொண்டிருக்கிறேன். என்னால்தான் பலபேர் உங்களை நினைக்கிறார்கள். அப்படி இருக்கும்போது என்னை நரகத்துக்கும் மது போதையில் பஸ்சை ஓட்டிய சாரதியை சொர்க்கத்துக்கும் அனுப்பியது நியாயமா?" என்று கேட்டார்.

அதற்கு கடவுள் சொன்னார்:

"நீங்கள் பிரசங்கம் பண்ணியபோது மக்கள் கவலையே இல்லாமல் கண்ணை மூடித் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அந்த சாரதி வேகமாக பஸ் ஓட்டும்போதெல்லாம் அத்தனைபேரும் என்னையே நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள். உங்களைவிட அந்த சாரதிதான் மக்களுக்கு அடிக்கடி என் ஞாபகத்தை உண்டாக்கியவர். அதனால்தான் இப்படிச் செய்தேன்!"

◆✻

**★ சிந்தியா! அழகாகத் திகழ ஒரு அழகுக் குறிப்புச் சொல்லுங்களேன்?**

பி. நித்தியா, கொழும்பு-13.

புன்னகை!

◆✻



சிம்ரான்

**★ இன்றையப் பிள்ளைகள் கெட்டுப்போக யார் காரணம்?**

பி. பௌசியா, கண்டி.

தந்தை மகனுக்கு உபதேசித்தார்:

"சிகரெட் உன் உடம்பைப் பாதிக்கும். உடனே நிறுத்து! நான் சொல்லுறதை கேட்காவிட்டாலும் உன் விரல் சொல்வதைக் கேள். விரலில் நிக்கோட்டினால் ஏற்படும் மஞ்சள் கறை இருக்கிறது! அது சரியடா, மகனே தினமும் உனக்கு எங்கிருந்து சிகரெட் கிடைக்கிறது?" என்றார்.

மகன் சொன்னான்:

"உங்கள் பொக்கற்றிலிருந்து தானப்பா எடுக்கிறேன்!"

◆✻

**★ அமெரிக்கத் தூதரகக் குண்டுவெடிப்புக்கள் பற்றி என்ன கூறுகிறீர்?**

கே. நிரோஷன், ஜா-எல.

வினை விதைத்தவர்கள் தினையா அறுக்க முடியும்? குண்டுகளை ஏற்றுமதி செய்து நாடுகளுக்குள் குழப்பம் செய்த பெருமை அமெரிக்காவையே சேரும். அதே குண்டுகள் இப்போது அமெரிக்காவை நோக்கித் திரும்பியுள்ளன.

◆✻

**★ மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைப்பை தமிழ்க் கட்சிகள் ஏன் கண்டிக்கவில்லை?**

கி. ரமணன், வவுனியா.

யாழ் மாநகர முதல்வர் சரோஜினி கொலையை ஜனநாயகப் படுகொலை என்று கண்டித்தன தமிழ்க் கட்சிகள். மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைப்பும் ஜனநாயகப் படுகொலைதானே? ஏன் கண்டிக்கவில்லை? என்ற கேள்வியையும் சேர்த்துக்கொள்க! மடியிலே கனம்!

◆✻

**★ புதிய தமிழ் ஒலிபரப்பு கேட்கிறீர்களா?**

சி. திருச்செல்வி, கொழும்பு-08.

கேட்கிறேன். வளரட்டும்! ஒரு சிறுகுறை. தொலைபேசி உரையாடல் ஒன்றில் (17.08.98) ஒரு நேயர் தான் நாத்திகராக இருந்து ஆத்திகராக மாறிவிட்டதாக கூறினார். உடனே பெண் அறிவிப்பாளர், "இப்போது திருந்தி விட்டீர்கள்!" என்று பாராட்டினார்.

ஆத்திகம், நாத்திகம் என்பது அவரவர் கொள்கைகள், நம்பிக்கைகள். நாத்திகம் என்பது கெட்ட காரியம் என்று நினைத்து விட்டார் அந்த அறிவிப்பாளர்.

அதில் வேடிக்கை என்னவென்றால், சில நிமிஷங்களின் பின்னர் அதே ஒலிபரப்பில் ஒரு பாடலில், பகுத்தறிவுப்படி சிந்திக்குமாறும், செயற்படுமாறும் கூறும் பாடல் ஒன்று ஒலிபரப்பானது! திட்டுவதற்கல்ல, திருந்தவே இதனைக் குறிப்பிடுகிறோம்!

◆✻



மோனல்-சிம்ரான்

**★ அழகிகளை நம்பலாமா?**

எம். ராமநாதன், மன்னார்.

நம்பலாம்! அழிகிகளையும், அழிஞர்களையும்தான் நம்பக்கூடாது!

**★ சிம்ரானின் சகோதரி நடிக்க வருகிறார் அல்லவோ? பெயர் என்ன? யாருக்கு போட்டி?**

கே. சனூஸ், புத்தளம்.

பெயர்: மோனல்! முதற் போட்டி முதற் பிறந்தவருடன் தான்!

◆✻

**★ சமீபத்தில் வெளியானதில் பார்க்கக்கூடிய படம்?**

க. ரஞ்சன், யாழ்ப்பாணம்.

உங்கள் பக்கமும் இப்போது மினி சினிமாவும் வீடியோவும் தூள் கிளப்புகின்றன. கொழும்பில் வெளியாக முன்னரே புதுத் தமிழ்ப் பட வீடியோக்கள் அங்கு வெளியாகின்றன! பார்க்கக்கூடிய படம்: 'உண்மை'! மம்முட்டி அருமை!

◆✻

# திருமறை தரும் பொது நெறி 23

# தவறுகளும் தண்டனைகளும்

இராஜகுமாரன்

ஆண்டவர் மோசேயிடம், இஸ்ரயேல் மக்களில் வயது முதிர்ந்த, அனுபவ சாலிகளும்அறிவாற்றலுடையவர்களுமான எழுபது பேரைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர்களைத் தெரிவு செய்தபின்னர் சந்திப்புக்கூடாரமான திரு உறைவிடத்துக்கு மோசே அழைத்துச் சென்றார். மோசேயின் பளுவைக் குறைப்பதற்காக அந்த எழுபது பேருக்கும் கர்த்தர் வலுவூட்டினார். மிகப்பெரும் கூட்டமான மக்களை வழிநடத்தும் பொறுப்பினை அவர்களும் ஏற்றனர்.

கர்த்தர் இஸ்ரயேல் மக்களுக்கு எவ்வளவு நலன்களைப் புரிந்தபோதிலும் அவர்கள் பூரணமான மனத்திருப்தியடையவில்லை. அவ்வப்போது முணுமுணுப்பு எழவே செய்தது. மக்களின் தவறுகளுக்கு ஆண்டவர் அவ்வப்போது தண்டனைகளையும் வழங்கவே செய்தார். அவ்வாறான தண்டனைகள் கிடைக்கும்போது மட்டும், "இனிமேல் தவறு செய்ய மாட்டோம்; ஆண்டவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டே நடப்போம்!" என்று பிரலாபிப்பார்கள். ஆனால் சிறிது நேரத்தில் மனமாற்றமடைந்து நெறிபிறழ்ந்து விடுகிறார்கள். மோசேக்கும் இதனால் பலத்த தாக்கங்கள் ஏற்பட்டன.

மன்னா என்ற அப்பத்தைப் புசித்து வந்த மக்களுக்கு அவ்வுணவு தெவிட்ட ஆரம்பித்தது. இதனால் இறைச்சி உணவு வேண்டும் என்று அவர்கள் மோசேயிடம் முறையிட்டு அழுது புலம்பினர். இத்தகைய [illegible]டுகளை அவதானித்த கர்த்தர் ஒரு பலத்த காற்றை வீசப்பண்ணினார். கடலிலிருந்து ஏராளமான காடைகளை அக்காற்று அடித்து வந்து இஸ்ரயேலர்கள் தங்கியிருந்த கூடாரங்களைச் சுற்றி வீழ்த்தியது. மக்கள் அக்காடைகளை எடுத்து வந்து சமைத்து வயிறாற உண்டனர். பேராசை பிடித்த பலர் காடைகளை அளவுக்கு மீறிச் சேர்த்து வைத்து ஆண்டவரின் தண்டனைக்குள்ளாயினர்.

## உளவாளிகள்

இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் கொடுப்பதாக வாக்களித்த கானான் தேசத்துக்கு அவர்கள் செல்வதற்கு முன்னர் அந்த நாட்டை உளவு பார்த்துவர உளவாளிகளை அனுப்பி வைக்குமாறு ஆண்டவர் மோசேயிடம் கூறினார். அப்போது கானான் தேசத்துக்கு தெற்கு எல்லையாக இருந்த காதேசு என்ற இடத்தில் இஸ்ரயேல் மக்கள் கூடாரமிட்டிருந்தனர்.

மோசே இஸ்ரயேல் மக்களில் உள்ள பன்னிரண்டு குலத்திலிருந்தும் ஒவ்வொரு குலத்துக்கு ஒருவராக பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்தார். கானான் தேசத்தின் வளம், அங்கு குடியிருக்கும் மக்களின் தன்மை, அவர்களுடைய வாழ்க்கை முறை, பாதுகாப்பு ஆகிய பல அம்சங்களையும் ஆய்ந்தறிந்து வருமாறு கேட்டுக்கொண்டார். அங்கு விளையும் விளைபொருட்களில் சிலவற்றையும் தம்முடன் எடுத்து வருமாறு கூறி அனுப்பிவைத்தார்.

வேவு பார்க்கச் சென்ற பன்னிரண்டு பேரும் நாற்பது நாட்களில் திரும்பி வந்தனர். வரும்போது கானான் நாட்டில் விளைந்த திராட்சை மற்றும் மாதுளம் பழங்கள் ஆகியவற்றையும் தம்முடன் எடுத்து வந்தனர்.

கானான் தேசத்தைப் பற்றிய தகவல்களை மக்களும் இவர்களிடம் கேட்டறிய பெரும் ஆவலாக இருந்தனர். மோசேயும் விவரமறிய அவாக் கொண்டவராகவிருந்தார். ஆனால் அப்பன்னிரண்டு பேரும் ஒரே கருத்தைத் தெரிவிக்காமல், ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்துக்களையே கூறி அனைவரையும் குழப்பமடைய வைத்தனர்.

வேவு பார்க்கச் சென்றவர்கள் கூறிய கருத்துக்கள் பெரும்பாலும் இஸ்ரயேல் மக்களை அச்சமடைய வைத்தன. கானான் தேசத்தில் தாங்கள் கண்ட மக்கள் பெரும் இராட்சதர்கள் போல் தென்பட்டதாகக் கூறினர். அவர்களுடைய கோட்டை கொத்தளங்கள் மிகப் பிரமாண்டமாகக் காட்சி தருவதாகவும், மனிதர்கள் இராட்சதர்கள் போல் காணப்படுவதாகவும் வர்ணித்தார்கள். அத்தகைய மனிதர்களை வென்று, அந்நாட்டில் போய்க்குடியேறுவது நடை முறைக்குச் சாத்தியமில்லை என்றும் சிலர் கூறத் தலைப்பட்டனர்.

நாட்டை வேவு பார்த்தவர்கள் தங்கள் கண்களால் கண்டவற்றைக் கூறியதைக் கேட்ட மக்கள் விசனமடைந்தனர். மோசே தங்களை மோசம் பண்ணிவிட்டார் என்று கூக்குரலிட்டு அழுது புரண்டனர்.

ஆண்டவரின் அநுக்கிரகம் தங்கள் பக்கம் இருக்கும்போது அச்சமெதுவுமின்றி இருக்குமாறு கூறப்பட்ட ஆறுதல் வார்த்தைகள் எதுவும் அவர்களுடைய காதுகளில் ஏறவேயில்லை.

## குழப்பமடைந்த மக்கள்

உளவாளிகள் பன்னிரண்டு பேரும் இரு பிரிவாகப் பிரிந்து கொண்டு சண்டைபோட ஆரம்பித்தனர். கானான் தேசத்துக்குப் போவதற்குப் பயந்தவர்கள் ஒன்று சேர்ந்து, மீண்டும் எகிப்துக்குப் போய்விடலாம் என்று திட்டமிட்டனர். அவர்களுக்காக ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மோசே கர்த்தரைத் துதித்து தனக்கு நல்ல வழி காட்டுமாறு வேண்டிக்கொண்டார்.

அதேசமயம் சந்திப்புக் கூடாரத்தின் மேல் மிகப் பிரகாசமான ஒளி தோன்றியது. அதனைக் கண்டதும் அங்கு பூரண அமைதி நிலவியது.

"கர்த்தரே! தங்களின் பெருமையை அறியாமல் தங்களை எப்போதும் நிந்திக்கும் இம்மக்களை மன்னித்தருளும்!"

இவ்வாறு மோசே வேண்டிக் கொண்டதும்,

"மோசே! நான் இவர்களை மன்னித்து விடுகிறேன். ஆனால் எமக்கும் எம்முடைய அடியானாகிய உமக்கும் மதிப்பளிக்காதவர்களை நாம் வாக்களித்துள்ள கானான் நாட்டுக்குள் செல்ல விடமாட்டேன். விசுவாசமுள்ள மனிதர்கள் மட்டுமே- தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் கானான் தேசத்தைச் சென்றடைவார்கள்!" என்று கூறி அருளினார்.

## தண்டனை

மோசே விசுவாசிகளனைவரையும் தனது பக்கத்தில் வந்து கூடுமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவர்கள் ஒன்று கூடினார்கள். மோசேயைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர். மோசே மீது வசை பாடுவதையே ஆரம்பத்திலிருந்து தமது குறிக்கோளாகக் கொண்ட அதிருப்தியாளர்கள், மோசேயை மீண்டும் தூஷிக்க ஆரம்பித்தனர்.



"எங்களுக்கும் அண்டவருடைய கடாட்சம் இருக்கிறது. ஆனால் நீர் மட்டும் உயர்ந்தவராக ஏன் காட்டிக் கொள்ள முனைகிறீர்?" என்று மோசே மீது பாய்ந்தனர்.

சாந்த சொரூபியான மோசே மறு வார்த்தை எதுவும் பேசாமல் கர்த்தரையே துதித்தார். அப்போது ஒரு பெரும் இரைச்சலுடன் பூமி அதிர்ந்தது. அதிருப்தியாளர்கள். அனைவரும் மடிந்தனர். தீப்பிளம்புகளும் எழுந்து எங்கும் பரவின.

எஞ்சியிருந்த இஸ்ரயேல் மக்கள் கூட்டம் மோசே, ஆரோன் ஆகியோரின் வழி நடத்தலில் பல இடங்களையும் தாண்டிச் சென்றது. ஆங்காங்கே ஏற்பட்ட தடங்கல்களும் ஆண்டவரின் கிருபையால் அகன்றன. இருப்பினும் அதிருப்தியாளர்களின் கூக்குரல்களை அறவே அடக்கி ஒடுக்க முடியாதிருந்தது. ஆண்டவரின் தண்டனைகள் அவர்களை அச்சுறுத்திய போதும், அடிப்படையிலேயே துர்க்குணம் கொண்டவர்களை மாற்றித் தூய்மைப் படுத்துவது கடினமாகவே இருந்தது. இப்பாவிகளை மன்னித்தருளுமாறு ஆண்டவரிடம் மோசே விடுக்கும் வேண்டுகோள்களினால் இவர்களுக்கு மன்னிப்புக் கிடைத்தது.

•••

இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் காதேசிலிருந்து புறப்பட்டு ஓர் என்ற மலையடிவாரத்தை வந்தடைந்தது. அப்போது மோசேயிடம் ஆண்டவர் பேசினார். அவருடைய சகோதரரான ஆரோனையும் அவர் புதல்வரான எலயாசரையும் ஓர் மலை உச்சிக்கு அழைத்துவரும்படி ஆண்டவர் கூறினார்.

ஆண்டவரின் ஆணைப்படி மோசே, ஆரோனையும் அவர் மகன் எலயாசரையும் அழைத்துக்கொண்டு மலைமீது ஏறினார். மக்கள் கூட்டம் இம்மூவரும் மலையேறிச் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தது.

மலை உச்சியை அடைந்ததும் கர்த்தரின் கட்டளைப்படி ஆரோன் உடுத்தியிருந்த தலைமைக்குருவுக்கான ஆடைகள் களையப்பட்டு ஆரோனின் மகன் எலயேசருக்கு அணிவிக்கப்பட்டன. அம்மலை உச்சியிலேயே ஆரோனின் உயிர் பிரிந்தது. மலையிலிருந்து இறங்கிய மோசேயும் எலயேசரும், காத்திருந்த மக்களிடம் ஆரோன் இறந்த செய்தியைக் கூறினர். மக்களும் ஆரோனுக்காக முப்பது நாட்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (21) விடை:** 40 நாட்கள்

**பரிசு பெறுவோர்:**

1. **ஏ.கங்காதரன்,** 223, பிரதான வீதி, மாத்தறை.
2. **சி. சபேசன்,** கற்குழி, வவுனியா.
3. **ந.துசித்தனா,** E.12.சொய்சாபுர தொடர்மாடி வீடு, மொறட்டுவை.
4. **ரி.சிசிலியா,** அன்புவழிபுரம், திருகோணமலை.
5. **இரத்தினசிங்கம்-சுஜறூபி,** கன்னன்குடா, மட்டக்களப்பு.

**திருமறை 23 வினா:-** கானான் தேசத்தை வேவு பார்க்க எத்தனை பேர் சென்றனர்?

ஆகஸ்ட் 29க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 23– தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

## அன்பிற்கினிய தமிழ் மக்களே!
## நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்!
## நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
## ஆசிரமம் கட்ட ஆதரவு தாரீர்!



இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னாள் ஆயுதம் ஏந்திக்கொண்டு திரிந்த புரட்சிகர தமிழ்க் குழுவும், பின்னர் வாக்குகள் ஏந்திக்கொண்டு திரிந்த பாராளுமன்ற பாதையில் திரும்பிய தமிழ்க் குழுவுமான நாம் இன்று ஆசிரமம் அமைக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

முன்செய்த பாவங்களை போக்கவும், எம்மால் கொல்லப்பட்ட மனித ஜீவிகளது ஆவிகள் எம்மை துரத்தாது இருக்கவும் காவிக்குள் சரண்புக எண்ணியுள்ளோம்.

எங்கள் பாவங்களை உங்களின் பொருட்டு நாங்கள் செய்தோம்.

உங்கள் பிள்ளைகளை உங்களின் பொருட்டு நாங்கள் கொன்றோம்.

எங்கள் பின்னால் உங்கள் பிள்ளைகளின் அன்புக்குரிய ஆவிகள் அலைவதால் அவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு எங்களுக்கு நிதி உதவி செய்ய நீவிர் கடமைப்பட்டுள்ளீர்கள்.

ஆசிரமத்தினால் நீங்களும் பயன்பெறலாம்.

காலையில் பிரார்த்தனை. அதன்பின்னர் காலில் விழும் பயிற்சியும், கைகூப்பி தொழும் பயிற்சியும் கற்றுத்தர உத்தேசித்துள்ளோம்.

மன்றாட்டமான குரலில் கண்ணீர் வழிந்தோட தேவைகளைக்கூறி, சலுகைகளை பெறுவது எப்படி என்பதை இவற்றில் கைதேர்ந்த தலைவர்கள் மூலம் கற்றுத்தரவும் உத்தேசித்துள்ளோம்.

---

## முக்கிய அறிவித்தல்
### வயது வந்தோருக்கு மட்டும்



இனியும் எம் உறுப்பினர்களுக்கு பங்கம் நேர்ந்தால், இங்குள்ள தமிழர்களை வங்கக்கடலில் தூக்கிப் போட்டுவிடுவோம்.

எமது முகாம்கள், அலுவலகங்கள் அருகே வயது வந்தோர் மட்டுமே நடமாட அனுமதிக்கப்படுவர்.

30 வயதுக்குட்பட்ட தமிழர்கள் எமது முகாம் சுற்றாடலில் இருந்து 30 கிலோ மீட்டர் தள்ளியும், 40 வயதுக்குட்பட்டோர் 20 கிலோ மீட்டர் தள்ளியும், 60 வயது உடையோர் 10 கிலோ மீட்டர் தள்ளியும் நடமாடலாம்.

நடமாடும்போது கையில் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தை வைத்திருக்குமாறு தமிழர்கள் அனைவரையும் கண்டிப்பாக அன்புடன் மிரட்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு<br>
தமிழர்களுக்காக உயிரைக் கொடுக்கவும்<br>
சித்தமாகவுள்ள<br>
தமிழ் மக்களின் கட்சி

**எங்கள் உயிர் தமிழுக்கு!**
**உங்கள் உடல் மண்ணுக்கு!**

---



## இந்தியா 'ஆம்' என்றால்...

இந்தியாவிடம் மத்தியஸ்தம் கேட்ட தமிழ்க்கட்சிகள் அம்மையார் சீறியதும், வாலைச் சுருட்டிக் கொண்டன. ஒருவேளை தப்பித்தவறி மத்தியஸ்தம் செய்ய இந்தியா முன்வந்தால் என்னாகும்? கற்பனை பண்ணிப் பார்ப்போமோ?

### தமிழ்க் கட்சி: 1;

இந்தியாவிடம் மத்தியஸ்தம் கேட்டு முதன் முதலில் அறிக்கைவிட்ட கட்சி எமது கட்சியே.

ஏனைய கட்சிகள் இந்திய மத்தியஸ்தம் கேட்பதற்கு காரணமான கட்சியும் எமது கட்சிதான் ஆகவே, வலிமைமிகு பாரதம் எளிமைமிகு எமது கட்சிக்கே முன்னுரிமை தரவேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கிறோம்.

### தமிழ்க் கட்சி: 2;

மகா பாரத நாடே! மத்தியஸ்தம் செய்! என்று முதன் முதலில் நாம்தான் கேட்டோம். அறிக்கையும் வெளியிட்டோம். பத்திரிகைகள் செய்த சதியால் எங்கள் அறிக்கை பிந்தி வெளியானது, அதற்காக தாமே முந்திக்கூறியதாக சக கட்சி கூறுவதை வன்மையாகவும் உண்மையாகவும் கண்டிக்கிறோம்.

### தமிழ்க்கட்சி: 3;

பாரத மத்தியஸ்தம் தேவை என்பதை ஏனைய கட்சிகளுக்கு முன்னரே சிந்தித்த கட்சி நாம்தான். அதனை அறிக்கையாக கொடுக்காவிட்டாலும், அவ்வப்போது தூதரக அதிகாரிகளிடம் இறைஞ்சிக் கேட்டிருந்தோம். இதனை நாடு அறியாவிட்டாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவர். ஆகவே, இனிய பாரத நாடு எங்கள் கட்சிக்கே முன்னுரிமை தரவேண்டும் என்று பாதம் பணிந்து வேண்டுகிறோம்.

### தமிழ்க்கட்சி: 4;

மத்தியஸ்தம் என்று கேட்காமல் 'உதவுங்கள்' என்று நாம் சாணக்கியமாக கேட்டதால்தான் இந்தியா இன்று தலையை இட்டிருக்கிறது. எங்கள் கட்சிப் பிரமுகர்கள் உதவினால் போதும் என்று கூறியதன் அர்த்தம் மத்தியஸ்தம்தான் என்பதை மாண்புமிகு பிரதமர் அன்றே புரிந்துகொண்டார். தம்பிமாருக்கு எதை எப்படி நாசூக்காக வளைத்து, நெளித்து, சரித்து, நிமிர்த்தி பேசுவது என்று தெரியவில்லை. ஏதோ நாம் சாணக்கியமாக பேசி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வரச் செய்துவிட்டோம்.

### தமிழ்க்கட்சி: 5;

இந்தியா எள் என்றால் எண்ணெய்யாக மாறி நிற்கும் கட்சி எமது கட்சி. அமெரிக்கா, ஜப்பான், சீனா, மொசம்பியா, சாம்பியா போன்ற நாடுகள் தலையிடும் நிலை ஏற்படக்கூடாது என்பதால், எங்கள் இனம் அழிந்தாலும்சரி இந்தியாவுக்கு ஆதரவளிப்போம் என்று அன்றே சொன்ன எருமை... மன்னிக்கவும் அருமைக் கட்சி எங்கள் கட்சி. ஆதலால் இந்தியா எங்களையே முதன்மைப்படுத்த வேண்டும்.

காதிலை பூ கந்தசாமி



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS


பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

கிளை:

105, காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு 436331


# கலங்கரை விளக்கு




➡ கடலில் மரக்கலங்களிலும் கப்பல்களிலும் பயணம் செய்யும் கடலோடிகளுக்கு மிகவும் உதவி புரிபவை வெளிச்ச வீடுகளே. உலகின் பிரதான துறைமுகங்களிலும் கடற்கரைகளிலும் வெளிச்சவீடுகள் அமைக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து வீசப்படும் ஒளிக்கதிர்கள் கடலில் பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் வரை வீசப்படும். இரவு வேளைகளில் மரக்கலங்களில் பயணம் செய்வோருக்கு வழிகாட்டுகளாக வெளிச்ச வீடுகள் உதவுகின்றன.

எகிப்து நாட்டில்தான் முதன் முதலில் வெளிச்ச வீடுகள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அலக்ஸாண்டிரியா பட்டினத்தின் கடற்கரையோரமாக கிறிஸ்துவுக்கு முன் 283-248ம் ஆண்டுகளில் கட்டப்பட்ட வெளிச்ச வீடுதான் மிக உயரமான அமைப்பாகக் கருதப்படுகிறது. இதன் உயரம் 180 மீட்டராகும்.தொடர்ந்து 1500 ஆண்டுகள் வரை இவ்வெளிச்ச வீடு கப்பல்களுக்கு வழிகாட்டியாக இருந்து வந்துள்ளதாம். இவ்வமைப்பின் உச்சியில் மரக்கட்டைகளைப் போட்டு இரவுவேளைகளில் தீமூட்டி வெளிச்சம் உண்டாக்குவார்கள்.

♦ ஒரே நாட்டின் கடலோரங்களில் பல வெளிச்ச வீடுகள் இருந்தபோதிலும் அவை உமிழும் வெளிச்சத்தின் தன்மைகள் வேறுபட்டிருக்கும். கடலில் பயணம் செய்யும் கப்பல் அதிகாரிகளுக்கு வெளிச்ச வீடுகளிலிருந்து வெளியேறும் ஒளியின் தன்மையை அளந்து, குறிப்பிட்ட வெளிச்ச வீடு எந்த நாட்டில் எந்த இடத்திலுள்ளது என்பதைத் துல்லியமாகக் கண்டு பிடித்துவிட முடியும்.

படத்தில் காணப்படும் மேற்குக் குவோடி வெளிச்ச வீடு அமெரிக்காவிலுள்ள மெயினைச் சேர்ந்த லூபெக் கடற்கரையிலுள்ளது. சிவப்பு வர்ண வரிகள், பகலில் கடலில் பயணம் செய்வோருக்கு அடையாளம் காட்டப்படுவதற்காகப் பூசப்பட்டதாகும்.

# இணைப்பு



ஒரு கப்பல் சென்று கொண்டிருக்கும்போது இன்னொரு கப்பல் எதிரே வந்தால் ஒதுங்கி நின்று மற்றக் கப்பலுக்கு வழிவிடவும் ஒன்றைத் தாண்டி மற்றது செல்லவும் இடம் கிடைக்கிறது...

◄ ரோமச் சக்கரவர்த்தியான நீரோ என்பவன் கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டையும் ஆண்டு வந்தான். கி.பி. 67ம் ஆண்டு மன்னன் நீரோ ஒரு கனவு கண்டான்.

கிரேக்கத்தின் மத்திய கிழக்குப் பிரதேசத்திலிருந்த கோரிந்த் குடாக்கடலையும் சரோனிக் குடாக்கடலையும் ஒன்றிணைத்து விட்டால் பல நூற்றுக் கணக்கான மைல் தூரத்தைக் கப்பலில் சென்று கடக்காமல் தூரத்தைக்குறைத்து விடலாமே என்று சிந்தித்தான். இடையில் உயரமான குன்று ஒன்று தலை நிமிர்த்து நின்றது.

இக்குன்று- ஒரு குடாவிலிருந்து மற்றொரு குடாக்கடலின் இடையில் சுமார் 6 கிலோ மீட்டர் பரந்து கிடந்தது.

அக்காலத்தில் நீரோ மன்னன் கண்ட கனவு 1893ம் ஆண்டுதான் நனவானது. 1882ல் ஃபிரான்ஸ் நாட்டின் நிறுவனம் ஒன்று ஒரு கால்வாயை வெட்டுவதற்குத் தொடங்கியது. இறுதியில் 1893ம் ஆண்டு கிரேக்க அரசாங்கம் இக்கால்வாயைப் பூர்த்தி செய்தது. குன்றினை இருகூறாகப் பிளந்து அமைக்கப்பட்ட இக்கால்வாய் 'கோரிந்த் கால்வாய்' என்று அழைக்கப்படுகிறது.

இக்கால்வாய் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏதென்ஸ் நகரத்தில் வர்த்தகம் சிறப்புற்றது. மக்களின் பயணக் கஷ்டமும் நீங்கியது.

குறுகிய கோரிந்த் கால்வாயினூடாக கப்பல் ஒன்று செல்லும் காட்சி இது.

# ருசி



➡ கடச்சட எடுத்து வைத்திருக்கிறார்கள். மொற மொறப்பான சாப்பாடு. சீனர்களுக்கு பிடித்தமானது. நமக்கு மட்டும் பிடிக்காது. சுற்றி வளைப்பானேன், கரப்பான்பூச்சி பொரியல்தான் இங்கு காணப்படுகிறது.

நம்மூர் கடைகளில் இறால் பொரியல் வைத்திருப்பதுபோல சீனாவில் உள்ள கடைகளில் கரப்பான் பூச்சி பொரியல் இப்படி கடச்சட கமகமக்க வைத்து விற்பனை செய்கிறார்கள்.

# அபூர்வம்




◄ படத்தைப் பார்த்ததும் நாய்ப் பொம்மை என்றுதான் சொல்லத் தோன்றும். இது பொம்மை நாயல்ல; உயிருள்ள நாயின் படம்தான். மேற்கு இங்கிலாந்தில் லேக் (ஏரி) மாவட்டத்தில் 1800ம் ஆண்டுகளில் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த இனம் காணப்பட்ட மாநிலத்தின் பெயரைக் கொண்டே இந்நாய் 'லேக்லண்ட் டெரியர்' என்ற பெயரைப் பெறுகிறது.

இந்நாயின் முகம் நீள் சதுர வடிவமுடையது. நாடியில் தாடியும் வளர்ந்திருக்கும். சவாரிக்குதிரைகளுக்கு முதுகின் மீது தோலால் ஆசனம் அமைத்து அதன்மீது சவாரி செய்பவர் அமர்ந்திருப்பார். அந்த ஆசனத்தை குதிரையின் வயிற்றுடன் இணைத்து ஒரு பட்டியும் கட்டப்பட்டிருக்கும்.

இந்த 'லேக்லண்ட் டெரியர்' நாயின் முதுகிலும் வயிற்றிலும் இயற்கையாகவே, குதிரை மீது கட்டப்படும் ஆசனம்-பட்டி போன்ற அடையாளங்கள் தென்படுகின்றன. இது ஒரு பெரும் அதிசயம் என்று கருதப்படுகிறது.

இந்நாயின் உருவம் சிறிதுதான். எடையும் 7 முதல் 8 கிலோ வரை தானிருக்கும்.




# தங்கப் பதுமை

◄ அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற 11வது ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெற்றுக் கொடுத்தவர்களில் ஒருவர் தமயந்தி தர்ஷா.

இவர் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக வந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். பெண்கள் பிரிவில் சில வீராங்கனைகளுக்குப் பெரும் சவாலாக விளங்கியவர்களில் தர்ஷாவும் ஒருவர்.

ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் சாதனை படைத்த தமயந்தி தர்ஷாவுக்கு, வரும் செப்டெம்பர் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலக மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்ள ஆசிய அமெச்சூர் மெய்வல்லுநர் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்னொரு தங்க மங்கை சுசந்திகாவை அதியோயமாக மதிபோட்டு விரயமாக்கி விட்டார்கள். இந்த தங்க மங்கையை யாவது பங்கம் சொல்லாமல் இருப்பார்களாக.

ஒரு காலத்தில் சுசந்திகாவை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்த தொடர்பு சாதனங்கள் அவருக்கு நிகழ்ந்த அநீதிகளைமிட்டு காட்டிய அக்கறை போதுமானதல்ல.



# பிறந்தநாள் வாழ்த்து

**A.யசோதரன்**

**19.08.1998**

வத்தளையைச் சேர்ந்த எஸ்.ஏ.குமார்-ராஜேஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வன் **A. யசோதரன்** தனது 7வது பிறந்த நாளை 19.08.1998 புதன் கிழமை வத்தளையில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஷாமிலா அக்கா, சகுந்தலா அக்கா, மாமாமார்கள், மாமிமார்கள், பெரியம்மாமார்கள், தாத்தா, பாட்டி, விஜய் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளும் கற்று நலமுடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு 323657




[illegible]